விவேக போதினி.

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 1 } 1908-ஷு டிசம்பர் மீ {பகுதி 6

ஸனாதனதர்மத்தின் சிறப்பு

SANATANA DHARMA: ITS GREATNESS

நமது மதம் இவ்வளவு விரிவுடையது என்பது முன்னர் நாம் கூறியவைகளால் வாசிப்போருக்கு நன்றாகத் தெரியவந்திருக்கும். இப்பொழுது ஸனாதனதர்மத்தின் சிறப்பின் காரணங்களைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

விரிவாக இருத்தலே நமது மதத்திற்கு ஓர் முக்கியமான சிறப்பு. இவ்வாறு இருத்தலால்தான் ஸனாதனதர்மம் பின்னருசியை உடைய பலராலும் அங்கீகரிக்கப்படுகின்றது. விரிவால் நமது மதத்திற்கு உள்ள சிறப்பை உற்று நோக்குவோம். மதம் என்பது மனதைப்பற்றிய விஷயம், பொதுவிஷயமல்ல. கணிதம், பிரகிருதி சாஸ்திரம் முதலியன பொதுவிஷயங்கள். இவைகளின் உண்மைகள் எல்லோருக்கும் ஒரேமாதிரிதான், மாறுபாடாக விருப்பனவல்ல. ஆனால் ஸுகம் என்பது மனதைப்பற்றிய விஷயம். இது மனிதர்களது மனோதர்மத்திற்கேற்ப வெவ்வேறு விஷயங்கள் மூலமாக உண்டாவதாகத்தோற்றும். பலருக்குமுறையே சர்க்கரை, மாம்பழம், பட்டுத்துணி, நல்லபாட்டு, ரதோத்ஸவம், தர்மம்செய்தல் முதலியன ஸுகமாகக் காணப்படலாம். தனதுஸுக வஸ்து ஒன்றைத்தவிர மற்றவைகள் ஒருவனுக்கு துக்ககாரணமாகவும் தோன்றலாம். இதைப்போலவே மதவிஷயமும் மனோதர்மத்திற்கேற்ப மாறுதலுடையதாகஇருத்தல்வேண்டும். ஆகையால் 'கொக்குக்கு மூக்குக்குநேரேவழி' என்பதுபோல விருத்தி அடையும்படிசெய்ய ஒரேமார்க்கத்தை உடைய மதம் ஒன்று எவ்வளவு சிறந்ததாக விருப்பினும், பொதுவாகப் பலருக்கு உபயோகப்படமாட்டாது. அப்படி ஒருமதம் பிரயோசனப்படவேண்டுமாகில் அது ஜனங்கள் மனோதர்மத்திற்கேற்ப அநேக பாகங்களை உடைத்தாயிருத்தல் வேண்டும். இவ்வாறு இல்லாமல் அது மேலான பாகம் மாத்திரம் உடைத்தாயிருக்குமாகில் ஸாதாரண ஜனங்களின் கதி என்ன? அவர்கள் மேலான நிலைக்குப் போக வழி இல்லாமல் கதியற்று கஷ்டப்படுவார்கள்; அல்லது உண்மையில் மேலான நிலையை அடையாமலிருக்கும்பொழுதே தம் அறியாமையால் தாம் அந்த நிலையை அடைந்துவிட்டதாய் வீணாகப் பெருமைபாராட்டி அதோகதியை அடைவார்கள். ஆகவே மிக விரிந்ததாகவும் அநேக பாகங்களை உடையதாகவும் ஓர் மதம் இருந்தால்தான் அதை அநேகர் பின்பற்றி ஸுகிப்பர். இம்

மாதிரி பலர் பின்பற்றி மேல்நிலையை அடைந்து உய்வதற்கு ஸனாதன தர்மம் தனது விரிவால் இடங்கொடுப்பதுவே அதன் சிறப்பிற்கு முதலாவது காரணம்.

இவ்வாறு பலவாக இருக்கும் ஸனாதனதர்மத்தை சின்னாபின்னமாகப் போகவிடாமல் ஓர் தனி மதமாகச் செய்திருப்பது எது என்ற சங்கை நமக்குப் பிறக்கலாம். பலவாக இருக்கும் பாகங்களுக்குப் பொதுவான விஷயங்கள் இன்னவை என்றும், இப்பாகங்களின் உண்மை நோக்கம் இன்னது என்றும், இவைகள் ஒருவன் அபிவிருத்திக்கு அவசியம் என்றும், சிறந்த நிலையின் ஸ்வரூபம் இன்னதென்றும் வெளிப்படுத்தும் ஓர் ரகஸிய சாஸ்திரம் ஸனாதனதர்மத்துள் இருக்கின்றது. இதற்கே வேதாந்த சாஸ்திரம் என்று பெயர். இந்த சாஸ்திரத்தின் வலிமையால்தான் ஸனாதனதர்மத்தின் பாகங்கள் தத்தமக்குத் தக்க விடங்களில் நிலைபெற்று மாறாது நம் மதத்தைப் பின்பற்றுபவரை படிப்படியாக மேலான நிலைக்குக்கொண்டுவருகின்றன. இதனால்தான் ஸனாதனதர்மத்தின் பாகங்களுக்குள் ஓர்விதப் பொருத்தம் உண்டாக அவைகள் ஒற்றுமையாக தொழிற்பட்டு ஸனாதனதர்மத்தை ஒரு தனி மதமாகச் செய்கின்றன. (இவ்வேதாந்த சாஸ்திரத்தின் மேன்மையை பின்னர் தகுந்தவிடத்தில் நன்கு விவரிப்போம்). இம்மாதிரியான ஒரு சிறந்த சாஸ்திரத்தால் ஒற்றுமைபட்டு ஓங்கி நிற்றல் இம்மதத்தின் சிறப்பிற்கு இரண்டாவது காரணம்.

அநேக பாகங்களையும், அவைகளின் ஸ்வரூபம் நோக்கம் இவைகளைக் காட்டும் சாஸ்திரத்தையும் உடைத்தாயிருத்தலால் நமது மதத்தில், தன்னைப் பின்பற்றுவோரை எளிதில் மேலான நிலைக்குக்கொண்டுவரும் புதியவழி ஒன்று காணப்படுகின்றது. இது வேதாந்த சாஸ்திரத்தின் வலிமையாலே நிலைப்பெற்றது என்று சொல்லவேண்டும். இந்த வழி எக்காலத்திலும் எல்லோராலும் மிகுந்த ஆராய்ச்சியின் பேரில் நன்குமதிக்கத் தக்கதாக உள்ளது. இந்த வழியின் சிறப்பால் ஒருவன் அதிகக் கஷ்டப்படாமலே தன்னை அறியாது நாளடைவில் படிப்படியாகத் தேர்ச்சி அடைந்து வருகின்றான். இந்தவழி ஸனாதனதர்மம் ஒன்றிற்கே சிறப்பானது. உலகில் உள்ள மற்றைய மதங்களிலோ எல்லாப் பாகங்களும் தெளிவாகக் காணப்படவில்லை. அவைகளை நிலைநிறுத்தினோரது அக்கரைக்குறைவினாலோ, அவைகளைப் பின்பற்றுவோரது அக்கரைக் குறைவினாலோ சிலபாகங்கள் அவைகளில் காணாமற்போய் விட்டன. ஆகையால் நாம் முன் குறிப்பித்த வழி மற்றைய மதங்களில் இருக்க இடமில்லை. இம்மாதிரியான ஸ்திரமாயிருக்கும் சிறந்த வழியை உடைத்தாயிருத்தலே நமது மதத்தின் சிறப்பிற்கு மூன்றாவதாயும் முக்கியமாயும் இருக்கும் காரணம்.

ஸனாதனதர்மத்திற்கு சிறப்பு அளிக்கும் முக்கிய காரணமாகிய புதியவழியைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இவ்வழியின் சிறப்பால் ஸனாதனதர்மத்தின் சிறப்பும் வேதாந்த சாஸ்திரத்தின் மேன்மையும் வெளியாகும். ஆதலால் இதைப்பற்றி இங்கு நன்றாக ஆராயவேண்டியது அவசியம்.

எந்நிலையில் இருப்பவர்களுக்கும் அவரவர்களுக்குத் தகுந்த கொள்கைகளை நம் மதம் உடையதாய் இருத்தலால் எவ்வளவு தாழ்ந்தவர்களாய் இருந்தாலும் அவர்களையும் கதியற்றவர்களாக விட்டுவிடவில்லை. எவ்வளவு மேலான நிலையில் இருப்பவர்களாய் இருந்தாலும் அவர்களும் கண்டு பிரமிக்கும்படியான உண்மைகளை எல்லாம் உடைத்தாய் இருக்கிறது. மற்றைய மதங்களைப்போல் ஒரு நிலையிலிருந்து திடீரென்று வேறோர் நிலைக்கு மாற வேண்டும் என்று நமது மதம் சொல்லவில்லை. ஒருவன் எந்நிலையில் இருக்கிறானோ அங்கேயே அவனைப் பிடித்துக்கொண்டு அவனுக்குப் பிரியமானவைகளை முன்பு காட்டி அவன் அறியாதபடி மெதுவாய் அதன்மூலமாக மேலான

எண்ணங்களை புகட்டி விடுகிறது. இதற்கேற்பவே பாகவதத்தில் 11-ம் ஸ்கந்தத்தில் காணப்படும் நவயோகி ஸம்வாதத்தில் ஆவிர்ஹோத்ரர் என்ற யோகி ஒருவர் 'அநேகவித ஆசை காட்டி குழந்தைகளை நாம் மருந்து உண்ணும்படி செய்வதுபோல, மோக்ஷம் மனிதருக்கு வரும்படி செய்ய வேதங்கள் அவர்களுக்கு கர்மங்களைச் செய்யும்படி விதிக்கின்றன' என்று நிமி சக்கிரவர்த்தியை நோக்கிச் சொல்லுகிறார். இதே கருத்தை கைவல்லிய நவநீதத்தில்

"தினமுமண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே,
தீம்பண்டமெதிர் காட்டிக்
கனமருந்தக வொளித்துவைத் தழைக்கின்ற
கருணையாத் தாய்போல
மனையறங்கள்செய் மகங்கள்செய்நன்றென்று
மலர்ந்தவாசகம் சொல்லும்
நினைவுவேறுகாண் ஸ்வர்க்காதிகளந்த
நிண்ணயர் தெரியாரே."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ஸமய கோடிகள் எல்லாம் தன் தெய்வம் என் தெய்வம் என்று எங்கும் தொடர்ந் தெதிர்வழக்கிடவும்' நிற்கும் பரம்பொருளை ஸனாதன தர்மம் பின்பற்றுவோன் மனோதர்மத்திற் கேற்ப வருணித்து, வரவர அவன்மனத்தில் அப்பரம்பொருளைப்பற்றிய எண்ணம் வரம்பின்றி வளரும்படி செய்து, முடிவில் மோக்ஷநிலையை உள்ளது உள்ளபடி அவனுக்குக்காட்டி அவனைக் கரை ஏற்றுகின்றது. இதுவே ஸனாதனதர்மத்தில் அடங்கி இருக்கும் புதிய வழியின் ஸ்வரூபம்.

இந்த மதம் மேல்நிலைக்குக் கொண்டுவரும் வழி இன்னதென்பது விளங்குவதற்காக சில உதாரணங்கள் எடுத்துக்கொள்வோம். ஒரு குடிகாரன் இருக்கிறான். அவனிடத்தில் நமது மதம், கள் இல்லாவிட்டால் நாடோறும் கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு அன்றன்று சிரமம் அன்றன்று தீர்க்க முடியாமல்போக, அவர்கள் உயிர் தரித்தல் அஸாத்தியமாகும் என்று சொல்லி, அவனை முதலில் பிடித்துக் கொள்கிறது. கொஞ்ச காலம் கழிந்த பின்பு மிகக் கொடுமையான மயக்கம் உண்டாக்கும் கள்ளுகளை 'நீ குடிக்கக்கூடாது' என்று முற்கூறிய முகாந்திரங்களைக் கொண்டே நயமாகப் போதித்து அவனிடத்திலிருந்து அவைகளை விலக்குகிறது. பின்பு புதிதான ஒரு எண்ணம் அவன் மனதில் உண்டாகும்படி செய்கிறது. அவன் பயப்படும்படி ஒருவிதமான சக்தியோடும் உருவோடும் கடவுளை அவனுக்குக் காட்டி, அவனை எளிதில் நம்பிப் பூஜை செய்யும்படி செய்கிறது. பின்பு அவனைப்பார்த்து "அப்பா நீ குடிப்பவைகளை எல்லாம் இந்தக் கடவுளுக்கு நிவேதனம் செய்து பின்பு குடி" என்று அனுமதி கொடுக்கின்றது. அவனது கடவுள் ஒரு விக்கிரகரூபமாய் வீட்டு அலமாரியில் இருப்பதாக அவன் எண்ணுவதால், வீட்டிற்குக் கள்ளை கொண்டுவந்து நிவேதனம் செய்து பின்பு குடிக்கவேண்டியதாய் வருகிறது. ஆதலால் வரவர அநேக தரம், கள்ளுக்கடைகண்ட விடமெல்லாம் குடிப்பது எளிதில் நின்றுவிடுகிறது. மேலும் நமது மதம் சும்மா இராமல் 'கடவுளை நினைத்து இரண்டு அல்லது மூன்று தரம் சுத்தமாய்ப் பூஜை செய்ய வேண்டு'மென்று விதிப்பதினால், இவன் நாளுக்கு இரண்டு அல்லது மூன்றுதரம் மாத்திரம்தான் குடிக்க இடம் கொடுக்கிறது. இக்காலத்தவரில் சிலர் சொல்லுவதுபோல் நமது மதம் குடிகாரனுக்குத் தாழ்ந்த நிலையைக்காட்டாது உள்ளதை உள்ளபடி காட்டுமாகில் அவன் கதி என்னமாகும்! நமது மதத்தின் கருணையால் வரவர கடவுளைப்பற்றிய எண்ணம் விருத்தியடைய, மேல் ஜாதியார் குடி முதலியவைகள் இல்லாமலே ஸுகமாய் ஜீவிப்பதைப் பார்த்த மாத்திரத்தில், தானும் அவர்களைப்போல் இருக்கவேண்டும் என்ற எண்ணம் தானாகவே இந்த குடிகாரனுக்கு வருகிறது. உடனே கூடிய சீக்கிரத்தில் இந்தக் கெட்டபழக்கமும் விட்டுப்போய், தானே கண்டு ஆச்சரியப்படும்படியான நிலையை அவன் அடைந்து, கடவுளை ஆராதிக்கவேண்டுமென்ற எண்ணம் உடையவனாகிறான். பின்பு மேலான கொள்கைகளைக்காட்டி நமது மதம் அவனை மோக்ஷநிலையை அடையும்படி செய்கிறது.

இதுபோல திருடனுக்கும் அவனுக்குத் தகுந்த கடவுள் ஆராதனத்தை விதித்து அவனேயும் வரவரத் தனது தொழில் கொடியதுஎன்று தானே முடிவில் அறியும்படி செய்து அவனே அதை விட்டுவிடும்படி நமது மதம் செய்கின்றது. இந்த விஷயத்தில் நம்மூர் திருடர்களுக்கும் மற்றைய வெளிநாட்டுப் புறமதத்திருடர்களுக்கும் வித்யாஸம் உண்டு. இவ்வழியின் சிறப்பினுலேயேதான், பூர்வாசிரமத்தில் திருடராயிருந்த திருமங்கையாழ்வாரும் தாம் செய்த கடவுள் ஆராதன விசேஷத்தால் ரங்கனுதர் சொத்தைத் திருடவந்திருந்த ஓர் இரவில் தமது தொழிலின் கொடுமையை அறிந்து நல்ல வழியில் திரும்பி மேலானநிலையை அடைந்தார். அவர் அப்பொழுது கட்டின கோயிலே இப்பொழுதிருக்கும் ஸ்ரீரங்கம் ரங்கனுதஸ்வாமி கோயில். மாம்ஸபக்ஷணத்தில் ஆசையோடு மனம் தடித்திருக்கும் மனிதர்களே நமது மதம் யாகாதிகள் மூலமாகச் சீர்திருத்தி உய்யும்படி செய்கின்றது. இக்கருத்தையே கைவல்யம் 'கள்ளும் ஊனும் விரும்பிஞல் மகங்கள் செய்' என்றும், யாகத்தில் 'மது இரைச்சிகள் உண் என்ற சுருதி பின் மணந்துபார் எனல் பாராய்' என்றும் கூறி ஒழுங்கான அபிவிருத்திக்குத் தக்க வழியை ஆதாரத்துடன் காட்டுகின்றது. ஸனதன தர்மத்தின் ரூபமாகிய வேதங்களின் உட்கருத்தை அறியாதவர்கள் தத்தமக்குத் தக்கதாகக் காணப்படும் பாகத்தையே மிகச் சிறந்ததெனக் கொண்டாடுகிருர்கள். இதனுல் யாதொரு கெடுதலு மில்லை. இதற்குமேல் வேறு சிலர் தமக்கு ஏற்ற பாகத்தைத் தவிர மற்றைய பாகங்களைத் தூஷிக்கிருர்கள். இது தான் நமது மதத்திற்கு விரோதமான நிலை. இதற்கேற்ப கைவல்யம், வேதம் 'மலர்ந்த வாசகம் சொல்லும் நினைவு வேறுகாண் ஸ்வர்க்க காமிகள் இந்த நிர்ணயம் தெரியாரோ' என்று சொல்லுகிறது. நாம் எப்படி வேலிகட்டி, எரு விட்டு, நீர்வார்த்து, செடிமெதுவாய் முளைத்து வருவதை ஸாவதானமாய் எதிர்பார்த்து, அது பெரியமரம் ஆகும்படி செய்கிருேமோ, அது போல் உலகப்பற்றுகளில் உழலும் கெட்ட பழக்கங்களில் கதியற்று மூழ்கிக் கிடக்கும் மனிதர்களையும் அவ்வாறே விட்டு விடாமல் நமது மதம், முன் குடிகாரன் முதலியோர் விஷயத்தில் காட்டின வழியாய் மெதுவாக மோக்ஷத்தை யடையும்படி செய்கிறது. நமது ஸனுதன தர்மம் இவ்வாறு சிறந்த வழியால் மனிதர்களை விருத்திஅடையும்படி செய்வதே இதன் சிறப்பிற்கு மூன்றுவது காரணம்.

நமது மதத்திற்கு விசேஷமான ஒரு சக்தி உண்டு. இது இருப்பதற்குக் காரணம் முற்கூறி இருக்கும் சிறப்புக் குரியதாக உள்ள மூன்று விஷயங்களே. இராமாயணத்தில் வாலிக்கு தன் எதிரில் வந்த பகைவனது பாதி பலத்தை இழுத்துக்கொண்டு அவனே எளிதில் தோல்வி யடையும்படி செய்யத்தக்க சக்தி இருந்ததாகச் சொல்வது உண்டு. அது போன்றது தான் ஸனுதன தர்மத்தின் இவ் விசேஷ சக்தியும். அதனேடு வேறு எந்த மதம் வந்து எதிர்ப்பட்டாலும் ஸரி, முதலில் அம்மதத்தை தன்னிடம் இருக்கும் சிலபாகங்களுள் அடங்கி விடும்படி செய்து, அதை எளிதில் விழுங்கிவிடுகின்றது. உடனே அப்புதிய மதம் தான் இருந்தவிடம் தெரியாது ஒளிமழுங்கிப் போய்விடுகின்றது. இதே மாதிரியான சக்திக்கு இரையாகித்தான் பரதகண்டத்தில் புத்தமதம் இருந்த விடம் தெரியாமல் போனது. வெளியூர்களில் ஜயபேரி அடித்துக்கொண்டு ஊர் ஊராக மொத்தமாக மாற்றி வந்த கிறிஸ்துவ மதமும் பரத கண்டம் வந்ததும் ஸனுதன தர்மத்தின் விழுங்கும் சக்தியால் தொழில் செய்ய முடியாது தயங்கி நின்றுவிட்டது. வரவர கிறஸ்தவ மதம் ஒரு தனிமதம் என்று நம்மவரால் மதிக்கப்படாமலே போய்விட்டது. அதுவும் நமது மதத்தின் சிற்சில பாகங்களில் எளிதில் அடங்கி விடவேண்டியதுதான். இந்த சக்தியால் தான் நமது மதம் இவ்வளவுநாள் அழியாமல் நீடித்து நிற்கின்றது. இப்படிப்பட்ட விழுங்கும் சக்தி நமது மதத்தின் சிறப்பிற்கு நான்காவது காரணம்.

ஆகவே நமது மதத்தின் சிறப்பிற்கு, அநேக பாகங்களை உடைத்தாயிருத்தல், அவைகளை ஒழுங்குபடுத்திப் பொருத்தும் வேதாந்த சாஸ்திரத்தை உடைத்தாயிருத்தல், அச்சாஸ்திரத்தின் பலத்தால் ஜீன அபிவிருத்திக்கு உதவியாகும் புதியஸோபானவழியை உடைத்தாயிருத்தல், மற்றைய மதங்களை எளிதில் விழுங்கும் சக்தியை உடைத்தாயிருத்தல் ஆகிய இந்நான்குமே தக்ககாரணங்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. இப்படிப் பட்ட ஸநாதன தர்மத்தைப் பின்பற்றுவோர் எளிதில் மேலான நிலையை அடைவார்கள் என்பதற்கு என்ன ஸந்தேகம்.

நாம் இப்பொழுது சொன்னமாதிரியே இதர தேசத்தவர்களில் மானியர் வில்லியம்ஸ் என்பவர் நமது மதத்தினுடைய பலவிதமான பாகத்தையும், பின் பற்றுவோருக்கு அவைகளால் உண்டாகும் பொதுவான பிரயோஜனத்தையும், இன்னும் வேறு விதமான மனோதர்மத்தோடு புதிதாய் யார்வந்தாலும் அவர்களுக்கு ஏற்ற பாகங்களை தயாராய் நமது மதம் வைத்துக் கொண்டிருப்பதையும், இவைகளிருப்பதால் ஸநாதன தர்மத்திற்கு உண்டாகும் மேன்மையையும் ஸ்திரத்தையும் பற்றி விவரித்துச் சொல்லி இருக்கிறார். ஆனால் அவர்சொல்லும் வார்த்தையில் ஒன்றுமாத்திரம் நமது மதத்தின் சிறப்பைச் சற்றுக்குறைக்கும் தன்மை உடையதாக விருப்பதால் அந்த விஷயத்தை அடுத்த ஸஞ்சிகையில் எடுத்து விவரிப்போம்.

எ. எஸ். கஸ்தூரிரங்கன். B. A., L. T.

வேதாந்தத்தின் அதிகாரம் உலகம் முழுவதிலும் செல்லும். ஆகவே நம் நாட்டின் வர்ணாசிரமக் கிரமமானது சகல மானிடவர்க்கத்தையும் ஆதரவுடன் படிப்படியாய் மேலான மார்க்கத்தில் நடத்தி நிர்வைரம், சாந்தி, ஸ்திரத்தன்மை, பரிசுத்தம், தெய்வபக்தி தியானம் முதலிய சீலங்கள் வாய்ந்த உத்தம வாழ்க்கையில நிலையுறச் செய்வதற்கு ஏற்பட்ட சிறந்த ஸாதனமாம். இப்படிப்பட்ட ஸாதனமன்றோ தெய்வாம்சம் பொருந்தினது.

ஸ்ரீ விவேகாநந்த விஜயம், பக்கம் 266.

ஸ்ரீமான் பி. ஆர். ராஜம் அய்யர் அவர்கள்

B. R. RAJAM IYER AVERGAL. B. A.

I. மனம் மாறிய சருக்கம்

THE MENTAL CHANGE

ஸாதனமின்றி யொன்றை ஸாதிப்பா ருலகிலில்லை
ஆதலாலிந்தநான்கும் பெற்றவர்க் கறிவுண்டாகும்
ஸாதன விவேகி உள்ளில் உறையாது உறையுமாகில்
பூதஜன்மங்கள்கோடிப் புனிதனும் புநடனுமே

என்றார் கைவல்ய நவநீத நூலாசிரியர். இதன்படி மோக்ஷஸாதனம் இல்லாதவர்களுக்கு ஞானம்வந்து மோக்ஷம் ஸித்திக்காது. ஆனால் பட்டணத்துப்பிள்ளையாரைப் போன்ற சில மஹான்களுக்கு ‘காதருந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே’ என்பதுபோன்ற சிறு உபதேசங்கள் மூலமாக திடீரென்றுஞானம்வர, அவர்கள் ஸம்ஸாரக் கலப்பையையும், தாம் சிறந்ததெனக் கொண்டிருந்த விஷயங்களையும், முன்பின் யோசியாது விட்டு மோக்ஷமார்க்கத்தில் அதுமுதல் விடாது பாடுபட்டுக் கரையேறி யிருக்கிறார்கள். இவர்களுக்கு மேலான வாழ்வு ஸாதனங்கள் ஸஹாயம் ஒன்று

மின்றி எவ்வாறு லித்திக்கலாமென்ற சங்கை வரலாம். அதற்குக் கைவல்ய நூலாசிரியர் முன் எடுத்தெழுதியுள்ள பாட்டின் பின் இரண்டு அடிகள் மூலமாகப் பதில் கூறுகிறார். அதாவது ஸாதனமில்லாதவன் திடீரென்று ஞானியாதல் அஸாத்யம். அப்படிச் சிலர் ஆயிருப்பதாகக் காணப்பட்டால், அவர்கள் பூர்வம் அநேக ஜன்மங்களில் சுத்தராகி ஸாதனங்களில் பழகிக் கஷ்டப்பட்டு இந்த ஜன்மத்தை முடிவான ஜன்மமாக உடையவராய் இருத்தல்வேண்டும். இப்படிப்பட்ட மஹான்கள் அநேகரை நமது புராணாதிகளில் ஏராளமாகக் காணலாம். இவைகளைப் புராணகதைகள், கட்டுக்கதைகள், என்று தள்ளிவிடும் தன்மை வாய்ந்தவர்களுக்கு இக்காலத்தில் சிலரையும் எடுத்து திருஷ்டாந்தமாகக் காட்டலாம். அவர்களுள், பட்டணத்திலிருப்பவர் சிலருக்கு நேரிடத் தெரிந்தவராயும், அமெரிக்காமுதலிய தூரதேசங்களில் தமது நூல் மூலமாகப் பிரவித்தி பெற்றவராயும் உள்ள ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்களே இதற்குத் தகுந்த திருஷ்டாந்தம். இவர் கொஞ்ச நாளைக்கு முன்புதான் இருந்தவர். மேலும் இவரோடு நேரிடப் பழகியவர்கள் இன்னும் இவரைப் பற்றிப் புகழ்ந்துபேசி ஆனந்தித்துக்கொண் டிருக்கின்றனர். ஆதலால் இவரது சரித்திரம் இன்னும் மாறுபடாது சுத்தமாகவே இருக்கின்றது. அதை எடுத்து இங்கு விவரிப்போமாக.

ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்கள் மதுரை ஜில்லாவிலிருக்கும் வத்தலகுண்டு (பத்துலகுண்டு)என்ற கிராமத்தில் 1872-ம் வருஷத்தில் ஜனனமானார். இவர் பிறந்த கிராமம் இருக்கிறவிடத்தில் முற்காலத்தில் ஒரு பரிசுத்தமாயும், பகவத் பக்தர்களது ஸ்நாந அநுஷ்டானாதிகளுக்குத் தக்கதாயும் இருந்த ஓர் நிர்மலமான ஏரி இருந்தது என்பதை இதன்பெயரே குறிப்பிக்கின்றது. இப்பரிசுத்தமான இடத்தில் பிறந்து இளமையில் இவர் மதுரை பாண்டித்ய பாடசாலையில் எப். ஏ. பரீக்ஷைவரையில் கல்வி கற்றுவந்தார். இவர் இளமையில் மற்றையப் பிள்ளைகளைப்போல விளையாட்டில் மனதாரக் கலந்தவர் அல்லர்; எதிலிருந்தும் வெட்கப்பட்டு பின்னடையும் ஸ்வபாவம் இவருக்கிருந்தது. இதைத்தவிர நமக்கு இவரது இளமையைப்பற்றி வேறொன்றும் தெரியாது. எப். ஏ. பரீக்ஷை தேரியதும் இவர் பட்டணம் வந்து கிறஸ்தவர் பாண்டித்யசாலையில் சேர்ந்து சரித்திரபாகத்தை நன்கு கற்றுணர்ந்து அதிலேயே 1889-ம் வருஷத்தில் பீ. ஏ. பரீக்ஷைகொடுத்து, உடனே பட்டணம் இவருக்கு சட்ட பாண்டித்ய சாலையில் சேர்ந்து படித்தார். இக்காலத்தில் இங்கிலீஷ் படிக்கும் ஸாதாரணப்பிள்ளைகளுக்கு இருந்த சித்தவிருத்தியே இருந்தது. இவர் நடை உடை பாவனைகள் யாவும் மிக ஒழுங்காயும் பகட்டாயும் இருந்தன. நமது ஜாதிவர்ணாசிரமாதிகள் ஸ்வயநயங் கருதும் பிராம்மணர்களால் ஏற்படுத்தப்பட்டன என்றும், அந்த ஏற்பாட்டால்தான் நமது தேசம் சீரழிந்ததென்றும், அதை எப்படியாவது வேறறுத்தால்தான் நமது தேசத்திற்கு க்ஷேமம் பிறக்கும் என்றும், பரஹிம்ஸை கூடியவரையிலும் இல்லாது நன்னடக்கைக் கோட்பாடுகளின்படி நடந்துவந்தால் கடவுளைப்பற்றிய நம்பிக்கைகளும் மதவிஷய நம்பிக்கைகளும் இல்லாது உலகில் ஸுகமாக வாழலாம் என்றும், இவர் இக்காலத்தில் அபிப்பிராயப்பட்டார்.

இவ்வாறு ராஜம் அய்யர் நாஸ்திக அபிப்பிராயங்களை உடையவராக இருந்தபோதிலும் இவரிடத்து ஓர் விசேஷகுணம் மாத்திரம் இருந்தது. ஷெல்லி, வேர்ட்ஸ்வர்த், டெனிஸன் முதலிய ஆங்கில கவிசிகாமணிகளின் சுத்த கற்பனை நிறைந்த காவ்ய விஷயங்களிலும், கம்பர் முதலிய தமிழ் கவிகளின் கவிதைகளிலும் மூழ்கி ஆனந்தம் அனுபவிக்கும் தன்மை இவரிடத்தில் வாய்ந்திருந்தது. இதுதான் இவரது லோகாயதிக அபிப்பிராயத்தை மாற்றி இவரை நல்ல வழிக்குத் திரும்பும்படி செய்தது. சட்டபரீக்ஷைக்கு வாசிக்குங்காலத்தில், சரித்திரவிஷயமாக உலகமே கண்டு பிரமிக்கும்படியான ஓர் நூல் எழுதவேண்டும் என்றும், அமெரிக்கா

முதலிய விடங்களில் யாத்திரை செய்து வெளி நாட்டாரது மேன்மையின் ரகஸியத்தை அறிந்து, நமது பரதகண்டமும் அவ்வாறு சிறப்படையும்படி தக்கமாறுதல்களை ஏற்படுத்தவேண்டும் என்றும் இவர் பேராவல் கொண்டிருந்தார்.

இவ்வாறு மனோராஜ்யம் செய்துகொண்டிருந்த ராஜம் அய்யர் அவர்களுக்கு பீ. எல். பரீக்ஷை முதல்தரம் தவறியது. இதுதான், 'காதறுந்த ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே' என்ற உபதேசமொழி பட்டினத்தடிகளை மாற்றியதுபோல இவரது மனோநிலையைச்சற்று மாற்றியது. இது முதல் இவர் மனம் மதவிஷயங்களில் திரும்பியது. துன்பம் வருங்கால் எல்லோருக்கும் வாழ்க்கையின் நிலையாமையும் அதற்கப்பாலிருக்கும் பரம்பொருளது அழியாநிலையும் சற்று வெளியாகும். அது மாறியதும் வாழ்க்கையின் இன்பங்கள் வந்து தாக்க முன்தோன்றி உண்மைகள் மறைந்து போகும். அப்பொழுது ஸாதாரண ஜனங்கள் வாழ்க்கையின் உண்மை, நோக்கம் இவைகளைக் கவனியாது மனம்போனபோக்கெல்லாம் வீணுகப்போவது வழக்கம். இதுபற்றியே கார்லைல் என்ற மஹான் 'துன்பத்தை ஒருவாறு கஷ்டப்பட்டு ஸஹித்தாலும் ஸஹிக்கலாம், இன்பத்தை சாந்த மனத்துடன் ஸஹிப்பது அரிது' என வியந்து கூறியுள்ளார். ராஜம் அய்யரைப்போன்ற 'பூத ஜன்மங்கள் கோடிப் புனிதராம் புருஷருக்கு' கஷ்டகாலத்தில் வரும் ஞானம் பின்பு எந்த ஸமயத்திலும் மாறுதிருக்க, அது அவர்களை அந்த ஜன்மத்திலேயே கறை ஏற்றிவிடும். இதற்கேற்ப ராஜம் அய்யருக்கு பீ. எல். பரீக்ஷை தவறியதும் உண்டான ஞானமார்க்கமாறுதல் பின்பு மாறவேயில்லை. கவிதை விஷயங்களில் ஈடுபட்டு ஆனந்திக்கும் குணம் இவருக்கு இந்த ஸமயத்தில் ஸஹாயமாகவர மஹான்கள் 'மனவாக்கெட்டாத' தமது நிஷ்டாநுபூதி விசேஷங்களை வெளியிட்டிருக்கும் சுத்தகற்பனை நிறைந்த அருட்பாடல்களின் நயத்தை நன்கு உணரும் திறம் இவருக்கு இப்பொழுது உண்டாயிற்று. இக்காலத்தில் இவர் கைவல்ய நவநீதம், தத்வராய ஸ்வாமிகள் பாடல் முதலிய அநுபூதி நூல்களை மிகுந்த ஆவலுடன் படித்துவந்தார். இவர் முன்னர் நமது ஜாதி ஆசாரம், மதவிஷயம் முதலியவைகளைப்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் எல்லாம் மாறுதல் அடைந்தன. அமெரிக்கா முதலிய விடங்களுக்குப் போகவேண்டும் என்பது போன்ற இவருக்கு இருந்த பேராவல்கள் யாவும் இருந்தவிடந் தெரியாமல் பறந்தோடிப்போயின.

இப்படி இருக்கையில் இவர் கிறிஸ்தவர் பாண்டித்யசாலைப் பத்திரிகையில் கணித வித்வான் ரங்கநாத முதலியார் அவர்களால் இயற்றப்பட்ட கச்சிக்கலம்பகத்தின் குணகுண விமர்சை ஒன்றை எழுதி வெளியிட, இவர் பெயரும், இவர் தமிழ்ப் பாண்டித்யமும், அறிவின் நுட்பமும் பலர் அறிய வெளியாயிற்று. இதே ஸமயத்தில் 1892-ம் வருஷத்தில் இவரது மனோதர்மம், தமிழ், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் கவிஹ்ருதயம் உணரும் திறம், மதவிஷய அபிப்பிராயம் யாவும் இவர் விவேகசிந்தாமணி என்ற மாதாந்த தமிழ்ப் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவந்த ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம் என்ற தமிழ் கற்பனைக் கதைமூலமாக தெரியவந்தது. இந்த அற்புதக்கதையில் புத்திரசோகம் என்ற அத்தியாயத்தில் சோகரஸத்தையும், பலீன்சடுகுடு, கடற்கரை விளையாட்டு என்ற அத்தியாயங்களில் கற்பனாசக்தி நிறைந்த காவ்ய விஷயங்களையும், நரபலி என்ற அத்தியாயத்தில் ஆருத்திரா தர்சன வைபவத்தையும், 'கௌரி மாதவன் கோவிந்தன் என்பானோர் காளை புகுதக் கனக்கண்டேன் தோழி நான்' என்ற அத்தியாயத்தில் பக்தியின் சிறப்பையும், விசுவரூப தர்சனம், கருதும் அன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தேனே என்ற அத்தியாயங்களில் அநுபூதி விசேஷங்களையும், இம்மஹான் வெகு அழகாக அமைத்துள்ளார். 'இக்கதை உண்மையை உணர

உள்ளபடி விடாது பாடுபட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்து, முடிவில் மோக்ஷதாகம் தீரப் பருகும்படியான தடாகத்தைக் கண்டு நீர்பருகிக் களைப்புத்தீர்ந்த ஓர் சுத்த ஆத்மாவின் அநுபூதிபேதங்களை அடக்கியுள்ளது, என்பது ராஜம் அய்யரே இக்கமலாம்பாள் சரித்திரத்தைப்பற்றி வெளியிட்டுள்ள அபிப்பிராயம்.

இவ்வாறு உலக விஷயங்களிலிருந்து திரும்பியதும் ராஜம் அய்யர் மற்றைய வேலைகளைக் கவனியாது விட்டார். எவரது பார்வைக்கும்அகப்படாது தனிமையாக தமது காரியத்திலேயே கண்ணாகயிருந்து ஸித்திபெறத் தக்கஇடம் ஜனம்நிறைந்த பட்டணமே என்று அவர் அபிப்பிராயப்பட்டதால் இங்கேயே எப்பொழுதும்இருக்க இவர்விரும்பினார். அந்தஸமயத்தில் திருவல்லிக்கேணியில்இவர்இருந்த வீட்டிற்கு அருகாமையில் ஓர் அவதூதஸந்யாஸினி அரிய விஷயங்களைப்பற்றி உபந்நியாஸம் செய்துகொண்டிருந்தாள். அவ்விடம் இவர் சென்று தன் மனதைத் திருப்திசெய்துகொள்ள எண்ணி, நாடோறும் அந்த அம்மாள் செய்துவந்த உபந்நியாஸத்தைத் தவராது ஓர்புறமாக இருந்து மௌனமாகவும் சாந்தமாகவும் கேட்டுவந்தார். அந்த அம்மாள் இவரது மௌனம், பிரஸந்நவதனம், அடக்கம் முதலியவைகளைக் கண்டு வியந்து இவருடன் பேசவேண்டும் என்ற ஆவல் கொண்டாள். ஒருநாள் நடந்த பிரசங்கம் மிக உருக்கமாக இருக்க ராஜம் அய்யர் அவ்விடத்திலேயே எல்லோரும் போய்விட்ட பின்புகூட அசைவற்று யோசனையில் ஆழ்ந்து இருந்து விட்டார். இதுதான் ஸமயம் என்று அந்த ஸந்யாஸினி இவரைக் கிட்டே அழைத்தாள். இவரும் முன்பின்யோசியாது ஓர் கூச்சமும் இன்றி அவள் அருகில் சென்றார்.

அருகில் வந்ததும் அந்த அம்மாள் மிகுந்த அன்புடன் இவரது மனோநிலையைப்பற்றி விசாரித்தாள். இவரும் தயங்காது மனதைவிட்டு அந்த அம்மாளிடம் தமது மதவிஷய எண்ணங்கள், படிப்புக்கள் முதலியவைகளை எடுத்துரைத்து 'பெரியோர் பெற்ற அநுபூதி எனக்கு எவ்வாறு வரும்' என்று மிகுந்த உருக்கத்துடன் கேட்டார். இதைக்கேட்டதும் இளமை மாறாத இவருக்கு இவ்வளவு ஆழ்ந்த மோக்ஷ அபேக்ஷை எவ்வாறு வந்தது என்று வியப்பு உண்டாக, அந்த அம்மாளுக்கு இவரிடம் கருணை உண்டாயிற்று. உடனே அவள் இவர் தலையின்மேல் மிகுந்த அன்புடன் கையை வைத்தாள்! அப்பொழுது அளவில் அடங்காது எங்கும் வியாபித்த பரஞ்ஜ்யோதி ஒன்று இவரைச் சூழ்ந்துகொண்டது! தேகப்பிரஞ்ஞை உலக பிரஞ்ஞை எல்லாம் இவரைவிட்டு அகன்றது! ஓர்வித ஆனந்தம் இவருக்கு உண்டாயிற்று! இதைத் தான் இவர் கமலாம்பாள் சரித்திரத்தில் *விசுவரூப தர்சன அத்யாயத்தில் மனப்பூர்வகமாக விவரித்தார் போலும். * இந்த நிரதிசய ஆனந்த நிலையில் கொஞ்ச நாழிகை இருந்து விட்டுப் பின்பு வெளிவர இவருக்கு மஹான்களது நிஷ்டாநுபூதிவிஷயத்தில் இருந்த ஸந்தேகங்கள் நீங்கி ஓர்வித ஸுகப்பிரஞ்ஞையே இவர் மனதில் குடிகொண்டது. அந்த அம்மாளிடம் சில உபதேச விசேஷங்களைப் பெற்று அன்று வீடுவந்தார். கொஞ்சநாளைக்கு எல்லாம் அந்த அம்மாள் பட்டணம்விட்டுப் போய்விட்டாள். இன்னவிடம் போனாள் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. (* இறுதியிலுள்ள குறிப்பைப்பார்க்க)

இதுமுதல் மதவிஷயங்களில்இவருக்கு விசேஷப்பற்றுண்டாக உலகவிஷயங்களில் துச்சபுத்தி வந்தது. அவதூதஸந்யாஸினி அம்மாள் கருணையால்கண்ட கண்கொள்ளாக் காட்சியை மறுபடியும் கண்டுஆனந்திக்கவேண்டும் என்ற பேராவல் பிறந்தது. அந்த அம்மாள் போனவிடந் தெரியாமல் மறைந்தது இவருக்கு முதலில் துக்கத்தை உண்டாக்கியது. இவர் ஏக்கம்பிடித்தவர் போல் ஆனார். தேகவிஷயங்களைக்கூடக் கவனியாது இவர் அக்காட்சியைக்காண பிரயத்தனங்கள் செய்தார். சாஸ்திரங்களில் நிஷ்டாகாலங்களில் நாதாதிகள் கேட்கும் என்ற கோட்

பாட்டைப் பின்பற்றி காதண்டையில் மணி அடித்தல், கைகைத்தட்டல் முதலியவைகள்மூலமாக நிஷ்டாநாதத்தை தியானஞ்செய்து முன்கண்டகாட்சியைக்கொண்டுவர எவ்வளவோ பாடுபட்டார். ஒன்றும் பயன்படாமல்போக சில ஸமயங்களில் கண்ணீர்விட்டு அழத்தொடங்கினர். இவர் பக்திமார்க்கத்தில் சொல்லும்படியான பிரிவு என்ற விரஹ நிலையில் இருந்தார்போலக் காணப்படுகிறது. இவர் மனோநிலையை அறியாத வீட்டிலுள்ளோர் எல்லோரும் இவருக்கு பைத்தியம் பிடித்ததென்று எண்ணி விட்டனர். அவர்களுக்கு இவர் தகுந்த விடை அளிக்காமலே இருந்துவிட்டார். அவர்கள் எண்ணம் வரவா திடப்பட்டது. இவ்வாறு கொஞ்சகாலம் தமது உத்தியோகவேலை தவிர மற்றைய வேலைகளில் எல்லாம் இவர் பரிதவித்துக்கொண்டு பார்வைக்கு சித்தப்பிரமை பிடித்தவர்போலக் காலத்தைக் கழித்துவந்தார்.

இந்த ஸமயத்தில் விவேகானந்தஸ்வாமிகள் திக்விஜயம் செய்து ஸநாதனதர்மத்தை உலகில் நிலைநிறுத்தப் பேராவல்கொண்டு பட்டணம் வந்தார். அமெரிக்கா போவதற்குமுன் உலகில் உள்ளோர் நமது மதவிஷயங்களை நன்கு உணரும்பொருட்டு பிரம்மவாதினி என்ற ஒரு மாதாந்த இங்கிலீஷ் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வர ஏற்பாடுகள் செய்தார். அதன்படியே திருவல்லிக்கேணியில் அப்பத்திரிகை அப்பொழுது நடத்தப்பெற்று இப்பொழுதும் பட்டணத்தில் நடந்துவருகிறது. இது தொடங்கியகாலத்தில் விஷயதானம்செய்வோர் அதிகமாக இல்லாததால், அப்பத்திரிகையில் முனைந்து வேலைசெய்தவர் ஒருவர், ராஜம் அய்யர் ஸ்நேகிதராயும், இவரது தேர்ச்சி முதலிய அரிய குணங்களை அறிந்தவராயும் இருந்ததால் உடனே இவரிடம் வந்தார். இவர் ஒன்றும் செய்யாது பித்துப் பிடித்தவர்போல வீட்டில் ஓர்புறம் சும்மா உட்கார்ந்திருப்பதைக் கண்டு, 'இவ்வாறு உமது கல்வித்தேர்ச்சி யாவும் வீணாகவேண்டுமா? ஏன் வீண்காலம் கழிக்கின்றீர்? நமது பத்திரிகைக்கு விஷயதானம் ஏதாவது செய்யுமேன்' என்று மிகுந்த பரிவுடன் கேட்டார். ராஜம் அய்யர் இதை இரண்டொருதரம் லக்ஷியஞ் செய்யாது இருந்துவிட்டதைக் கண்டு பத்திரிகை அதிகாரி அடிக்கடி வந்து விஷயதானஞ் செய்யும்படி இவரைவிடாது கேட்கத்தொடங்கினர். ஒருதரம் ராஜம் அய்யர் முன்பின் யோசிக்காது மறுதரங்கூட வாசித்துப்பாராமல் தம் நண்பர் வேண்டுகோளின்படி ஓர் வியாஸம் எழுதிக்கொடுத்தார். அது 'மனிதன், அவனது ஏற்றத்தாழ்வு' என்ற விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருந்தது. அதில் :—

இந்தியங்கள் மேலனவாம் என்றுரைப்ப இந்தியத்திற்
சிந்தைமிக மேலதனிற் சிறுடைத்துப்—புந்திதான்
மன்னியவப் புந்தியினும் மாண்புடையான் அன்றோ
கன்னவிலுந் தோளா யறிகாண்.

என்ற கீதாவாக்கியத்தின் (கீதை அத்தியாயம் 3 - சுலோகம் 42) விருத்தியுரையை எழுதி கற்பனாசக்தியின் விசேஷம், அதைவிட வேதாந்த முடிவான பரமபதத்தின் மேன்மை, இவைகளை வற்புறுத்தி, இந்த நிலையை அடையும்படியான சக்தி மனிதனுக்கு மாத்திரம் இருப்பதால் அவனுக்கு ஏற்றம் என்றும், அவன் கற்பனாசக்தி, புத்தியின் விரிவு ஆகிய இவைகளால் அவனுக்கு மற்றைய ஜீவராசிகளை விடச்சற்று உயர்வு ஏற்பட்டபோதிலும் இவைகளால் அவனுக்கு உண்மையான ஏற்றமில்லையென்றும், தேகம் இந்திரியம் மனது இவைகளால் மனிதனுக்குத்தாழ்வே ஒழிய ஏற்றம் உண்டாவதில்லை என்றும் தமது அநுபவத்தை ஒட்டி மிகுந்த உருக்கத்துடன் இந்த வியாஸத்தை அமைத்திருந்தார்.

இது பத்திரிகை அதிகாரிகளாய் இருந்தவர்களுக்குப் பிடிக்காமல்போக இதை இரண்டொருமாதம் வெளியிடாமல் வைத்துவிட்டனர். இரண்டுமாதங் கழித்து விஷயங்கள் பத்திரிகைக்கு அகப்படாமற்போக பத்திரிகை அதிகாரிகளுக்கு ராஜம் அய்யர் வியாஸத்தைப் போடும்படியான அவஸரம் வந்துவிட்டது. அப்பொழுது இந்த வியாயஸம் மாறுதலின்றி பிரம்மவாதினியில் வெளிவந்தது. ஸாதாரண புஸ்தக ஞானத்தால் எழுதும் பெரியோரது வியாஸத்திற்கும் ராஜம் அய்யர் வியாஸத்திற்கும் மடுவிற்கும் மலைக்கும் உள்ள பேதம் இருந்தது. மனிதன், அவன் ஏற்றத்தாழ்வு என்ற வியாஸம் அநேகரது மனத்தைக் கவர்ந்து அவர்களுக்கு அடங்கா ஆனந்தத்தை அளித்தது.

இது மைலாப்பூரிலிருந்த சில பிரபுக்களுக்கு ஆனந்த மளிக்க ராஜம் அய்யரைத் தக்க உபதேசம் பெற்று இந்த ஜன்மத்திலேயே ஸித்தி அடையும்படி செய்ய அவர்கள் இவ் வாறு உதவினர் என்ற விஷயத்தை அடுத்த ஸஞ்சிகையில் எடுத்து நன்கு விவரிப்போம்.

விசுவரூபதர்சன வைபவம்.—பக்திமானான முத்துஸ்வாமி அய்யர் திடீரென்று தம்முன் தோன்றிய ஸ்ரீ ஸச்சிதானந்த ஸ்வாமிகளால் தேற்றப்பட்டு தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் நீங்கி அந்த நள்ளிரவில் நிச்சப்தமான ஸமயத்தில் சிதம்பரம் சிவ கங்கையில் ஸந்தியா வந்தனம் செய்ய இறங்கினர். அப்பொழுது ஸ்ரீ நடராஜப்பெருமான் அர்த்தஜாம கண்டாமணி அவர் காதில்பட அவர் உடம்பு சிலிர்த்தது. மிகுந்த மன உருக்கத்துடன் அவர் ஸந்தியாவந்தனம் செய்து ஜபத்திற்கு ஆரம்பித்து வேதாந்த ரகஸியமாகிய ஓம் என்ற மூலப்பிரணவத்தை உச்சரித்தார். 'அப்பொழுது அவருடைய பிராந்தியோ அல்லது குருதர்சன விசேஷமோ அறியேன்—திடீரென்று பூமிமுதல் ஆகாயம் மட்டும் நிலவினும் இனியதாய் வெயிலினும் காந்தியாய் தென்றலே உருவு கொண்டு வந்தாற்போல ஜில் ஜில் ஜில் என்று குளிர்ந்து மந்தமாய் அசைந்தாடும் ஒருதிவ்விய ஜ்யோதியானது இடைவெளியற்று எங்கும் பரந்ததுபோல அவருக்குத் தோன்றிற்று அவ்வாறு தோன்றிய அந்த ஜ்யோதி மஹிமையில்' உலகவஸ்துக்கள் யாவும் மிகுந்த கம்பீரத்தையும் கௌரவத்தையும் அடைந்து விளங்கின. ஆகாயத்தில் வெகுதூரம் மட்டும் ஸகல அண்டங்களும் பலவித வர்ண ஜ்யோதிகளாகப் 'பிரகாசித்துப் பகவானை நோக்கி அமிர்தமயமான கானத்தைச் செய்தது ஓர் பயங்கரமான அழகுடன் வெகு கம்பீரமாக உருள, இவை எல்லாவற்றிற்கும் மேல் ஸகலலோகத்திற்கும் காரணனாய, நாயகனாய, சரண்யனாய, பெருமையினும் பெருமையாய இனிமையினும் இனிமையாய அநேககோடி ஸூர்யர்கள் ஏககாலத்து உதித்தாற்போல பார்க்கபதினாயிரம் கண்களும் போதாத அபரிமிதமான ஜ்யோதிஸ் ஒன்று தோன்றுவதை முத்துஸ்வாமி ஐயர் கண்டார். தமது கண்களால் கண்டு பாதாதிகேசம்வரையில் மயிர்க்கூச்செறிந்து ஆ என்று திறந்த வாயும் இமையாது விழித்தகண்ணுமாய ஆனந்த ஸாகரத்தில் மூழ்கி மதிமயங்கி மெய்மறந்து பரவசமாய் பிரமித்து ஸ்தம்பித்துநிற்க, காட்டி யொளிக்கும் மின்னல் போல் ஒரு கணத்துள் மறைந்தது அக்களையில்லாக்காட்சி. மறைந்ததும் நெடு நேரமாக முத்துஸ்வாமி அய்யருக்கு உணர்ச்சியே வரவில்லை' உணர்ச்சி வந்ததும் அவர் ஓட்டோடியும் வந்து மிகுந்த பரபரப்புடன் ஸ்வாமிகளிடம் தாம் கண்ட அற்புதக்காட்சியைத் தெரிவித்து மிகுந்த பக்தியுடன் அடிபணிய, ஸ்வாமிகள் 'முத்துஸ்வாமி! பயப்படாதே நல்ல நல்ல பூஜையைப் பண்ணியிருக்கிறாய பகவான் உன்னிடம் விசேஷக்கிருபை வைத்திருக்கிறார். நீ அதிக பக்தியோடுகூட மட்டும் இருப்பாயாகில் 'இப்பொழுது பஹிரங்க பூதமாய்ப்பார்த்த ஆனந்தக்காட்சியை உனக்கு உன்னையே இடைவிடாது நீ தர்சித்து அநுபவிக்கலாம்' என்று மிகுந்த அன்புடன் தேற்றினர்.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

II - எரிமலைகளின் காரண காரியங்கள்

VOLCANOES—ITS CAUSES AND EFFECTS.

எரிமலைகள் உண்டாவதற்கு என்ன காரணம் எனறவிஷயத்தை ஆராய்ச்சி செய்வோம். பூமியுள் சுரங்கங்கள் வைத்துக்கொண்டு கீழே சென்றால் போகப்போக சூடு அதிகமாகிறது என்பது எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடிய விஷயம். பரிசோதனைகளின் பேரில் 60-அடி பூமிக்குள் சென்றால் 1-டிகிரி உஷ்ணம் ஏறுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரியே உஷ்ணம் ஏறிக்கொண்டு போகுமாகில் பூமியின் மத்தியில் உஷ்ணம் மிக அதிகமாக இருக்கும். பூமியின் குறுக்களவு 8000-மைல், ஆகையால் அதன்மத்தியபாகம் 4000-மைலில் தூரத்தில் இருக்கவேண்டும். அந்தப் பிரதேசத்தில் உஷ்ணம் ஏறக்குறைய (4[illegible]0 $\times 1760 \times 3) \div 60 = 4000 \times 88$ டிகிரி

இருக்கவேண்டும். நமது தேகத்து உஷ்ணம் $98\frac{1}{2}$-டிகிரி, தண்ணீர் கொதிப்பது 212டிகிரியில், இரும்பு 2192-டிகிரியில் உருகுகின்றது. எளிதில் உருகாத பிளாடினம் என்ற உலோகம் 3227 டிகிரியில் உருகும். கற்பாறை முதலியன அக்னிக்குழம்பாக இன்னும் அதிகம் உஷ்ணம்வேண்டும். இதற்கு வேண்டுமான உஷ்ணம் பூமியின் மத்தியபாகத்தில் இருக்கின்றது, என்பது முன்பார்த்துள்ள கணக்கிலிருந்து வெளியாகின்றது. ஆகையால் பூமியின் மத்தியபாகம் உருகினகுழம்பாக இருந்தாலும் இருக்கலாம் என்பது இதனால் விளங்கும்

இவ்வளவு உஷ்ணமான பூமி வெளியிலிருந்து குளிர்ந்துகொண்டே வருகின்றது. ஆகையால் உட்சூடு நமக்கு வெளியில் தெரியவில்லை. பூமியின் வெளி பாகத்தினது கனத்தின் விசேஷத்தால் உட்பாகம் குழம்பாக இல்லாமல் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அதிக உஷ்ணத்தால் அது குழம்பாகும் தருணமாக இருக்கலாம். மேலே இருக்கும் கனம் எந்தக் காரணத்தாலாவது குறைவுபட்டால் உடனே அது குழம்பாகிவிடலாம்.

இது நன்கு விளங்குமாறு ஒரு சோதனை செய்து பார்க்கலாம். கண்ணாடி சோதனைக் குழாய் ஒன்றை எடுத்து அதனுள் கொஞ்சம் ஜலத்தைவிடுவோம். பின்பு அதை ஒரு கைபிடி மூலமாகப் பிடித்துக்கொண்டு அது கொதிக்கும் வரையில் விளக்கில் காய்ச்சுவோம். அது கொதித்தவுடன் விளக்கிலிருந்து வெளியில் எடுப்போம். கொதிப்பு அடங்கிவிடும். இரண்டு மாத்திராகாலம் வைத்திருந்து அதைப் பழையபடியும் விளக்கில் பிடிப்போம். உடனே தண்ணீர் கொதிக்கும். ஆகவே தண்ணீர் கொதிக்கும் உஷ்ணத்தில் இருக்கின்றது. அதை வெளியில் எடுத்து இரண்டு மாத்திரா நேரத்துக்குள் ஒரு தகுந்த தக்கையால் அக்குழாயின் வாயை மூடி விளக்கில் கொஞ்சநாழிகை பிடிப்போம். உடனே தண்ணீர் கொதிப்பதில்லை. சீக்கிரம் அதை வெளியில் எடுத்து, * தக்கையை எடுப்போம், விளக்கின்மேல் இல்லாதிருந்தபோதிலும் தண்ணீர் உடனே கொதிக்கின்றது. கொதிக்கும் தருணமாக இருந்த தண்ணீர் தக்கையால் அடைபட்டிருக்கும்பொழுது விளக்கின்மேல் இருந்த போதிலும் கொதிக்காது இருப்பானேன்? விளக்கின்மேல் இல்லாதபோதும் தக்கையை எடுத்துவிட்டபொழுது உடனேகொதிப்பானேன்? தக்கையை அடைத்திருக்கும் பொழுது தண்ணீரில் இருந்து வரும் நீராவி வெளியே போக இடமில்லை. உள்ளேயே அடைபட்டு தண்ணீரை அமுக்கிக்கொண்டிருப்பதால் அதைக்கொதிக்கவிடவில்லை. பின்னர் தக்கையை எடுக்கும்போது, விளக்கின்மேல் வைத்தக்கால் கொதிக்கும் தருணத்திலிருந்தும் ஆவியின் அமுக்கலால் கொதிக்காத நீர், இப்பொழுது ஆவி வெளியில் போகத் தடை நீங்கி உடனே கொஞ்சம் கொதிக்கின்றது. ஆதலால் இந்தச் சோதனையில் இருந்து ஸாதாரணமாக கொதிக்கும் உஷ்ணத்திலிருக்கும் திரவபதார்த்தங்கள் பிறவஸ்த்துக்களால் அமுக்கப்பட்டால் அப்பொழுது கொதிக்காது அந்த அமுக்கலிலிருந்து விடுபட்டதும் கொதிக்கும் என்பது விளங்கும்.

இதுபோல உருகும் பதார்த்தங்களும் தாம் உருகவேண்டிய உஷ்ணத்தில் இருந்தபோதிலும் உருகாது பிறவஸ்துக்களால் அமுக்கப்பட்டு கடின பதார்த்தமாக இருக்கலாம் என்றும் அந்த அமுக்கல் நீங்கியதும் அவை உருகிவிடலாம் என்றும் இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம். ஆகவே பூமியின் உட்பாகம் உருகுந் தருணமான உஷ்ணநிலையில் கடினபதார்த்தமாக இருக்கலாம், என்பது யுக்திக்குப் பொருந்தினதாகத் தோற்றுகின்றது

இவ்வுருகும் தருணத்திலிருக்கும் வஸ்துக்கள் எவ்வாறு அக்னிக் குழம்பாகின்றன என்ற

* சீக்கிரம் எடுக்காவிட்டால் குழாய, உள்ளிருக்கும் ஆவியின் வேகத்தால் தூள் தூளாகச் சிதறி நம்மைக் காயப்படுத்தும்.

சங்கைகள் உண்டாகலாம். இவ்வஸ்துக்கள் உருக, மேலிருக்கும் கனம் குறையவேண்டும். உடனே இவை உருகிவிடும், இந்த கனம் இரு விதமாகக் குறையலாம். பூமி வெளியிலிருந்து குளிர்ந்து கொண்டே வருகின்றது. அவ்வாறு வருங்கால் அதன் மேல்பாகம் சுருங்கும். அப்பொழுது அதில் மடிப்புக்கள் ஏற்படும். அதாவது பூமியின் மேல்பாகத்தில் மேடுபள்ளங்கள் உண்டாகும். இம்மாதிரி சுருங்கல் உண்டாவது உலகில் மலைகள் உண்டாவதற்கு உதவிசெய்யும் காரணங்களுள் ஒன்று. இம்மாதிரி பூமியில் மேடுபள்ளம் உண்டாக பள்ளபாகங்களில் அமுக்கல் அதிகமாகும், உயர்ந்தவிடங்களில் இது குறையும். உடனே உயர்ந்த பாகத்தடியில் பூமியின் உட்பாகத்தில் உள்ள உருகும் தருணமாக இருக்கும் வஸ்துக்கள் உருகி அக்னிக்குழம்பாய் விடலாம். இக்காரணத்தால் உலகத்தில் இருக்கும் உன்னதமான பர்வதங்கள் சிலவற்றின் அடியில் அக்னிக்குழம்பு உருகின ஸ்திதியில் இருக்கலாம். அது மலைச்சாரலின் பலத்தாலாவது அதைப்பிடித்துத் தள்ள ஒன்றும் இல்லாததினாலாவது வெளிவாராது அடைபட்டுக் கிடக்கலாம். இவ்வாறிருப்பதற்கு மலைகளின்மேலிருக்கும் எரிமலைகளும், தீவுகளிலிருக்கும் எரிமலைகளும் தக்க சாக்ஷி. வேறுவிதத்திலும் அக்னிக்குழம்பு உண்டாகலாம். உருகும் தருணமாக வஸ்துக்கள் இருப்பதால் இவை பூமியின் வெளிப்பாகத்தை மிகுந்த வேகமாக அமுக்கும். இது தாக்கும் இடம் பலக்குறைவான இடமாயிருப்பின் அதை உடைத்துக்கொண்டு இவ்வஸ்து வெளியே அக்னிக்குழம்பாக வந்துவிடும். இவ்விரு காரணங்களால் பூமியுள் உருகும் தருணமாக இருக்கும் வஸ்துக்கள் அக்னிக்குழம்பாகலாம்.

இப்படி அக்கினிக்குழம்பு உண்டாவதாயின், அது எவ்வாறு எரிமலை வாயின் வழியாக ஏறிவழியத்தொடங்குகின்றது? சிற்சில ஸமயங்களில் இந்த வஸ்துக்கள் ஏன் மிகுந்த உயரம் ஆகாயத்தில் கிளம்பவேண்டும்? இவ்வாறு பயங்கரமான உற்பேதம் உண்டாகும்படி அக்கினிக் குழம்பை வெளியில் தள்ளி விடுவதுயாது? என்ற கேள்விகள் பிறக்கும். உற்பேத ஆரம்பத்தில் உண்டாகும் சிற்சில குறிகளை நோக்கில் இதன் உண்மை வெளிவரும். உற்பேதத்தொடக்கத்தில் ஸாதாரணமாக நீராவியின் அணுக்கள் மிகுந்த வேகத்தோடு வெளிவருவதை நாம் முன்னமேயே குறிப்பித்திருக்கிறோம். இதிலிருந்து அக்கினிக்குழம்போடு தண்ணீர் ஸம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிய வரும். இந்தத் தண்ணீர் உருகும் தருணமான அதிக உஷ்ணத்திலிருக்கும் வஸ்துக்களோடு ஸம்பந்தப் பட்டதும் உடனே நீராவியாக மாறுகிறது. நீராவியின் சக்தி எவ்வளவென்று அறியவேண்டுமாகில் புகைவண்டி புகைக்கப்பல் முதலிய நீராவியால் தொழிற்படும் யந்திரங்களைப் பார்க்கலாம். இவ்வளவு சக்தியை உடைய நீராவிதான் அக்கினிக்குழம்பை தன் வேகத்தால் மேலே கிளப்புவது. பலக்குறைவான விடங்களை சிதற அடித்துக் கொண்டு நீராவி தன் சக்தியால் முதலில் வெளிவருகின்றது. அதன் பின்னே அக்னிக் குழம்பு கிளப்பப்பட்டு மலையின் வாய் வழியாக வழிகின்றது. இந்த நீராவியின் சக்தியால் தான் உற்பேத ஆரம்பத்தில் தூசி, சாம்பல்கள், கற்பாறைகள், முதலிய மேலே கிளம்புவதும், பீரங்கி சப்தம் கேட்பதும், மழை யுண்டாவதும் ஆகிய அமளி குமளியாவது. இதன் சக்தியால் முதலில் வரும் அக்னிக் குழம்பு சின்னபின்னமாகச் சிதறி விழும். உற்பேத ஸமயங்களில் இந்த நீராவி அதிகமாக வந்து இத்தொழில்களைச் செய்கின்றது.

முன் கூறியதற்கு ஸஹாயமாகத் தண்ணீர் எவ்வாறு பூமி உள்ளிருக்கும் உருகும் தருணமான பதார்த்தங்களோடு ஸம்பந்தப் படுகின்றது என்ற ஸந்தேகம் உண்டாகலாம். இதற்கு நாம் எரிமலைகளின் அமைப்பை கவனிக்க வேண்டும். அவைகள் எல்லாம் ஸமுத்திரக்

கரை ஓரமாகவும் தீவுகளிலும் காணப்படுகின்றன. இதனாலேயே கடல் நீர் பூமியின் இடுக்குகள் வழியாக இறங்கி ஒரோர் இடத்தில் அக்னிக் குழம்பில் ஸம்பந்தப்படலாம். மேல்விழும் மழைநீரும் அவ்வாறு ஸம்பந்தப்படலாம். இதுவும் அல்லாமல் பூமியின் உட்பாகத்திலே தண்ணீர் நீராவியாகி இருக்கலாம். இம்மூன்று விதத்தாலும் தண்ணீர் அக்னிக்குழம்போடு ஸம்பந்தப்பட உற்பேதங்கள் உண்டாகின்றன.

பூமி குளிர்ந்து வருதலால் உண்டாகும் சுருக்கமும் உற்பேதங்களில் அக்னிக்குழம்பு மேலே கிளம்ப காரணமாகவிருந்து உதவி செய்யலாம். இவ்வுற்பேதங்களில் உண்டாகும் பூகம்பங்களை பின்னர் நன்கு விவரிப்போம்.

முற்காலத்தில் எரிமலைகளுக்கு அநேகர் அநேகவித காரணங்கள் கூறியுள்ளார். கிரேக்கர் வல்கன் என்பவன் பாதாளலோகத்தில் தொழில்செய்கின்றான், அவன் உலைக்கூடத்திலிருந்து வரும் புகை முதலியனவே எரிமலையின் உற்பேதாதிகள் என்றும், ரோம் தேசத்தார் தமது அருகாமையிலுள்ள எட்னா என்ற எரிமலை அதன் அருகாமையிலிருக்கும் ஷாரிப்டீஸ் என்ற சுழல் நீரை உள்ளிழுத்துக்கொண்டு தன் வாயால் கக்குகின்றது என்றும் சொல்லியிருக்கின்றார்கள். ரோமதேசத்தவர்கள் கதைக்கும் நாம் முற்கூறியிருக்கும் காரணத்திற்கும் கொஞ்சம் ஸம்பந்தம் இருப்பதை எல்லோரும் எளிதில் அறியலாம். ஒரு திரத்தார் எரிமலை அடியிலுள்ள நிலக்கரி முதலிய எரியும் பதார்த்தங்களில் தீப்பற்றி விடுவதால் உற்பேதங்கள் உண்டாகின்றன என்றார். லீமரி என்ற ரஸாயன சாஸ்திரி நன்றாகப் பொடிபண்ணப்பட்ட கந்தகம் இரும்புத்தூள் இரண்டையும் சேர்த்து கொஞ்சம் தண்ணீரைவிட அதில் உண்டான உஷ்ணத்தால் எரிமலையில் நடப்பது போன்ற தீப்பிடித்து எரிதல் முதலியன காணப்பட்டன. ஆகையால் சில வஸ்துக்களின் சேர்க்கையே எரிமலை உற்பேதங்களுக்குக் காரணம் என்று அவர் நிச்சயித்தார். டேவி என்ற பிரகிருதி சாஸ்திரி இரண்டு உலோகங்கள் தண்ணீரோடு சேர்ந்தவுடன் தீப்பற்றி எரியும் குணமுடையனவென்றும் அவைகள் பூமியில் மலையடிகளில் இருந்து ஸமுத்திரம்வந்து தாக்குவதால் தீப்பற்றிக்கொள்ள கொடிய உற்பேதங்களை உண்டாக்குகின்றன என்றார். இவைகள் யாவும் உண்மையல்லவென்று தள்ளப்பட்டு நாம் முன்னர் விஸ்தாரமாக எடுத்துக்காட்டியுள்ள முகாந்திரங்களே எரிமலைகளுக்குத் தகுந்த காரணங்கள் என்றும், அவைகளால் வெந்நீர் ஊற்றுக்கள், பூகம்பங்கள் முதலியவைகளையும் எளிதில் தெளிவாக அறியலாம் என்றும் இக்காலத்து பிரகிருதி சாஸ்திரிகள் எல்லோரும் அங்கீகரிக்கிறார்கள்.

இதுவரையில் எரிமலையின் காரணங்களை எடுத்துக் காட்டியாய்விட்டது. இப்பொழுது அவைகளால் உண்டாகும் காரியங்களை நன்கு விவரிப்போம். முன் ஸஞ்சிகையில் இதைப்பற்றி வாசித்தவருக்கு எரிமலைகளால் மிகுந்த அழிவு உண்டாகின்றது என்பது விளங்கும். அவைகளிலிருந்து நல்ல கந்தகம் விளைகின்றது. அவைகளிலிருக்கும் பிரதேசங்களில் ஸுகமான வென்னீர் ஊற்றுக்கள் உண்டாகின்றன. மேலும் உற்பேதம் கொடூரமாக நடக்குங்கால் அக்கினிக்குழம்பு ஆரவாரம் முதலியனவின்றி ஸாவதானமாக வழிகின்றது. ஆகையால் எரிமலைகளே இல்லாமல்போனால் பூமியின் உட்பாகத்தில் உருகும் தருணத்தில் தண்ணீரோடு ஸம்பந்தப்பட்டிருக்கும் வஸ்துக்களின்

வேகத்தால் பூமியே சிதரிப்போய்விடும். எரிமலை உற்பேதத்தால் இந்த ஆபத்துவராது நீங்குகின்றது. ஸமபூமியில் உண்டாகும் உற்பேதங்களால் மண் முதலியவைகள் குவிந்து மலைகள் உண்டாகின்றன. ஸமுத்திர மத்தியில் இதனால் தீவுகள் உண்டாகும். பழைய தீவுகள் திடீரென்று அமிழ்ந்துவிடலாம். உற்பேதங்களால் பழைய மலைச் சிகரம் சிதறுண்டு புதிய சிகரம் உண்டாகும். ஆகவே எரிமலைகளின் காரியங்கள் பெரும்பாலும் நாசஹேதுவே ஒழிய வேறில்லை.

எரிமலையைப்பற்றிய விஷயங்களை முடிக்கும் முன் அவைகளுள் முக்கியமானதான விஸுவியஸ் எரிமலையில் நடந்த ஓர் உற்பேதத்தை நிர்பயமாகக் கூடியவரையில் அருகாமையிற் சென்று உள்ளது உள்ளபடி வருணித்த மூத்த பிளினி என்பவரைப்பற்றி அவசியம் நாம் நினைக்கவேண்டியது. இவரால் எரிமலை உற்பேதம் இப்படியிருக்கும் என்பது உலகத்தவருக்குத் தெரியவந்தது. இப்பேருதவி புரிந்த இவர் நிர்பயமாக விஸுவியஸ் உற்பேதத்தைப் பார்த்துக்கொண்டிருக்க அதன் கொடுமை அதிகமாவதைக் கண்டு பலாது வேண்டுகோளின்பேரில் இவர் ஸமுத்திரக்கரையை அடைந்தார். எரிமலையிலிருந்து அடித்த கந்தகக் காற்றின்கொடுமையோடு இவரது இறைப்பையின் பலஹீனம் கூடச்சேர இவர் அங்கேயே வெகு தைரியமாக இறந்தார். இவர் விஸுவியஸைப்பற்றி வருணித்தது, இவருக்காக இவர் உறவினர் பட்டபாடு முதலியவைகளை பின்னர் வேறோர் ஸந்தர்ப்பத்தில் நன்கு விவரிப்போம். இந்த வியாஸத்தின் முடிவில் இப்படிப்பட்ட தீரமான காரியத்தை நமக்காகச் செய்தவரை நாம் அன்போடு நினைக்கவேண்டியது அவசியம்.

அ. சீ, ந.

மக்பெத் பட்ட பாடுகள்

MACBETH'S TROUBLES

மாயினிகள் வாக்கின்படி மக்பெத்திற்கு இராஜ்யம் கிடைத்தது. அவனுக்கு இரண்டொருநாளுக்குள் முடிசூட்ட, அவன் ஸ்காத்லெண்டிக்கு அரசனானன். இவைகளின் ரகஸியம் பாங்கோவுக்கு மாத்திரந்தான் தெரியும். மக்பெத்திற்கு இராஜ்யம் கிடைத்த விஷயத்தில் அவனுக்கு ஒருவிதமான ஸந்தோஷமும் ஒருவிதமான துக்கமும் உண்டு. மக்பெத்தின் விஷயத்தில் உண்மையான மாயினிகள் வாக்குத் தன் விஷயத்திலும் உண்மையாகும் என்ற நிச்சயத்தால் அப்பொழுது ஸந்தோஷம் உண்டாயிற்று. அவன் நல்ல மனமுடையவனுதலால் ராஜ்யம் கிடைக்கவேண்டுமென்ற பேராசையால் தன் நண்பன் சித்த ஸமாதனத்தைக் கொள்ளைகொள்ளும் கொடுங்கொலையைச் செய்து அரசுபெற்றுனே! என்று அவன் அப்பொழுது துக்கித்தான். மக்பெத்திற்கு முடிசூட்டிய தினத்தின் இரவில் அவன் தன் கீழ் இருக்கும் பிரபுக்களுக்கு ஓர் பெரிய விருந்துசெய்யத் தீர்மானித்தான். அதற்கு பாங்கோவை அவன் மிகுந்த அன்புடன் அழைத்திருந்தான்.

மக்பெத்திற்கு இராஜ்யம் வந்ததே ஒழிய அவனுக்கு சித்தஸமாதானம் உண்டாகவில்லை. இந்த கஷ்டம் அவன் பயத்தால் உண்டாகவில்லை; அது டங்கனைக் கொன்றதுமே அவனைவிட்டு அகன்றது. இப்பொழுது அவனுக்கு 'நாம் இவ்வளவு கொடுந்தொழில் செய்தும் என்ன பிரயோஜனம். நமது வைபவம் ஒன்றும் நமது பிள்ளைக்குத் தக்குவதாகக் காணுமே! பாங்கோவும் அவன் பிள்ளையும் உயிரோடிருக்கும் வரையில் என் நிலை என்னஸ்திரம்?' என்ற எண்ணம் உண்டாக, அவன் மனம் குழம்பியது. ஒரு கொலை செய்தவன் ஆகையால் அவனுக்கு பாங்கோவையும் அவன் பிள்ளையையும் அன்றைக்குள் கொன்றுவிட்டால் தனக்கு சித்த ஸமாதானம் எளிதில் உண்டாகிவிடும் என்று பட்டது. அவன் கெட்டுப்போய்விட்டபடியால், கொலை செய்வதால் சித்தம் எரவரக் கலங்க வருத்தம் அதிகரிக்கும் என்ற ஸாதாரண உண்மை அவனுக்கு உண்மையாகத் தோற்றவில்லை. இந்தத் தீர்மானம் வந்ததும், பாங்கோ அன்று நடுப்பகலில் தன் பிள்ளையோடு ஸவாரி போய்விட்டு ஸாயர்காலஸ்நானத்தின் பிற்பாடு மூன்று

நாழிகை கழித்து இருளில், தான் செய்யும் விருந்துக்கு வரப்போகிற விஷயத்தை மக்பெத் அறிந்து தன் மனைவிக்குத் தெரியாமலே தைரியமாகத் தன் மனவலியாலேயே இரண்டு கொலையாளிகளை அழைத்துவந்து அவர்களுக்கு பாங்கோவையும் அவன் பிள்ளையையும் அன்றிரவே கொன்றுவிடும்படி கட்டளையிட்டான். அவர்கள் நிற்கவேண்டிய இடம் முதலியவைகளையும் அவர்களுக்கு நன்றாகத் தெரிவித்தான். அவர்களும் அவ்வாறே செய்துவிடுவதாக ஒப்புக்கொண்டு போயினர். மக்பெத் மனைவியிடம் தன் மனக்குறைகளை அன்று பிற்பகல் எடுத்துரைக்க அவள் எவ்வளவோ அவனை ஸமாதானம் செய்து தேற்றப்பார்த்தாள். பாங்கோவும் அவன் பிள்ளையும் உயிரோடிருக்கும்வரையில் தனக்கு ஸுகம் கிடையாதென்று அவன் ஒரே வார்த்தையாகச் சொன்னானேஒழிய, தான் அவர்களைக் கொல்லச்செய்திருக்கும் ஏற்பாட்டை ஒன்றையாவது அவளுக்குச் சொல்லவில்லை. கொலைத்தொழிலுக்குப் பயந்து நடுங்கிக்கொண்டிருந்த மக்பெத் இப்பொழுது அத்தொழிலில் துணிவாக இறங்கத் தொடங்கிவிட்டான்.

ஸாயங்காலம் ஸூர்யாஸ்தமனம் ஆனதும் மக்பெத்தால் தூண்டப்பட்ட கொலையாளிகள் இருவரும் அரண்மனைத் தோட்டத்தின் வாயிலில் பாங்கோவையும் அவன் பிள்ளையையும் கொலை செய்யத் தயாராய் வந்து நின்றுவிட்டனர். அப்பொழுது மக்பெத் ஒரு கொலையாளி வேஷத்தோடு அரசன் தன்னை அனுப்பியதாகச் சொல்லிக்கொண்டு அவர்களோடு வந்து சேர்ந்துகொண்டான். இதற்குள், பாங்கோ தன் பிள்ளை பிடித்துவந்த தீவட்டி வெளிச்சத்தால்வழியை நன்றாகப்பார்த்துக்கொண்டு இருட்டுஸமயத்தில் அங்குவந்தான். இருகொலையாளிகளும் பாங்கோவை முதலில் அடித்தனர். அவன் கீழே விழும்பொழுது தன் பிள்ளையை ஓடிவிடும்படி கூக்குரல் இட்டுக்கொண்டு விழுந்தான். விழும்பொழுது தீவட்டி வெளிச்சத்தில் மூன்றாம்கொலையாளியாகிய மக்பெத் இருக்கும் பக்கம் திரும்பினான். அப்பொழுது பாங்கோ தன்னைப் பார்த்துவிடக் கூடாது என்று பரபரப்போடு அவன் தீவட்டி அணைப்பதற்குள் பாங்கோ அவனைப்பார்த்துத் தன் ரத்தம் வழிந்துகொண்டிருக்கும் தலையை அசைத்துக்கொண்டு 'அடேபாபி!' என்று கூக்குரல் இட்டான். இதற்குள் தீவட்டி அணைய பாங்கோபிள்ளை கொலையாளிகள் கையில் அகப்பட்டுக்கொள்ளாது தப்பிப் பிழைத்து ஓடி விட்டான். இவன் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் முதலியோர் மக்பெத்திற்குப்பின் ஸ்காத்லெண்டிற்கு அரசர்களாகி பெருமைபெற்று வாழ்ந்தனர். நடந்த சங்கதியால் திருப்தி அடையாதவனாய், பாங்கோ இறக்குங்கால் 'பாபீ!' என்று கதிறியதால் மனங்கலங்கி, மிகுந்த நடுக்கத்தோடு மக்பெத் விரைவில் அரண்மனைவந்து வேஷம் மாறி விருந்துக் கூடத்தில் தயாராகவந்து நின்றான். விருந்துக்கு எல்லோருமே அங்குவந்து கூடினர். எல்லோரையும் மக்பெத்விருந்திற்கு உட்காரவைத்து விட்டான். தனக்கு ஒரு இடத்தைக் காலியாக விட்டுவிட்டு, அதில் முதலில் உட்காராது தன் பிரபுக்கள் சாப்பிடத் தொடங்கும் வரையில் தான் வளைய வந்துகொண்டிருந்தான்.

விருந்து ஆரம்பித்தது. எல்லோரும் சாப்பிடத் தொடங்கி விட்டனர். கொலையாளிகளும் இதற்குள் வளையவந்து கொண்டிருக்கும் மாக்பெத்திற்கு நடந்த ஸங்கதியை உள்ளபடி சொல்லிவிட்டனர் அவன் மனம் குழம்பத்தொடங்கியது. இதற்குள் மக்பெத்தை உட்காரும்படி பிரபுக்கள் வேண்டினர். மக்பெத் தன் இடத்தைப் பார்க்காமலே 'எல்லோரும் நமது விருந்திற்கு வந்திருக்கிறார்கள். இதனால் எனக்கு மிகுந்த ஸந்தோஷம். ஆனால் பாங்கோ மாத்திரம் வராததை நினைத்தால் எனக்கு மிகுந்த துக்கம் வருகிறதே என் செய்வேன்!' என்று பாசாங்குசெய்தான். அப்பொழுது ஒரு பிரபு 'அவன் வாராத குற்றம் அவன்பேரில். நீங்கள் துயரப்படுவானேன்? உட்காருங்கள்' என்றான். மக்பெத் உட்காரத் திரும்பினான்! காலியாயிருந்த தன் இடத்தைக்காணோம்! 'என் இடம் எங்கே?' என்றான்; பிரபுக்கள் அவன் இடத்தைக் காட்டினர். அங்கு அவன் கண்ணுக்குப் பாங்கோ கீர்யப்பட்ட தலையும் தானுமாக வந்து உட்கார்ந்துகொண்டு தன்னை நோக்கித்தலை அசைக்கிறதுபோலத்தோற்றியது! மக்பெத்திற்கு மார் படபடவென்றடிக்கத் தொடங்கிவிட்டது, கண் இமைக்கொட்டாது நின்றுவிட்டது. முகம் வெளுத்துவிட்டது. வாயில் வந்தபடி எல்லாம் ஸம்பந்தமின்றி கொலை விஷயத்தைப்பற்றி அவன் அவ்வுரு வெளித்தோற்றத்தைப் பார்த்து உளரத் தொடங்கிவிட்டான்! மக்பெத் மனைவிக்கு அவன் மொழிகளின் பொருள் விளங்க, அவள் மிகுந்த பயத்தோடு தன் கணவனுக்கு இந்த மாதிரி வலி அடிக்கடி வருவது வழக்கம் என்று சாக்குச்சொல்லிவிட்டு, அவன் காதோடு 'நீ முன்பு

டங்கன் கொலைநடந்தகாலத்தில் ஆகாயத்தில் பார்த்த கத்தியின் தோற்றம் போன்றது இது. இதைக் கண்டு பயப்படாதே' என்று சொல்லித்தேற்றினாள். இதற்குள் பாங்கோவின் தோற்றம் மறைய மக்பெத்திற்கு சித்தஸ்வாதீனம் வந்தது. அப்பொழுது தனக்கு இது ஓர் வியாதி என்ற சாக்கைச்சொல்லிவிட்டு, ஒரு கோப்பை சாராயத்தைக் கையில் எடுத்துகொண்டு 'நமது பிரபுக்களும்இங்குதயவுசெய்யாத பாங்கோவும் திருப்தியடையட்டும்' என்று குடித்துத் தன் இடத்தில் உட்காரவந்தான். அப்பொழுதும் பாங்கோவின் தோற்றம் வந்து அவன் இடத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு முன்னிலும் அவனுக்கு பயம் அதிகரித்து, அவன் அதிகமாக உளறினன். இனி விருந்தை நடத்துவது நியாயமல்லவென்று மக்பெத் மனைவி எல்லோரையும் போய் வரும்படி விடையளித்து அவஸரமாக அனுப்பிவிட்டு பள்ளியறைக்குத் தன் தணவனைக் கூட்டிக்கொண்டு போய்ப்படுக்கவைத்துத் தேற்றினள். அப்பொழுது அவன் மக்டப் விருந்திற்கு வாராததைப்பற்றிக்கொஞ்சம் வருத்தத்தையும் கோபத்தையும் அடைந்தான். பின்பு மிகுந்த துர்ஸ்வப்னங்களைக் கண்டு கொண்டு அன்று தூங்கினன். பாங்கோவின் பிள்ளை உயிரோடிருப்பது அவனுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்க, ஒவ்வொரு இரவையும் ஒரு யுகம்போலக் கழித்தான். இந்த கஷ்டம் பொருக்கமுடியாமல் மறுபடியும் மாயினிகளைத் தேடித் தன்விஷயத்தில் உண்மையை அறிய எண்ணங்கொண்டான்.

'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்கும்' என்றபடி மக்பெத் ஒவ்வொரு பிரபுவின் வீட்டிலும் தன் வேலைக்காரன் ஒருவனை சம்பளம் கொடுத்து வைத்திருந்தான். அவர்கள் ரகஸியமாக பேசிக்கொள்ளும் ராஜாங்கவிஷயங்கள் எல்லாவற்றையும் மக்பெத்தினிடம் தெரிவிக்கவேண்டியது அவன் கடமை. இதிலிருந்து எல்லோரும் 'டங்கனைக் கொலை செய்தது மக்பெத்' என்று சொல்லிக் கொள்ளும் ரகஸியம் மக்பெத் காதில் விழுந்தது. அவனுக்கு குழப்பம் அதிகரிக்க அவன் சம்பம்புல் வெளிக்கருகில் இருக்கும் குகைஒன்றில் மாயினிகளைத் தேடிக் காணப் புறப்பட்டான்.

மக்பெத் வருவதற்குள் மாயினிகள் அவர்களது எஜமானியின் உத்தரவால் மக்பெத்தை நரகத்தில் வீழ்த்தும்படி குறிசொல்ல குரூர வஸ்துக்கள் மூலமாக ஒரு ரக்த கஷாயத்தை தயார்செய்து அதில் தமது துர்தேவதைகளை ஆவாஹனம் செய்து, வைத்துக் கொண்டு அவன் வரவை எதிர் பார்த்திருந்தன. மக்பெத் வந்து குறி கேட்டதும் தமது துர்தேவதைகளை மாயினிகள் மந்திரம் சொல்லி அழைத்தன. உடனே ஓர் தேவதை மகுடம் தரித்த தலையின் ரூபமாக ரக்தகஷாயத்திலிருந்து வெளிக்கிளம்பி 'பாரை நம்பினலும் நம்பலாம் மக்டப்பை நம்பாதே' என்று சொல்லி விட்டு இறங்கியது. முன்னமேயே மக்டப்பேரில் ஸந்தேகம் இருந்த மக்பெத்திற்கு அவனை ஊர்போனதும் அவசியம் கொன்றுவிடவேண்டும் என்றுதோன்றியது. இதற்குள் ரக்தத்தால் பூசப்பட்ட ஓர் குழந்தைவடிவாக இரண்டாம் தேவதை கிளம்பி, மக்பெத்தை நோக்கி 'ஸ்திரீ வயற்றில் பிறந்தவன் எவனும் உன்னை காயப்படுத்தக்கூட முடியாது. ஆகையால் தைரியமாக உன் மனம் போன போக்கே இரு' என்று சொல்லி மறைந்துவிட்டது. அப்பொழுது மக்பெத்திற்கு மக்டப்பைக் கொல்லுவது அனவசியம் என்று தோன்றியபோதிலும், மக்டப்பை கொன்றால்தான் தனக்கு உள்ளபடி ஸுகமுண்டாகும் என்று அவன் கொடியசித்தம் அவனுக்குத் தோற்றுவித்தது. இதற்குள் மூன்றாம் தேவதை ஒரு சிறு ராஜ குமாரனய் கையில் ஒரு மரத்தைப் பிடித்துக்கொண்டு கிளம்பி 'உன் பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள பர்னம் காடு உன்னை நோக்கிப் போர்செய்ய வருமளவும் நீ பயப்படவேண்டியதில்லை. நிர்பயமாக ஸுகித்திரு' என்று சொல்லி மறைந்தது. இதனால் மக்பெத் தனக்கு சாவில்லை என்றெண்ணி, இவைகளின் உட்பொருளை அறியாது ஸந்தோஷத்தை அடைந்தான். பின்பு மக்பெத் பாங்கோவிஷயமாகத் தனக்கு உள்ள ஸந்தேகத்தை நிவர்த்தி செய்யும்படி கேட்க, மாயினிகளின் மந்திர பலத்தால் எட்டு அரசரைப்போன்ற நிழல்கள் மக்பெத்முன்னே தோன்றின. அவைகளின்பின் பாங்கோ கையில் ஒரு கண்ணுடியைப் பிடித்துக்கொண்டு ரத்தமும் தலையுமாக மக்பெத்தை நோக்கி தலையை அசைத்துக்கொண்டு வந்தான். கண்ணுடியுள் மக்பெத் கண்ணுக்கு அநேக அரசரைப்போன்ற பிரதி பிம்பங்கள் தென்பட்டன. பாங்கோவின் சாயை சிரித்துக்கொண்டு தன் ராஜவம்சம் முழுவதையும் மக்பெத்திற்கு வயிற்று எரிச்சல் உண்டாகும்படிகாட்டிக்கொண்டுபோகக் கொஞ்ச நாழிகையில் எல்லாம் மறைந்துபோயின. மாயினிகளும் பாடிக்கொண்டு மறைந்தன.

மக்பெத் மனங் கலங்கி துக்கத்துடனும் மக்டப்பைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்துடனும் வெளிவந்ததும், அவன் பிரபுக்களில் ஒருவன் வந்து மக்டப் மால்காம்மைச் சேர்ந்துகொள்ள இங்கிலாந்திற்கு ஓடிப்போய் விட்டதாகச் செய்தி சொன்னான். இதுவரை தன் சுயங்கருதியே கொலைத் தொழிலைச் செய்துவந்த மக்பெத்திற்கு இப்பொழுது அத்தொழிற் பழக்கத்தால் தனக்கு ஸுகமில்லாத விடங்களிலும் கொலைசெய்து பிறரை வருத்தவேண்டும் என்ற எண்ணம் உண்டாக மக்டப்பின் மனைவி மக்கள் எல்லோரையும் தனது கொலையாளிகள் மூலமாக வெட்டி எறிந்துவிட்டான். பின்பு மாயினிகள் வார்த்தையில் பூர்ண நம்பிக்கையோடு தன் அரண்மனை சென்று தன்னை சாவு அணுகுதல் அஸாத்தியம் என்றுஎண்ணி ஸுகமாக ராஜ்யத்தின் பொது ஸுகத்தைக்கூடக் கவனியாது இருமாந்திருந்தான். இப்படி இருக்கையில் தனது ஸந்தேகசித்தத்தால் ஒற்றர் மூலமாக ஜனங்களது எண்ணங்களை அறிந்து தன்னை கொலைகாரன் என்று எண்ணி புள்ளவர்களை கொலைசெய்து ஜனங்களுக்கு பயத்தை உண்டாக்கிவந்தான். நல்லவர்கள் ஸுகமாக இருக்க அவன் ராஜ்யம் தகாததாகப் போய்விட்டது. எல்லோரும் மால்கம் படையெடுத்துவருதலை எதிர்பார்த்திருந்தனர். இந்த ஸங்கதியும் மக்பெத்திற்குத் தெரிய கொஞ்சம் துக்கத்தைஉண்டாக்கியது. அப்படி இருந்தும் மாயினிகள் வாக்கில் உறுதியான நம்பிக்கை இருந்தபடியால் அவன் அதைப் பாராட்டாது அலக்ஷியமாக இருந்துவிட்டான்.

இப்படி இருக்க அவன் உயிர்த்தோழியாகிய மனைவிக்கு இராத்திரி உண்டாகும் துர்ஸ்வப்நங்களால் மிகுந்த வருத்தம் உண்டாய்க்கொண்டிருந்தது. இதைத் தீர்க்க அவன் வைத்தியர்களை நியமித்தான். அவர்கள், அவன் மனைவி தூக்கத்தில் விழித்த கண் விழித்தபடி எழுந்து விளக்குங்கையுமாக உலாவிக்கொண்டு தன் கோரத்தொழில் ஸம்பந்தமான வார்த்தைகளைச் சொல்லிவந்ததைக் கண்டார்கள். இம்மாதிரியாய் நடந்தபடியால் மக்பெத் செய்த கொலைகளின் ரகஸியம் மெதுவாக பலர் அறிய அம்பலம் ஏறியது. மக்பெத்தின் கொடுமைக்கு அஞ்சி ஒருவரும் வெளிப்படையாய் அதைப்பற்றி பேசமாத்திரம் செய்யவில்லை. வைத்தியர்கள் 'அவள் வியாதிக்கு வைத்தியாது ஸஹாயம் பயனற்றது. கடவுள் ஸஹாயமே அவசியம்' என்றுசொல்லியும் போயினர். மக்பெத் மனைவி தன் கணவனை ஸுகப்படுத்த முதலில் வேண்டிய உதவி செய்தபோதிலும் அவள் கெட்டவழியே தொடங்கி தன் கணவனை மீளாத்துயருக்கு ஆளாக்கிவிட்ட பாபத்தால் மனம் கலங்கி பைத்யம்பிடித்துப் புலம்பி, பெண்ணுதலால், தேகம் தளர்ந்து முடிவில் இறந்தாள். தனக்கு உயிர்த்தோழியான மனைவி இறந்ததும் தன் ரஹஸியங்களைச் சொல்லிக்கொள்ளத்தக்க ஸ்நேகிதர் இல்லாததால் மக்பெத் மிக வருந்தினான். வாழ்க்கை அவனுக்குக் கசந்து போய்விட்டது. கொடுமை அதிகரித்தது. ஆதலால் ஊர் ஜனங்களில் சிலர் மால்கம் இடம் ஓடிப்போய்விட்டனர். இதை எல்லாம் அறிந்தபோதிலும் தன் நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ள மக்பெத் ஓர்விதமுயற்சியும் செய்யாது மாயினிகள் வாக்கில் நம்பி அசிரத்தையாக இருந்துவிட்டான்.

மால்கமோடு இங்கிலாந்திலிருந்த மாக்டப்பிற்கு தன் பெண்டு பிள்ளைகள் கொடுங்கொலைக் கிரையானது தெரியவந்தது. மக்பெத்தை விட்டு ஓடிவந்த போர் வீரர்களிடமிருந்து ஸ்காத்லெண்டின் ஸ்திதியை இங்கிலாந்து அரசன் அறிந்து மால்கமிற்கு ஸஹாயமாக ஒருபடையை அனுப்ப அவன் மக்பெத்தை எதிர்த்துச் சண்டையிடப் புறப்பட்டான். மக்பெத்தின் பட்டணத்தருகில் பர்னம் காட்டிற்கு மால்கம் வந்து தண்டிறங்கினன். மக்பெத்தைச் சேர்ந்தவர்கள் அநேகர் அங்கு அவன் ஸேனையோடு வந்து சேர்ந்தனர். தன் ஸேனையின் அளவு எதிரிக்குத் தெரியாதிருப்பதற்காக மால்கம் ஒவ்வொரு போர்வீரனையும் தன் முன்பாக ஒவ்வொரு மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு நடக்கும்படி கட்டளையிட எல்லோரும் அவ்வாறே செய்தனர். இதனால் மக்பெத்தின் கொத்தளங்களின்மேல் இருந்த காவலாளிக்கு பர்னம்காடே நகருவதுபோலத் தோன்ற, அவன் பரபரப்போடு மக்பெத்திற்குச் செய்தி தெரிவித்தான். அவன் உறுதியான நம்பிக்கைக்கு விரோதமான விஷயமாகிய இதை நம்பாது மிகுந்த கோபத்துடன் தானே வந்து பார்த்தான். பர்னம் காடு நகர்ந்து வருவதைக் கண்டான்! மனம் கலங்கியது! ஆவேசத்தோடு கவசத்தை அணிந்து கத்தி கேடயாதிகளை எடுத்துக்கொண்டு தனிமையாக வாழ்க்கையில் வெறுப்பு

டன் சண்டையில் மூழ்கி வாழ்வை மறப்பதற்குப் புறப்பட்டான்.

இதற்குள் மால்கம் ஸேனை மக்பெத் இருக்குமிடம் வந்துவிட்டது. உடனே ஒவ்வொரு போர்வீரனும் தனது மரக்கிளையை எறிந்துவிட கொடிய போர் விளைந்தது. இருபக்கத்திலும் அநேகர் மாண்டு விழுந்தனர். மக்பெத் மிகுந்த ஆவேசத்தோடு போர்செய்து எதிரிகளில் அநேகரை மடித்தான். இப்படி அவன் போர்செய்து கொண்டிருக்கையில் மக்டப் அவனை ஸந்தித்தான். மாயினிகள் வாக்கு மக்பெத்திற்கு ஞாபகம்வர அவனைத் தாண்டி அப்புறம் போய் விடப் பார்த்தான். அப்பொழுது மக்டப் தன் மனைவி மக்கள் கொலையுண்டார்களே என்ற துக்க ஆவேசத்தால் மக்பெத்தை வாயில் வந்தபடி வைய, சுத்த வீரனான மக்பெத் திரும்பி 'அடா பதரே! என்னைக் கொல்ல எந்தப் பெண் வயற்றிலிருந்து பிறந்த மனிதனாலும் முடியாது. இது நான் அடைந்திருக்கும் ஓர் வரம். வீண் சிரமம் ஏன் படுகிறாய்?' என்று மாயினிகள் வாக்கில் பூர்ண நம்பிக்கையோடு மிகுந்த கர்வமாகச் சொன்னான். உடனே மக்டப் மிகுந்த வீர்யத்தோடு "அடே பாபி! யார் உனக்கு அந்தவரம் கொடுத்தார்களோ அவர்களே, 'மக்டப் எல்லோரும் பிறந்ததுபோலத் தாய்வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. அவன் தாய் வயிற்றிலிருந்து 10-மாதம் முடிவதற்கு முன் அறுத்து எடுக்கப்பட்டான், அவனிடம் அஜாக்கிரதையாக இராதே' என்று உன்னை எச்சரிக்கை செய்யவில்லையா?" என்று சொன்னான். உடனே மாயினிகள் வாக்கு மூன்றிலும் இருந்த நம்பிக்கை மக்பெத் மனத்தைவிட்டு அகன்றது. உடனே மிகுந்த துக்கமும் பயமும் உண்டாக அவன் 'மாயினிகள் போல விடுகதை ரூபமாகக் குறிசொல்லி ஏமாற்றும் ஜனங்களது வாக்கை நம்பி ஒருவரும் காரியங்களைச் செய்யாதேயுங்கள். யான் அதனால்தான் கெட்டேன்' என்று கதறிக்கொண்டு மகட்ப்போடு வீராவேசத்துடன் போர் செய்து இறந்தான்.

மக்டப் மக்பெத் தலையை வயிற்றெரிச்சல் தீர வெட்டி ஒரு கோலின் நுனியில் வைத்துக்கொண்டு மால்கம்மிடம் வந்து மக்பெத் தலையைக்காட்டி நடந்தவைகளைச் சொன்ன உடன், எல்லோரும் மால்கம்மை அங்கேயே அரசனாக அங்கீகரித்து ஜயகோஷம் செய்தனர். மால்கம் சீக்கிரத்தில் முடிசூட்டப்பெற்று தன் தகப்பன் ஆண்டுவந்தது போல நெறிவழுவாது வெகுநாள் ஸுகமாக அரசாட்சி செய்து வந்தான்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேச சாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

48. பெரும்வியாதி வந்திருக்கும் பொழுது என்னதான் பலமான மருந்து கொடுத்தபோதிலும் பிரயோஜனப்படாமற் போவதுபோல அக்கொடிய அசுரனை அடக்க நாங்கள்செய்த எல்லாவித உபாயங்களும் பயனற்றவைகளாக முடிந்தன.

49. எந்த ஒரு இடத்தில் வெற்றி நமக்குக் கிடைக்குமென்று நாங்கள் ஆசைவைத்திருந்தோமோ அந்த விஷ்ணுசக்கிரமும் அவன் மார்பில் மோதி "பளிச்" என்று ஒரு ஒளியைமட்டும் உண்டாக்கிவிட்டு அவன் கழுத்தில் ஒரு மாலைபோல் விழுந்தது.

50. ஐராவதம் முதலிய யானைகளை வென்றுவிட்ட அவ்வசுரனுடைய யானைகள் புஷ்கரம் ஆவர்த்தகம் என்ற மேகங்களுடன் கொம்புமுட்டி விளையாடி வருகின்றன.

51. தெய்வமே! மோட்சத்தையடைய விரும்புகின்றவர்கள் சம்சாரபந்தத்தை விட்டு ஒழிய கர்மத்தை வேருடன் அறுக்கும் தர்மத்தைத் தேடுவது போல அவ்வசுரனை அடக்க ஒரு படைத்தலைவனை எங்களுக்கு சிருஷ்டித்துக்கொடுக்க வேண்டுமாய் நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

52. தேவர்கள் சேனையைப் போருக்கு இட்டுக்கொண்டுபோகும் பராக்கிரமுள்ள சேனாபதியை இந்திரபகவான் தனது சத்துருவாகிய தாரகாசுரனிடமிருந்து அவன் சிறைபிடித்து வைத்திருக்கும் ஜயலக்ஷ்மியை மீட்டுக்கொண்டு வரும்படியாக நீங்கள் எங்களுக்கு அளிக்கவேண்டும்.

53. வாசஸ்பதி இவ்வாறு பேசி ஓய்ந்ததும் பிரமதேவர் மறுமொழி சொல்லலானார்; அவருடைய பேச்சும் இடி இடித்து ஓய்ந்தவுடன் மழை பொழிந்தால் எவ்வளவு அழகாயிருக்குமோ அதற்குமேலழகாயிருந்தது.

54. உங்களுடைய மனோரதம் நிறைவேறப்போகின்றது; இன்னும் கொஞ்சகாலம் காத்திருங்கள், ஆனால் உங்கள் மனோரதத்தை நிறைவேற்றிவைக்க ஒரு சேனாபதியை உண்டுபண்ண நானே முயலமாட்டேன்?

55. அவ்வசுரன் என்னிடமிருந்தே பாக்கியம் பெற்றவன். ஆகையால் என்னாலேயே அவனுக்கு நாசமுண்டாவது நியாயமல்ல. நச்சுமரமானாலும் நட்டவனே அதை வெட்டுவதென்றால் அது அவனால் ஆகாத காரியமின்றோ.

56. முன்னாளில் அவ்வசுரன் தவம்புரிந்த பொழுது தேவர்களினால் தனக்குச் சாவு உண்டாகக் கூடாதென்று வரம் வேண்டினான். அதே வரத்தைத்தான் நானு மவனுக்குக் கொடுத்தேன். அப்படிச் செய்யலாமா என்றாலோ இவ்வுலகத்தையே எரிக்கும் மகிமை அடைந்த அவ்வசுரன் தவத்தை நான் அவ்வித வரங் கொடுத்து ஒருவாறு அவித்தேன்.

57. போரில் வெகு பயிற்சிபெற்ற அத்தாரகாசுரனை வெல்ல சிவபெருமானிடமிருந்து உதிக்கும் வித்தாலல்லது மற்றெவராலும் முடியாது.

58. அச்சிவபெருமானே தமோ குணத்தைத் தாண்டி பரமாத்ம ஸ்வரூபியாய் என்னாலும் விஷ்ணு பகவானாலும் அறிந்துகொள்ளக் கூடாத அதிசய மகிமைபொருந்தியவராய் விளங்குகின்றார்.

59. அயக்காந்தத்தால் இரும்பை இழுப்பதுபோல் தவத்தால் கட்டுண்டிருக்கும் சிவபெருமான் மனத்தை உமை என்ற உருவால் நீங்கள் இழுக்க முயலுங்கள்.

60. உமை என்ற மாதுசிரோமணி ஈசனுடைய தேஜஸை சகிக்க சாமர்த்தியமுடையவள். எனது தேஜஸை வகிக்க எனது உருவமான ஜலமும் ஈசனின் தேஜஸை வகிக்கப் பார்வதியும் என்று இவ்விரு சிருஷ்டிகளும் உண்டாக்கப்பட்டன.

61. சிவபெருமானுடைய ஆத்துமாவாய் விளங்கும் அவருடைய மகன்தான் உங்களுக்கு சேனைத் தலைவனாக வந்து தனது பராக்கிரமத்தால் உதவி செய்து தாரகாசுரனால் இப்பொழுது சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தேவஸ்திரீகளை விடுவிக்கப்போகின்றான்.

62. இவ்வண்ணம் தேவர்களுக்கு வாக்களித்து விட்டு இவ்வுலகத்தை யடைந்த பிரமதேவன் மறைந்துவிட்டார். தேவர்களும் தங்கள் மனத்துக்குள் இன்னகாரியம் செய்யவேண்டும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டு சுவர்க்கலோகம் சேர்ந்தார்கள்.

63. இந்திரபகவானும் ஈசுவரனை வசப்படுத்துவதற்காக மன்மதனை மனத்தில் நிச்சயித்துக்கொண்டு வேகமாகக் காரியத்தை முடிக்க இரட்டிப்பு வேகமாக நடந்து சுவர்க்கலோகம் சேர்ந்தான்.

64. அம்மன்மதன் தேவேந்திரனால் நினைக்கப்பட்டமாத்திரத்தில் கட்டழகிகளுடைய புருவத்துக்கொப்பான அழகான முனைகளை உடையதும் ரதிதேவியின் வளையல்கள் போன்ற அடையாளம் வெட்டப்பட்டதுமானத் தனது வில்லை தோளில் மாட்டிக்கொண்டு தனது இணைபிரியா நண்பனான வசந்தன் கையில் மாந்தளிராகின்ற தனது பாணங்களை ஒப்பித்து, அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு இந்திரன்முன்பாக வந்துநின்றான்.

மதன தகனம் என்ற மூன்றாவது சருக்கம்

---

1. அம்மன்மதன் வந்ததும் இந்திரன் தேவர்களைப் பார்ப்பதை. விட்டு தனது ஆயிரங்கண்களாலும் மன்மதனைப் பார்க்கலானான்; தங்களை அடுத்தவர்களிடம் பிரபுக்கள் வைக்கும் ஆதரவு தாங்கள் எதிர்பார்க்கும் பிரயோஜனத்துக்குத் தகுந்தபடி சஞ்சலித்துக்கொண் டிருக்குமன்றோ?

2. இந்திரன் "இங்கு உட்காருங்கள்" என்று தனது ஆஸனத்துக்கு அருகாமையில் மன்மதனுக்கு ஆஸனங் கொடுக்கவே, அவ்வாறு தனக்குத் தனது யஜமானனிட மிருந்து கிடைத்த மரியாதையை அக்காமன் தலையால் வகித்து ரகசியமாய் அவரிடம் பின்வருமாறு பேசலானான்.

3. ஐயா, மனிதர்களுடைய பலத்தை நன்றாய் அறிந்த இந்திரபகவானே! இவ்வுலகத்தில் என்னால் தங்களுக்கு என்ன உதவி நடக்க வேண்டுமென்பதைப்பற்றிக் கட்டளையிட வேண்டுகின்றேன். என்னை நினைத்ததால் தாங்கள் என்னிடம் காட்டிய அனுக்கிரகத்தைத் தங்களுடைய எவு தலை முடித்துவைத்தலாம். நான் அதிகமாகச்செய்துவைக்க விரும்புகிறேன்,

4. எந்த மனிதன் தங்கள் பதவியை அடைய விரும்பி அதிகமாகத் தவம் புரிந்துகொண்டு தங்களுடைய மனத்திற்கு அசூயையை உண்டுபண்ணியிருக்கின்றான். இந்தக்ஷணமே நான் அவனைப்பாணம் பூட்டிய எனது வில்லின் கட்டளைக்கு உள்ளாக்கி வைக்கின்றேன்.

5. மறுபிறப்பு என்ற துக்கத்தினின்று பயந்து தன்னை விடுவித்துக்கொள்ள மோட்சமார்க்கத்தை எவன் உமக்கிஷ்டமில்லாமல்நாடித்தவம்புரிகின்றான், சொல்லும். புருவங்களை மேல்தூக்கி பிறகு தாழ்த்தி விசாலக் கண்களால் அழைக்கும் கட்டழகிகளின் கண்களால் அவனை நான் கட்டி உருட்டுகின்றேன்.

6. சுக்கிராசாரியாரிட மிருந்து உமது சத்துரு நீதிசாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டவனாக விருந்தபோதிலும் அவனிடம் இன்பம் என்ற தூதனை நான் அனுப்பி, பெரும்வெள்ளம் நதியின் இருகரைகளையும் பிளப்பதுபோல் அவனுடைய அறம் பொருள் என்ற இருபயன்களையும் பிளந்துவிடுகின்றேன்.

7. எந்தப் பதிவிரதை உம்மால் ஒருபொழுதும் அணுகமுடியாத ஏக பர்த்தா விரதத்தைக் கைப்பற்றியவளாய் அழகால் மட்டும் சஞ்சலமான உமது மனத்துக்குள் புகுந்து உம்மை வருத்துகின்றாள். அக்கட்டழகி தனது வெட்கத்தைவிட்டு உமது கழுத்தில்தானே தனது கைகளைப் போட்டுக் கட்டிக்கொள்ள நான் செய்து வைக்கின்றேன்.

8. ஐயா, காமுகரே! எந்த மடந்தை உம்மிடம் பிரணயகலகஞ் செய்து நீங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொண்டபோதிலும் கோபத்தைவிடாமல் உம்மை அலட்சியம் பண்ணுகின்றாள். அவளுக்கு அதிகத்தீயை நானிப்பொழுதே மூட்டி அவளைத் தளிர்ப்படுக்கையில் படுத்துத் தவிக்கும்படி நானிதோ செய்கின்றேன்.

9. ஐயா வீரரே! உங்களுடைய வச்சிராயுதம் சற்று சுகமாயிருக்கட்டும்; என்மேல் மனமிரங்குங்கள்; தேவ சத்துருவாயிருக்கும் எவனை நான் அடக்கவேண்டும் வெளியிடுங்கள். எனது பாணத்தால் அவனுடைய புஜபலத்தை நான் வீணைச்செய்து கோபத்தால் உதடுகளை அசைத்துக்கொண்டு நிற்கும் மடந்தைகளையும் கண்டு அவன் நடுநடுக்கும்படி செய்து வைக்கின்றேன்.

இலுப்பைமரம்

THE LONG-LEAVED BASSIA

முன்னுரை.—நமது இந்தியாவின்கண் பலன் தரும் மரங்களுள் இலுப்பைமரமொன்று. இது பாலுள்ள வகையைச் சேர்ந்தது. இது நீண்டகாலமாயுள்ளது. இம்மரம் தக்க பலனைக் கொடுக்கக்கூடியது. இது நமது சென்னை இராஜதானியிலும் இதன் சுற்றுப் பக்கங்களிலும் விசேஷமாயுள்ளது. தமிழ்ப் புத்தகங்களில் இம்மரம் இருப்பையென்று வழங்கப் பட்டிருக்கிறது. இதுவே இதின் இயற்பெயரென்று கொள்ளவேண்டும். இருப்பை யென்பது இலுப்பையெனத் திரிந்து இக்காலத்தில் வழங்குகிறதென்றும் கூறலாம். இருப்பை மதுகம், குலிகம் ஒருபொருட்கிளவி.

பூமி.—வெண்மணற்பாங்கான பூமியும் சற்றுக்களிப்புள்ள விருமண் பூமியும் இது பயிர்செய்வதற்கு மிக வுசிதமானவை. புஞ்சை பெருத்தவிடங்களே இதற்குச் சிறந்தது. அல்லாமலும் கடற்கரையோரங்களில் இம்மரங்கள் செவ்வையாக வளர்ந்து நல்ல பலனைத் தருகின்றன.

பயிர்செய்தல்.—முப்பத்திரண்டடிக்கு ஐந்தடியாழம் குழிதோண்டி, இதில் தழை முதலிய எருப்போட்டு குழி யொன்றுக்கு ஒரு கொட்டைவீதம் ஆடி அல்லது தை மாதத்தில் போட்டுத் தண்ணீர் விட்டுக்கொண்டு வரல்வேண்டும். ஆடு மாடு முதலியவை இக்குழியை மிதித்துக் கெடுதி செய்யாவண்ணம் 6-அடி உயரம் வேலியினால் கூண்டுகட்டவேண்டியது. விதைபோட்ட ஒரு வாரம் வரையில் தினமும், பின் ஒரு மாதம்வரையில் மூன்றுநாளைக்கு ஒரு தினமும் பின் வாரத்திற்கு ஒரு முறையும் தண்ணீர் விடவேண்டும். இவ்வாரயில்லாமல் இன்றி மழைபெய்த காலத்தில் நிறுத்தியும் வெயில் காய்ந்த காலத்தில் அடிக்கடியும் தண்ணீர்விட்டுக் கொண்டு வரவேண்டும். மூன்று வருஷம் வரையில் செவ்வையாய்க் கவனித்துவந்தால் மரம் சற்றுயர்ந்து ஆறு எழடி வளர்ந்து கிளைகளும் நாலா பக்கத்திலும் பரவும். மரம் கூண்டுக்குமேல் கிளம்பிவிட்டால் பின்பு இதற்கு அவ்வளவு கண்பார்வை தேவையில்லை. தண்ணீரும் கோடைகாலத்தில் மாத்திரம் ஊற்றிக்கொண்டுவந்தால் போதுமானது. இவ்வாறு இப்பயிரை நன்கு கவனித்துவந்தால் அதிக செழிமையாக வளர்ந்து பலனைச் சீக்கிரத்தில்

கொடுக்கும். காடுகளிலும் மலைச்சார்ந்த விடங்களிலும் இம்மரங்கள் பெருங்கூட்டங்களாக வளர்கின்றன. அம்மரங்கள் நூறுவருடத்திற்குமேல் அழியாமல் நிற்கும். இருபது அல்லது இருபத்தைந்து அடி உயரம் ஒரே யொழுங்காய் வளர்ந்து பின்னர் அதனின்னும் பெரிய கிளைகளாக நாலா பக்கங்களிலும் பரவும். இம்மரங்களின் சுற்றளவு பத்தடி முதல் இருபதடி வரையி லிருக்கும். நீண்டகாலத்து மரங்கள் இதைப்பார்க்கிலும் சுற்றளவுள்ளதாக விருக்கும். இது சித்திரை வைகாசி மாதங்களில் பூத்து ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பழுக்கும். இவ்விரண்டு மாதங்களிலும் பழம் வீழுந்துகொண்டே யிருக்கும்.

பயிரிடும் நிலத்தின் எல்லை.—உதாரணமாக 100 குழி நிலம் எடுத்துக்கொள்ளுவோம். இதில் இருபத்தைந்து மரத்திற்குக் குறையாமலும் முப்பது மரத்திற்கு அதிகப்படாமலும் பயிர் செய்யவேண்டியது.

சிலவு:—நிலத்தின் சொந்தக்காரர் கொஞ்சம் கண்காணித்துவந்தால் சிலவு மிகக் கொஞ்சமாகவே யடங்கும். தாராளமாய்ச் செலவுசெய்து பயிர் செய்தாலும்,இது பலன்தரும் வரையில்,ரூ. 150-க்கு மேலாகாது.

மராமத்து.—வருஷா வருஷம் ஆடி, தை இந்த இரண்டு மாதங்களிலும் மரத்தைச்சுற்றி 5 அல்லது 6-அடி யாழம் கொத்தித் தழை, மாட்டெரு, உமி, பதர் முதலியவைகளை எருப்போட்டு பாத்திகட்டி வைக்கவேண்டும். இவ்வித மராமத்து பெரியமரங்களுக்குச் செய்யவேண்டியது. இவ்வாறு செய்வதினால் மழைகாலத்தில் தண்ணீர் நின்று இந்த எருக்களின் ஸாரம் அடிவேர்களில் உறைப்பதினால் மரத்திற்கு பலமும் நல்ல பலனும் கொடுக்க எதுவுண்டு.

இலை.—இவ்விலைகளை வதக்கிக் கால் வீக்கத்திற்கும் வாய்விற்கும் வைத்துக்கட்டினால் அவ்வியாதிகள் குணமாகும். ஆட்டுக்கு நல்லதீனி. கழனிகளுக்கு நல்ல எரு.

பால்.—வீக்கத்திற்கும் வாய்விற்கும் போட்டால் குணமாகும். அல்லாமலும் கண்வலிக்கு இப்பாலை கண்ணைச் சுற்றிலும் புருவம் முதலான விடங்களில் தடவினால் குணமுண்டு. உழவர் முதலிய கீழ்ச்சாதி மக்கள் இதைக் கையாடி வருகின்றனர்.

பூ.—கீழ்ச்சாதிமக்கள் இப்பூவை அதிகமாகப் பொறக்கிக்கொண்டுபோய் வெயிலில் காயவைத்து வெல்லப்பாகு செய்து இதில் அதைக் கொட்டிக் கிண்டி 'இலிக்கடி' எனப் பெயர்பெறும் ஓர்விதமான உருண்டைப் பக்ஷணஞ் செய்துண்டு வருகின்றார்கள். இப்பூவை தேள்கடிக்கும் அரைத்து கடிவாயிலுபயோகப் படுத்துகின்றனர்.

பழம்.—இவ்வாறு வைத்த மரங்கள் ஏழாண்டில் காய்ப்புக்கு வரும். காய்ப்புக்கு வருவது அதன் செய்நேர்த்திக்குத் தக்கவாறுண்டு. இப்பழத்தின் தோலை ஏழை ஜனங்கள் உண்டுவருகிறார்கள். பெரிய வௌவால் கூட்டங் கூட்டமாக வந்து இரவில் வீழ்ந்து பழங்களைத்தின்று கொட்டைகளை நாலுபக்கங்களிலும் போடுகின்றன. இதனால் இம்மகசூல் கெடுதி யுறுகின்றது. இதைத் தடுக்கும்வண்ணம் பெரிய வலைகட்டி வௌவாலை பிடிக்கிற வழக்கமுண்டு. காக்கைகளும் இப்பழத்தையுண்டு கொட்டைகளை வெவ்வேறிடங்களில் போடுகின்றன. இம்மகசூல் காலத்தில் ஒரு மைல் அல்லது இரண்டு மைலுக் கப்பாலுங் கொட்டைகளிருப்பதை நாம் பார்க்கிறோம்.

கொட்டை.—தோலைநீக்கிக் கொட்டைகளைப்பொறுக்கி வெயிலில் காயவைத்து அடித்து அதன் ஓட்டைப் போக்கிப் பருப்பு எடுத்து நன்றாய் எண்ணெய் கசிவுண்டாகும் வரையில் காயவைத்து பின்னர் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறதுவழக்கம்.

எண்ணெய்.—இவ்வெண்ணெய் விளக்கு எரிவதற்கும் பலகாரபக்ஷணங்கள் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. இது நெய்மாதிரி புரையுந் தன்மையுடையது. தேகத்திற்கு யாதொருவிதமான கெடுதியுஞ் செய்யாது. தேகத்திற்குச் சௌக்கியமே.

வருமானம்.—இவ்வாறு கண்காணித்துவந்த மரம் ஒன்றுக்குக் குறைந்தது இரண்டு ஆடப்பருப்பு காணும். ஆடம் ஒன்றுக்கு ரூ. 6 முதல் 8 ரூ. வரைக்கும் விற்கிறது. உத்தேசமாய்க் கணக்குப்பார்க்கின் மரம் ஒன்றுக்கு பொறுக்குக்கூலி முதலிய செலவுபோக 10 ரூ. தடையின்றிக் கிடைக்கும். 25 மரங்களுள்ள 100 குழி புஞ்செய் நிலத்திற்கு வருஷாவருஷம் 250 ரூ கிடைக்கும்.

பிண்ணாக்கு.-இதன் பிண்ணாக்குக்கு அரப்புக்கட்டியென்று பெயர். இதற்கு எண்ணெயைப் போக்குங் குணமுள்ளது. இக்காரணம்பற்றியே நங்காட்டு ஜனங்கள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு அதைப் போக்குமாறு அரப்புத்தேய்த்து ஸ்நானஞ் செய்கிறது. அல்லாமலும் வாழை முதலிய மரங்களுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது.

மரம்.—மிக வழுத்தமுள்ளது. உத்தரம் தூண் முதலியவைகளுக் குபயோகமாகிறது. தேக்குமரத்திற்கு இரசற்குணமுண்டு. இம்மரத்திற்கு அக்குணமில்லை. மரம்வேறுமரங்களைப்பார்க்கிலும்சீக்கிரத்தில் மடித்துப்போகிற தன்மையும் இதற்குக் கிடையா. இம்மரத்தை உத்திரம் முதலியவைகளுக்குபயோகித்து வீடு கட்டினால் அவ்வீடு வலிமையுடைத்தாய் நீண்டகால மிருக்கிறது. அல்லாமலும் செக்குக்கு உலக்கையாகவும் உபயோகப்படுகிறது.

கற்பனை.—இவ்வியாசத்தை யெழுதுவதின் நோக்கம் இதைப்படிப்பவர்கள் யாராவது நமக்கு அதிக பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய இம்மரத்தைப் பயிர்செய்து இதனால் தக்க பலனை யடைவார்களென்பதே யொழிய வேறில்லை.

பு. து. இரத்தினம்பிள்ளை.

சுகாதாரவிளக்கம்

HYGIENE

(பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது.)

ஆறாவது அத்தியாயம்

உணவு

66. உணவு.—"உணவு" என்பதில் நமது தேகத்திலுண்டாகும் கழிவை அப்போதைக்கப்போது ஈடுசெய்து நமது தேகத்தை வளரச்செய்து நமக்கு வலுவையும் சக்தியையுங் கொடுக்கின்ற வஸ்துக்கள் யாவையும் அடங்கியிருக்கின்றன. இவ்வாறு நாம் சொல்லுவதால் உணவு என்பதில் நாம் உட்கொள்ளும் தின்பண்டங்களும் நாம் அருந்தும் நீரும் மாத்திரமேயன்றி நாம் சுவாசிக்கும் காற்றுங்கூடச் சேர்ந்திருக்கின்றது. தண்ணீரில்லாமற் பிராணன் வெகுநாள் உணவால்மட்டும் நிற்காது. நாம் சுவாசிக்கும் காற்றால் நமது தேகத்துக்குட்புகும் பிராணவாயுதான் நமது உணவுடன் கலந்து நமக்கு வலிமையையும் சக்தியையு மளிக்கின்றது. இவ்வண்ணம் நமது ஜீவனுக்கு நீரும் காற்றும் முக்கிய ஸாதனங்களான உணவாக விருந்தபோதிலும் உணவு என்பதால் நாம் சாமானியமாய்க் குறிப்பது நாம் புசிக்கும் பதார்த்தங்களேயன்றி மற்றவைகளல்ல.

67. சரீரம் எப்பொழுதும் அழிந்துகொண்டேயிருக்கின்றது.—இன்றைக்கு நமது கைகளிலும் கால்களிலும் நாம் காணும் தசை நேற்று நாம் கண்ட தசையல்ல. நேற்றிருந்த தசையி லொருபாகம் எப்படியோ உபயோகப்படுத்தப்பட்டு அழிந்தோ அல்லது மாறியோ போயிருக்கின்றது. அல்லது நமது தசையின் ஒருபாகத்தை நாம் நமது மலப்பை வழியாகவோ அல்லது ஜலப்பை வழியாகவோ கரைத்து வெளியே விட்டிருக்கலாம். அவ்வாறு நேற்றுத் தசையழிந்த விடத்தில் இன்று வேறு தசை உண்டாயிருக்கின்றது. இவ்வண்ணம் வேறு தசையுண்டானதற்குக் காரணம் நமது உணவே.

68. குன்றும் சக்தியை ஈடுசெய்வது உணவு.—நமது உணவால் நமது தேகத்தில் சரியான இரத்தம் நாம் உண்டாக்கிக்கொள்ளாவிடில் நமது தசையழிந்து மெலிந்து நாம் மாண்டுபோவோம். நாம் எந்தத்தொழில் செய்தபோதிலும் அதனால் நமது தேகம் ஒருவித சக்தியை எப்பொழுதும் இழந்துகொண்டேயிருக்கின்றது. நாம் பேசுவது, படிப்பது, எழுதுவது, ஓடுவது, நடப்பது, பார்ப்பது, முகருவது, இவையெல்லாம் நமது தேகத்திலிருக்கும் சக்தியினாலேயே யன்றி வேறல்ல. இவ்வகைக் கருமங்கள் எது செய்தபோதிலும் அவ்வற்றிற்குத் தக்கபடி ஒருவிதமாக நமது சக்தி குறைந்துகொண்டேயிருக்கிறது; இக்குறைவை ஈடுசெய்ய உணவு கடவுளால் ஏற்படுத்தப்பட்டது.

69. உணவின் வகைகள்.—உணவு இருவகை (1) யவக்ஷாரமயம் (nitrogenous.) (2) அயவக்ஷாரமயம் (non-nitrogenous.)

யவக்ஷாரமயம் என்றால் துவரம்பருப்பு, உளுந்து இவைகளைப்போன்ற பருப்பு இனங்களிலும், மாமிசம், முட்டை இவைகளைப்போன்ற ஆகாரங்களிலுமிருக்கும் ஓர்வகை புஷ்டி.

அயவக்ஷாரமயம் என்ற உணவில் நெய், உப்பு, ஜலம் இவைகளைச் சேர்க்கவேண்டும். மாமிசம் முதலியவைகள் தேகத்துக்கு புஷ்டியை உண்டு பண்ணுவதுபோல இவைகளால் ஒருவித புஷ்டியையும் உண்டுபண்ண முடியாது. ஆனாலிவைகள் ஓர்வித உஷ்ணத்தை நமது தேகத்தில் உண்டுபண்ணி நாம் உட்கொள்ளும் ஆகாரத்தைச் சீரணம் செய்து அதை நமக்கு நல்லுணவாக்கிக் கொடுக்கின்றது. அயவக்ஷாரமயமான இவ்வாகாரத்தை இக்காரணத்தைக்கொண்டு அநனிநம் என்று சொல்லுகிறார்கள்.

70. யவக்ஷாரமயமான உணவு.—இவ்வுணவையும் நமது இரத்தத்தின் கலவையையும் சாஸ்திரப்பிரகாரம் பிரித்து ஒப்பிட்டுப் பார்த்தவர்கள் இவ்விரண்டுக்கும் எவ்வளவோ ஒற்றுமையிருக்கின்றதென்றும் இவ்வுணவை நாம் உட்கொண்டு ஜீர்ணம்செய்துகொள்ளுவதால் நாம் நமது தேகத்தைவிட்டு தினந்தோறும் இழக்கும் வல்லமையைத் திரும்ப அடைகின்றோம் என்றும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவ்வுணவின் அம்சங்கள் நாம் சுவாசிக்கும் காற்றிற் கலந்து நமது தேகத்திற்குட்புகும் பிராணவாயுவு சம்பந்தத்தால் இரத்தமாகமாறி நமது அவயவங்களுக்குப் புஷ்டியையும் வளர்ச்சியையும் கொடுக்கின்றன. எந்த எந்த அவயவங்களால் நமது சக்தியைக் காட்டுகின்றோமோ அந்த அந்த அவயவங்கள் யாவற்றையும் நாம் பரிசோதித்துப் பார்க்கும்பொழுது அவைகளிலெல்லாம் யவக்ஷாரமயமான பதார்த்தமே அதிகமாகவிருக்க நாம் காண்போம். அன்றியும் யவக்ஷாரமயமான ஆகாரம் புசிப்பதை நாம் நிறுத்துவோமானால் எல்லாவித சக்திகளும் நமது தேகத்தில் உடனே குன்றும்

இவ்வித பரீக்ஷைகளால் யவக்ஷாரமயமான ஆகாரமும்அவ்வாகாரத்தைப் பிராணவாயுபற்றி இரத்தமாகப்பண்ணுதலும் இல்லாமற்போனால் நாம் பிழைத்திருக்க முடியாது.

71. அயவக்ஷாரமயமான உணவு.—நீர், உப்புகள், கொழுப்புகள் இவைகளெல்லாம் அயவக்ஷாரமயமான ஆகாரங்கள். இவைகள் தேகத்தை வளர்ப்பவைகளல்ல என்றாலும் தேகத்திலிருக்கும் எலும்பு முதலிய சில பாகங்களிலிவைகளின் அம்சங்கள் காணப்படுகின்றபடியால் வெகு அவசியமான உணவுகளே.

72. உணவிலிருக்கவேண்டிய சேர்க்கை.—ஒவ்வொருவனுடைய போசனத்திலும் நான்குவித வஸ்துக்களின் சேர்க்கை யிருக்கவேண்டும். அவைகள் யாவையெனில்: (1) யவசாரம் கலந்த தானியம் அல்லது மாமிசம்கலந்த உண்டி(Nitrogenous food Albuminoids) (2) கொழுப்பு (fats) (3) கஞ்சியோ அல்லது சர்க்கரையோ கலந்திருத்தல் (Carbo Hydrates) (4) உப்பு (salt). இந்நான்குவித வஸ்துக்களுள் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அல்லது இச்சேர்க்கை யிருக்கவேண்டிய முறைக்கு வித்தியாசமாகச் சேர்ந்திருப்பினும் நமது சரீர சுகம் குறைவதுடன் வியாதிகள் விளையும். இந்நான்குவித பதார்த்தங்களும் சேர்ந்திருக்கவேண்டிய முறையாதெனில்:—யவசாரம் (Albuminoid) 12 அவுன்ஸ், கொழுப்பு (fat) 4 அவுன்ஸ், கஞ்சி அல்லது சர்க்கரை கலந்த உண்டி (carbo-hydrates) 30 அவுன்ஸ், உப்பு 2 அல்லது 3 அவுன்சு ஆக 48 அவுன்சு ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் ஒவ்வொரு தினமும் அவன் புசிக்கவேண்டிய ஆகாரத்தில் மேற்கூறிய பரிமாண மிருக்கவேண்டும்.

73. தண்ணீர், உணவு.—நாம் மேற்கூறிய பரிமாணமானது தண்ணீரை நீக்கிக் கூறிய பரிமாணம். இத்துடன் ஒவ்வொரு மனிதனும்அவனுடைய தேகநிறை எவ்வளவு பவுண்டுகளோ அதற்குத் தக்கபடி ஒரு பவுண்டுக்கு அரை அவுன்ஸ் வீதமாவது தண்ணீர் குடிப்பான். அல்லது தண்ணீர் கலந்த சிற்றுண்டிகளான காப்பி, தேயிலைப்பானம் முதலியன செய்வான்.

74. சேர்க்கையின் முறைப்படி கணக்கிட்டுப் புசிப்பது சாத்தியமா?—இவ்வளவு தூரம் நாம் கணக்காக இவ்வளவு அவுன்ஸ் இன்னின்ன பதார்த்தங்கள் நமக்கு உணவில் அவசியமாக வேண்டும் என்பதை ஏற்படுத்தினோம். ஒவ்வொரு வேளையும் நாம் போஜனம்செய்ய உட்காரும்பொழுது ஒரு தராசைக்கூட வைத்துக்கொண்டு இவ்வாறு நிறுக்கமுடியுமா, அல்லது அவ்வாறே செய்வதாக விருந்தபோதிலும் இப்பதார்த்தங்களை அவ்வண்ணம் நாம் பிரித்தெடுக்க முடியுமா என்ற ஸந்தேகம் தோன்றலாம். இக்காலத்தில் நாம் புசிக்கும் ஆகாரபதார்த்தங்களின் குணங்களை எடுத்துச்சொல்லும் கிரந்தங்கள் எவ்வளவோ ஏற்பட்டிருக்கின்றன. நாம் முற்கூறிய குணங்களில் எவ்வெவைகள் எம்முறையிற் கலந்திருக்கின்றன என்பது கண்டெடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. அக்கணக்கை ஒருவாறு அறிந்துகொண்டு ஒவ்வொருவனும் தனது புத்தியாலும் யுக்தியாலும் தான் உட்கொள்ளவேண்டிய ஆகாரத்தின் பதார்த்தங்களையும் அவைகளின் பரிமாணத்தையும் தனக்குத் தானாகவே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

75. எத்தனை தரம் ஆகாரம் புசிக்கவேண்டும்?—நமக்கு ஒவ்வொரு தினமும் 48 அவுன்ஸ் ஆகாரம் வேண்டும் என்று சொன்னோம். இதைச் சுலபமாய்ச் ஜீர்ணம்செய்துகொள்ள காலை எழுந்ததும் 10 அவுன்ஸ் காலைபோஜனத்தில்; 20 அவுன்ஸ் பகலில்; மூன்றாம் யாமத்தில் 7 அவுன்ஸ்; இரவில் 11 அவுன்ஸ் இவ்வாறு உட்கொள்ளவேண்டும்.

76. நமது ஆகாரத்தை ஜீர்ணம்செய்து கொள்ளுவதெப்படி?—நாம் நமது ஆகாரத்தைச் சுகமாக ஜீர்ணித்துக்கொள்ள இரண்டு நியமங்கள் அவசியமாயிருக்கவேண்டும். முதலாவது நாம் உட்கொள்ளும் ஆகாரம் நியாயமாக ஜீர்ணிக்கப்படும் நிலைமையிலிருக்கவேண்டும். இரண்டாவது நமது தேகத்துக்குச் சில நிலைமைகள் அவ்வாகாரத்தைச் சீராகப் பற்றிக்கொண்டு அதை ஜீர்ணம் செய்யவேண்டும்.

77. ஆகாரத்தின் நிலைமையாவது யாது?—சில உணவுகள் கடினமாகவும், சில மிருதுவாகவும், சில எளிதில் கரையக்கூடியவையாயும் சில கரைவது கஷ்டமாகவும் இருக்கும். உதாரணமாக நெல்லரிசி அன்னம், செவ்வரிசி, வாற்கோதுமை, உருளைக்கிழங்கு இவைகளெல்லாம் வெகு எளிதில் $1\frac{1}{2}$ மணிக்குள் நமது தேகத்தில் ஜீர்ணிக்கப்பட்டு உருமாறிவிடும். வெண்ணெய், நெய், ரொட்டி இவைகளைச் ஜீர்ணித்துக்கொள்ள 3 அல்லது 4 மணிநேரம் வேண்டும். ஆனால் எளிதிற் கரையும் ஆகாரங்களையும் அவ்வாறு கரையாத மற்றவித ஆகாரங்களையும் கலந்து புசிப்பதால் பொதுவாக ஜீர்ணகுணம் நமது தேகத்தில் விருத்தியாகின்றதென்பது பிரவசித்த வைத்தியர்களின் கொள்கை. இதற்காகவே நாம் புசிக்கும் அன்னத்தை அன்னமாகவே புசிக்காமல் நெய், பருப்புமுதலியவைகளைக் கலந்து புசிக்கின்றோம். மாமிசங்கலந்த ஆகாரங்கள் பக்குவமாகவும் மிருதுவாகவு மிருக்கும் பட்சத்தில் மற்ற ஆகாரங்களைவிட எளிதிற் செரிக்கின்றன.

உழவுநூல்

AGRICULTURE

(113-ம் பக்கத்தொடர்ச்சி)

5. மனிதர்களின் மலஜலம்.—இதுதான் ஜப்பான், சீனா முதலிய தேசங்களில் வெகு விசேஷமாய் எருவாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது கொஞ்சமும் அத்தேசங்களில் வீணாக்கப்படுகிறதில்லை. இவ்விராஜதானியின் குடிகளின் பெரும்பான்மையோருக்கு இதை எருவாய் உபயோகப்படுத்தலாம் என்பதே ஏற்படாத விஷயம். இதை எலும்புத்தூள், உலர்ந்த களிமண் பொடி, கரிப்பொடி, வாள்தூள் முதலியவைகளால் அதன் சத்துகள் ஆவியாய்ப் போகாமல் நன்றாய் மூடிவைத்து, வெய்யிலுக்கும் மழைக்கும் காப்பாற்றும்பொருட்டு கக்கூசுகளையும் இந்த எருசேர்க்கும் இடத்தையும் கூரை அல்லது ஓடுபோட்டு மூடிய இடங்களில் இந்த எருவைச் சேகரித்து நன்றாய் மட்கிய பின், பயிருக்கு உபயோகித்தால் அங்கங்கு நமது கண்களுக்கு மலஜலம் அசுத்தமாய்ப் புலப்படாமலும், தேகசௌக்கியத்திற்குக் கெடுதியை விளைவிக்காமலும் பூமிக்கு நல்ல உரமுங்கொடுத்து நன்றாய் விளையும் பயிர்களை உற்பத்திசெய்யக்கூடிய எருவாகவும் உபயோகமாகும். இந்த எருவின்பயன் முனிசிபல் டவுன்களுக்கு சமீபத்திலிருக்கும் குடியானவர்களில் சிலருக்குமட்டில் தெரியும். சென்னையில் மலஜலாதிகள் கழுவிய சாக்கடைத் தண்ணீர் பாயும் பூமிகளில், புல் முதலியவை வெகு செழிப்பாய் வளர்வதைக் காணலாம். மனிதரின் மலம் ஆடு மாடு மலத்தைவிட எருவுக்கு விசேஷம். ஏனெனில் ஆடுமாடுகள் வைக்கோல், புல் முதலிய அதிக சத்தற்ற ஆகாரங்களைத் தின்பதனால் அவைகளின் மலத்தில் ஜீரணிக்காத வைக்கோலும் புல்லும் சேர்ந்திருக்கிறது. இது தண்ணீரில் மனிதருடைய மலத்தைப்போல் அவ்வளவு சீக்கிரத்தில் கரையமாட்டாது. ஆகையால் பயிருக்கு உடனுக்குடன் சீக்கிரமாய் உதவாது.

நன்றாய் மட்கின எருவை பூமிக்கு ஒரு மகசூலுக்கு ஒரே தடவையாக முதலிலேயே போடுவதைக் காட்டிலும் அதே அளவு எருவைப் பல தடவையாக உழுவதற்குமுன் ஒரு தரமும், ஒவ்வொரு தரம் களையெடுத்தவுடன் கொஞ்சம் கொஞ்சமாகவும், நன்றாய்ப் புஷ்பித்தவுடன் புஷ்டியாக ஒரு தரமும் இம்மாதிரி பலதடவைகளில் எருப்போட்டால் விசேஷ மகசூல் கிடைக்கும். ஒரு நிலத்தில் சாதாரணமான மகசூல் உற்பத்தி செய்யும்படி பயிரிடுவதை பூமியை ஜாஸ்தியாய்ப் பயிரிடுவதென்றும் (Extensive farming) அதே நிலத்தில் அப்படி கிடைப்பதைவிட அதிகமாய் மாசூல் உற்பத்தி செய்யும் சாதனங்களைக்கொண்டு பயிரிடுவதை அதிக மாசூல் உண்டாகும்படி செய்யும் தொழில் (Intensive farming) என்றும் சொல்லப்படுகிறது. அன்னிய தேசங்களாகிய ஆப்ரிக்கா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, ஜப்பான், சீனா முதலிய தேசங்களில் ஒரேநிலத்தில் அதிக மாசூல் உற்பத்தியாகக்கூடிய சாதனங்களைத் தங்களால் கூடியானவரையில் பரிசோதித்து அம்மாதிரி நடந்து அதிகலாபம் அடைகிறார்கள். ஜனங்கள் நாளுக்குநாள் விருத்தியாவதாலும் அதேமாதிரி சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்கள் விருத்தியாகாததாலும் அதிக மாசூல் உற்பத்தியாகக்கூடிய வழிகளை நாம் அவசியம் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்நாட்டிலுள்ளவர்களாகிய நாமும் கேள்வி மூலமாயும், அந்நிய தேசங்களுக்குச் சென்று ஆங்காங்கு நடக்கும் புதிதாயும் விசேஷமுமான மாதிரிகளைக் கண்ணால் ஊக்கமாய்ப் பார்த்தும் காரணங்களை விசாரித்தும் அம்மாதிரி நாம் நடந்தால் நம்முடைய நாட்டுப் பயிர்த் தொழிலும் அதற்கு அநுகுணமான இதர கைத்தொழிலும் விருத்தியடையும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுது நம்முடைய நாட்டிற்கு பயிர்த்தொழிலுக்குத் தேவையான கருவிகளைச்செய்யப் போதுமான தச்சர்களும் கருமான்களும் கிடையாது. இத்தொழில்களைச் செய்யப் பயின்றவர்கள் கம்மாள ஜாதியார் ஒருவரே. அதேமாதிரியாய்த்தான் தண்ணீர் இறைக்கும் பரியைத் தெய்ப்பவர்களும் தோலில் வேலைசெய்பவர்களும் சக்கிலி ஜாதியர் ஒருவரே. இந்துதேசத்தில் இவ்வாறிருக்க அயல் நாடுகளில் மேற்படி தொழில்களை ஒவ்வொருவரும் செய்து வருகிறார்கள் என்று ஊகிக்கலாம். அந்நிய தேசங்களில் இவ்வாறு ஜாதிவித்தியாசமும் ஜாதிவித்தியாசத்திற்குத் தகுந்த தொழிலும் இராது என்றும் ஊகிக்கலாம். பூமியை ஆழமாய் உழுதும் கொத்தியும் பயிரிடுவது அவசியம். இதற்குத் தேவையான கருவிகளைக் குடியானவன் தானே செய்யும்படியாக பயிற்சியிருந்தால் மேற்படி கருவிகளும் நல்ல மாதிரியானதாய்ச் செய்துகொள்ள இடமுண்டு. ஆழமாய்க்

கொத்திப் பயிரிடுவதனால் அடிமண் நன்றாய்க்கிளரப்பட்டுக் கீழ்மேலாகி பூமியிலிருக்கும் பயிருக்கு விரோதமான களை புல் பூண்டுகள் மட்கியோ உலர்ந்தோ தொலைந்து பூமிக்குள் நன்றாய்க் காற்று சென்று பயிருக்குவேண்டிய உணவைப் பக்குவப்படுத்திவைக்கும். இம்மாதிரி எரு இடாமல் பயிரிட்டால் பூமியிலுள்ள சத்து முழுவதும் நாளுக்குநாள் குறைந்துபோய் நல்லபலன் தரமாட்டாது. மனிதர்கள் உண்ணும் உணவு தானியப் பயிர்கள் எல்லாம் பயிரின் சத்துக்கள். பயிர்கள் வேர்மூலமாய் ஜலரூபமாய் பூமியிலுள்ள சத்துக்களை உட்கொள்ளும். ஆகையால் பூமியின்மூலமாய் பயிர்கள் உட்கொள்ளும் சத்துக்கள் ஜலத்தில் கரையக்கூடிய நிலைமையில் நிறைந்திருக்கவேண்டும். இது போதுமான அளவு பூமியிலேயே கிடைக்கமாட்டாது. மட்கின எரு அல்லது ஆடு மாடு மனிதர்களின் மல ஜலாதிகளும் செடி விருக்ஷம் இவைகளின் மட்கின இலைதழைகளும், பயிர்களுக்கு நல்ல உணவாகும். ஆகையால் இவைகளை நன்றாய்ச் சேர்த்து காப்பாற்றி தகுந்தகாலத்தில் பூமிக்கு உரமாக இடவேண்டும். ஜீவராசிகள் அனைத்தும் பயிரினால் போஷிக்கப்படுவதால் ஜீவராசிகளின் மல ஜலம், எலும்பு, மாம்சம், ரத்தம், முதலிய யாவும் பயிருக்கு நல்ல உணவாகும். பூமியில் உற்பத்தியான உணவுகளைப் புசிக்க நாம் கருதுவதுபோல் பூமியிலிருந்து எடுத்த பயிருணவைத் திருப்பிக்கொடுக்க நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆகையால் மனிதர்களுடைய மலத்தைப் பயிரிடும் பூமிகளுக்குத் திருப்பாமல் வீணில்போகும்படி விடுவது மெத்த பிசகு. இது வெகு அநியாயம். பயிரிடும் குடியானவன் ஒவ்வொருவனும் இதை நன்றாய்க் கவனிக்கவேண்டும். அநேக கிராமங்களில் மனிதர்களின் மலத்தைப் பன்றிகள் தின்று ஊரைச் சுத்திசெய்கின்றன. இந்த ஊர் தோட்டிகளான பன்றிகளின் மலத்தை இதை வளர்க்கும் ஒட்டஜாதியார் சேகரஞ் செய்து தங்கள் நிலத்திற்கு எருவிட்டு விசேஷபலன் அடைகிறார்கள். ஆகையால் பன்றியின் மலமும் நல்ல எருவாகும். ஆடு, மாடு, மனிதன், நாய், நரி, பக்ஷிகளின் முதலிய மலஜலாதிகளும் எலும்புகளும் மீன்களும் நல்ல எருவாகும். மணிலாக்கொட்டையென்று சொல்லும் நிலக்கடலை, கொட்டை முத்து, வேப்பங்கொட்டை, புங்கு, புன்னை, இலுப்பை, இவைகளின் பிண்ணாக்குகளும் நல்ல எருவாக உபயோகிக்கப்படும். காப்பி தேயிலைத்தோட்டம் வைத்திருக்கும் அயல்நாட்டார்கள் ஏஜண்டுகள் மூலமாய் இவைகளை எருவிற்காக நாட்டுப்புறங்களிலிருந்து வாங்கி உபயோகித்து விசேஷ லாபமடைவதை நம் தேயத்துக்குடிகள் கண்ணாரக்கண்டும் தாங்கள் மேற்கண்டவைகளை எருவாக உபயோகப்படுத்தி லாபமடையாமலிருப்பதற்குக் காரணம் இவர்களுடைய புத்திக்கும் யோசனைக்கும் எட்டாமையேயொழிய வேறல்ல. மேற்கண்ட எருவெல்லாம் எல்லாவித நிலத்திற்கும் எல்லாப்பயிர்களுக்கும் உதவும். மாட்டுச்சாணத்தின் மட்கின எருவுடன் எலும்புத்தூளைக்கலந்து உபயோகித்தால் விசேஷபலனைத்தரும். சில நிலங்களுக்கும் சில பயிர்களுக்கும் விசேஷ எருவும் அவசியமாகும். இது ரசாயனவித்தையால் பரிசீலனை செய்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமாதலால் இங்கு விவரிக்கவில்லை. ஆனால் கடலை, துவரை, உளுந்து, பச்சைப்பயிறு, தட்டைப்பயிறு அல்லது காராமணி, அவரை அல்லது மொச்சை, மணிலா முதலிய பயிர்கள் சுண்ணாம்பு அல்லது சுக்கான்கலந்த பூமியிலும் கீரை, தென்னை, கேழ்வரகு, புகையிலை, மிளகாய், கத்திரி, முதலிய பயிர்கள், மரச்சாம்பல் அல்லது மரஉப்பு கலந்த பூமியிலும், வெடியுப்பு எருப்போட்ட பூமியிலும் சில கடலோரங்களிலும் நன்றாய்ப் பயிராகின்றன. நிலவளத்திற்குத் தகுந்தபடி எருவிட்டுப் பயிர்செய்வது அவசியம். எலும்புத்தூளை மாட்டுச்சாணம் குப்பைகளுடன் மட்கவைத்து வெடியுப்புடன் கலந்தால் நல்ல எருவாகும். மணலைக் களிமண் பூமிக்கும், வண்டலைக் கல்லாம்பரிசு பூமிகளுக்கும் மணல் பூமிக்கும், எருவாகத் தகுந்தபடி உபயோகிக்கலாம். புற்றமண் சப்பாத்துவேர் மண்ணும் நல்ல எருவாகும்.

ஒரேநிலத்தில் பலவிதமான பயிர்களை மாறி மாறி சாகுபடிசெய்வதால் நிலத்தின் சத்து குறையாது. விளைவும் சரியாகக் காணும். ஒரேபயிரை சாகுபடிசெய்வதால் வரவர அதன் விளைச்சல் குறைவுபட்டு பிறகு அந்தப்பயிர் கொஞ்சமும் பலன் தாராமல் போய்விடுகிறது. இம்மாதிரி மாறிமாறிப் பயிரிடுவதற்கு முதற்பயிர் பூமிக்குமேலேயே வேர் படக்கூடிய நெல், கம்பு, சோளமானால், இரண்டாவது பயிர், பூமியில் வேர் இறங்கக்கூடிய அவுரி, வன்னி, மரவன்னி, கொட்டைமுத்து, சணல், புளிச்சை முதலிய நார்ப்பயிர்களாகவும், மூன்றாவது பயிர் மொச்சை, துவரை, தட்டைப்பயிறு, உளுந்து, பச்சைப்பயிறு, கொள், நிலக்கடலை, முதலிய காய் தானியப்பயிர்களாகவும், நான்காவது, புகையிலை, கத்திரி, மிளகாய், மஞ்சள், கருணை, கரும்பு, என் முதலிய பயிர்களாகவும், நிலவளம், நீர்வளம், எருபலம் இவைகளுக்குத் தக்கபடி பயிரிடலாம். இம்மாதிரி பலவிதமான பயிரை மாறிமாறிச் செய்தால் பூமியிலுள்ள பலவிதமான பயிருணவுகள் பயிருக்கு உபயோகமாகி பூர்த்தியான பலனைக் கொடுக்கும். ஒரே ஜாதியான பயிரை அடுத்தடுத்துச் செய்வதால் அதேவிதமான பயிரின் ஆகாரம் பூமியில் குன்றி சரியான பலன் சுயமாய்த் தராது. சிலவேளை அந்தப்பயிரே நன்றாய்ப் பிடிக்காமற்போகும். ஆனால் அந்த நிலத்திற்கு நல்ல பசந்தான எருவிட்டு, வண்டலடித்தால் அதே பயிரை இடலாம். ஆனாலும் மேற்படி பயிரின் விளைச்சல் நாளுக்கு நாள், நாளடைவில் குறைந்துவரும்.

(இன்னும் வரும்.)

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

அங்கம் II.

களம் 1. மதுரை ரகுநாததேவரின் வீட்டிலோர் அறை.

(கௌதமிதேவி வருதல்.)

கோது, வா, அதுதானே உன் பெயர்?

கௌ.—கோது! பெற்றப் பெயரிட்டாயோ, கோது என்று கூப்பிடுகிறதற்கு? என்னை எல்லாரும் கௌதமியென்று கூப்பிடுவார்கள். கோதாம், கோது! குப்பை!

நா.—நீ பொய் சொல்லுகிறாய்; உன் பெயர் கோது தான்; நல்ல கோது; நீலிக்கோதுகூட; அழகிய கோது; என்னின் உயிர்க்கோது;—நான் சொல்லுகிறேன், கேள்; சென்ற சென்ற விடமெல்லாம் உனது சாந்தகுணத்தைப் புகழக்கேட்டேன்; உனது நற்குணங்களையும் அழகையும் பற்றி அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் உன் அழகுமாத்திரம் சொல்லுக்கடங்காது; அதுமுதல் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று மிகுந்த ஆவலுள்ளவனாகி ஓடிவந்தேன்.

கௌ.—ஓடியா வந்தாய்? நல்லவேளைதான், ஓட்டத்தில் நீ கைதேர்ந்தவன்தானோ? ஆனால் இவ்விடத்தைவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் விடு. முதலிலேயே, நீ ஓடும்பொருள் என்று அறிந்துகொண்டுவிட்டேன்.

நா.—என்ன, ஓடும்பொருள் என்ன?

கௌ.—ரதம்; ரதம் தான் ஓடும்.

நா.—அதுதான் விடாதே; நான் ரதமானால் நீ என்மீது உட்காரு; நான் தூக்கிக்கொண்டு ஓடுகிறேன்.

கௌ.—அப்படியானால் நீ சுமைதூக்கும் கழுதையா? கழுதையல்லவா பாரம் தாங்கும்!

நா.—ஸ்திரீகள் எல்லோரும் கர்ப்பமாகவிருக்கையில் பாரம் தூக்குகிறார்கள். ஆதலால் நீயும் பாரந்தூக்கக்கூடிய கழுதைதான்.

கௌ.—அப்படியானால் நீ கழுதை மகனோ?

நா.—நல்லகோது நீ. என் தேள்போலக் கொட்டுகிறாய்?

கௌ.—நான் தேளானால் என் கொடுக்குக்குப் பயப்படு.

நா.—நான் ஏன் பயப்படுவேன்? கொடுக்கைப் பிடுங்கும் வழிதான் எனக்குத் தெரியுமே.

கௌ.—கொடுக்கு இருக்குமிடம் தெரிந்தாலல்லவா பிடுங்குவாய்?

நா.—தேளுக்குக் கொடுக்கு வாலில் இருக்கிறதென்று யாருக்குத் தெரியாது.

கௌ.—நீ என் கொடுக்கைப் பிடுங்கினால், நான் உன்வாலையே ஒட்ட அறுத்துவிடுவேன். தெரியுமா? நல்லவேளையில் போய்விடு; நீ இருக்குமிடத்தில் வேண்டுமானால் ஒருஆளை வைக்கிறேன். கடுவன் குரங்குமாதிரி வந்தாயோ, இங்கே?

நா.—நான் கடுவன் குரங்கானால், நீ எனது மந்திக் குரங்கு. ஏன் என்னைக் கண்டு இப்படிக் குரைக்கிறாய்?

கௌ.—திருடனைக் கண்டால் நாய் குரைக்காதா?

நா.—நானா திருடன் என்கின்றாய்?

கௌ.—சீக்கிரத்தில் கண்டுபிடித்துவிட்டாய்; நீ கெட்டிக்காரன்தான்.

நா.—உன்னவ்வளவு கெட்டிக்காரத்தனம் இருக்கும் என்பதில் ஆக்ஷேபனையில்லை.

கௌ.—இருந்தாலும் முகத்தில் அசடு தட்டுகிறதே!

நா.—எல்லாம் தொல்லையினால்தான்.

கௌ.—அந்தத் தொல்லை எனக்கு வேண்டாம்.

நா.—கோபித்துக்கொண்டு போகாதே; சற்றிருந்து நான் சொல்வதைக் கேள்.

கௌ.—எல்லாம் இருந்தது போதும்; இருந்தால் உனக்கு வருத்தம் உண்டாகும்.

நா.—எனக்கா, எனக்கா வருத்தம் உண்டாகும்? ஒருபோதுமில்லை; நீ சாந்த சிரோமணியாயிற்றே. உன்னால் வருத்தம் எப்படி வரும்? நீ முரடு என்றும் துஷ்டையென்றும் வெடுவெடுப்புக்காரி யென்றும் சொல்லக் கேட்டேன்; சொன்னவரெல்லோரும் பெரும் பொய்யர் என்று இப்போதுதான் தெரிகின்றது; உன்னைப்போன்ற குணவதியை நான் கண்டதேயில்லை; நீ மரியாதையின் உருவமாகவிருக்கிறாய்; உன் முகத்தில் கோபம் என்பதே கிடையாது; பேசும்போது எதிர்த்துப் பேசும் வழக்கம் உன்னிடத்தில் இல்லவே இல்லை; உனது சௌலப்பியமும் அன்பும் இரக்கமும் வேறு ஒரு ஸ்திரீயிடமும் காணப்படவேமாட்டா; அப்படியிருக்கையில், நீ நீலியென்றும், துஷ்டையென்றும், வாயாடியென்றும், ஜனங்கள் அநியாயமாய்ப் பழி கூறுகிறார்களே! பாழும் பூமியல்லவா, இது? பூங்கொடிபோன்ற உன் அழகும் ரூபலாவண்யமும் கண்ணைப் பறித்துக்கொண்டு போகின்றனவே! கொஞ்சம் நட; உனது நடையழகைப் பார்ப்போம்.

கௌ.—ஏது; கெட்டுப்போனால் போலிருக்கிறதே! யாரிடம் அதிகாரத்தைச் செலுத்துகிறாய்?

நா.-அடடா! ரதிபோலவிருக்கிறாயே! நீதான் ரதி; ரதியென்று சொல்லப்பட்டவளை கண்டவர் யார்?

கௌ.—இந்தக் கதையெல்லாம் எங்கிருந்து கற்றுக்கொண்டாய்?

நா.—எனக்கு ஒருவர் கற்றுக் கொடுக்கவேண்டுமோ? அதெல்லாம் சுயார்ஜிதம்; இந்த வார்த்தையையெல்லாம் விட்டுவிட்டு, வந்த காரியத்தை நேராகச் சொல்லிவிடுகிறேன்:— உன்னை எனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக உன் தகப்பனார் சம்மதித்துவிட்டார்; சீதனமும் நிச்சயமாய்விட்டது; உனக்கு இஷ்டம் இருக்குமோ, இராதோ. நான் உன்னைக்கல்யாணம் பண்ணிக்கொள்ளத்தான் போகிறேன்; என்னைத்தவிர நீ வேறு ஒருவரையும் கல்யாணம் செய்துகொள்ளப் பிரியப்படக்கூடாது; உன்னை வசப்படுத்தப் பிறந்தவன் நான்தான்; நீவிக்கௌதமியினின்றும் உன்னைச்சாந்தக்கௌதமியாக்குவது என் பொறுப்பு. இதோ உன் தகப்பனார் வருகிறார்; தடுத்துச் சொல்லாதே; நான் உன்னைத்தான் மனைவியாக அடையப்போகிறேன்.

(ரகுநாததேவர், பொன்னம்பலத்தேவர், சுப்பராயன் வருதல்.)

ரகு.—என்ன, நாராயணதேவரே! என்ன சங்கதி? வழிக்கு வருவாளா?

நா.—வழிக்கு வராமல்போவது எப்படி? நான் பிடித்தால், முடியாத காரியமுமுண்டோ?

ரகு.—குழந்தாய்! என்ன சமாசாரம்?

கௌ.—நான் உம்முடைய குழந்தையா? இந்தப் பைத்தியம்பிடித்த மடையனுக்கு என்னைக் கல்யாணம் செய்துகொடுப்பதாய் நீர் நிச்சயத்திருக்கையில் என்மீதில் உமக்குள்ள புத்திரவாத்ஸல்யம் வெளியாகின்றதே! இவனை உடையார் பாளையம் காடுகளில் பிடித்துவந்தீர்களோ?

நா.—ஐயா! சமாசாரம் இதுதான்:— அவளைப்பற்றிச் சொல்லிய நீரும் மற்றையோரும் பொய்யேதான் சொன்னீர்கள்; அவள் மூர்க்கத்தனத்தோடிருந்தால், அது ஒரு காரியத்துக்காகத்தான் அவளை வாயாடியென்று சொன்னீர்களே! அடக்கம் என்பது அவளிடத்தில்தான் பிறந்திருக்கிறது; கோபம் என்பதே அவளிடம் கிடையாது. எப்போதும் சாந்தமூர்த்தியாகவே இருக்கிறாள்; பொறுமையில் இவளுக்குச் சமானமாக பூமாதேவியைத்தான் சொல்லவேண்டும்; கற்பிலோ, அருந்ததிக்குச் சமானமென்னலாம்; நெடுகவார்த்தை யேனென்?—நாங்கள் இருவரும் திருப்தியடைந்துவிட்டோம்; நாளை ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தம் வைத்துவிடலாம்.

கௌ.—ஞாயிற்றுக்கிழமையில் முதன் முதலில் உனக்குப் பாடைகட்டிவிட்டு அப்புறம் மறுவேலை செய்கிறேன்.

பொ.—கேட்டாயா! முதலில் உனக்கு பாடைகட்டுவாளாம்.

சுப்.—பேஷ்! இதுதானா உன் சாமர்த்தியம்; ரொம்பவும் நன்றாகவிருக்கிறது!

நா.—நீங்கள் பேசாமலிருங்கள்; எனக்கு அவள்தான் வேண்டும்; நானும் அவளும் ஒத்துப்போய்விட்டால் உங்களுக்காகவேண்டியதென்ன? தனியாகவிருக்கையில் என்னிடம் அவள் சொன்னதைக் கேட்டால் தெரியும் இதுவரையில் வாயாடியாக விருந்தது யாரேனும் இரண்டாம் பேர் இருந்தால்தான் தனியாக விருக்கையில் வெகு சாந்தமாகவிருப்பாள்; என்னுடன் தனியாகவிருக்கையில் என்னைக் கட்டிக்கொண்டாள்; ஆயிரம் தரமிருக்கலாம், ஓயாமல் திணறிப்போகும்படி முத்தமிட்டுக் கொண்டாள்; ஒரு நிமிஷத்துக்குள் என்னை மயக்கிவிட்டாள்; உங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் பிராசீன சம்பிரதாயிகள்.— கௌதமி! நான் போய் வருகிறேன். கல்யாணத்துக்கு வேண்டிய துணிமணிகள் வாங்கிக்கொண்டு உடனே வந்து விடுகிறேன்— ஐயா, நீங்கள் எல்லாரும் தயாராக விருங்கள். இப்போதே கல்யாணக் காரியங்களைத் துவக்கவேண்டும்.

ரகு.—எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை; நீர் போய்வாரும்; முகூர்த்தத்துக்கு முன்னடியே வந்துவிடும்.

சுப்பராயன் } பேஷ்! நாங்கள் சாக்ஷி.
பொன்னம்ப }

நா.—நான் உறையூருக்குப் போய் வருகிறேன். ஞாயிற்றுக்கிழமை நெருங்குகிறது; தாமதிக்க நேரமில்லை; நகைகள் வாங்குவதற்குக் கொஞ்சம் சாவகாசம் வேண்டுமல்லவா? கோது! விசாரப்படாதே! ஞாயிற்றுக்கிழமை காலையில் கட்டாயம் வந்து விடுகிறேன். (நாராயண தேவரும் கௌதமியும் வேறுவேறு வழியாகப்போதல்)

பொ.—என்ன ஒரு நிமிஷத்தில் நிச்சயமாய் விட்டதே. என்ன ஆச்சரியம்!

ரகு.— உபயோக மில்லாத பொருளை வைத்துக் கொண்டிருக்கும் கடைக்காரன் குறைந்தவிலைக்காவது அப்பொருளைக் கொடுத்துவிடப் பிரியப்படுவானல்லவா? அவர்கள்இருவரும்சந்தோஷமாய் வாழவேண்டியது தான் எனது பிரார்த்தனை.

பொ.—அவர்கள் பாடு ஒழிந்தது; இனிமேல் உமது இளைய பெண்ணைப்பற்றி யோசிக்கவேண்டியது தான்; நான் தான்முதன் முதலிலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்குத்தான் கொடுக்க வேண்டும்.

சுப்.—நான் அவள்மேல் கொண்டிருக்கும் காதலை வெளியிட்டுச் சொல்லமுடியாது; அது அளவிலும் அடங்காது. ஆதலால் எனக்குத்தான் அவளைக் கொடுக்கவேண்டும். (தொடரும்.

இந்துலேகை

இரண்டாவது அத்தியாயம்

(ஒரு மலையாள நாவல்)

(முன் தொடர்ச்சி)

"மனதிலுண்டாகும் இச்சைகளெல்லாம் நிறைவேறி வரும்போது மனது நிமித்தமாய் உபத்திரவம் உண்டாக இடமேயில்லை. இந்துலேகை, நீ அபேட்சிப்பதெல்லாம் நிறைவேறி வருகிறபடியினாலேதான் உன் மனோதிடத்தைப் பரீட்சித்தறிய பிரமேயம் ஏற்படாதிருக்கிறது" என்றான் மாதவன்.

"ஆனால் கிட்டாப்பொருளின்மேல் நான் ஒருபோதும் மனதைச் செலுத்துவதில்லையே. இதுவே என்மனதின் சுபாவமான குணமென்றறிந்து நான் சந்தோஷிக்கிறேன். ஆகவே, மாதவா, நீ சொல்வது முற்றிலும் நிஜமே; என் மனது வியாபரிப்பதில் எதிலும் எனக்கு விசனிக்கும்படி இடமுண்டாவதில்லை" என்றாள் இந்துலேகை.

"எப்போதும் அப்படியே இருக்குமா? அப்படியிருக்கும்பட்சத்தில் மனதை அடக்கும்படியான சக்தி உனக்கிருப்பதே அதற்குக் காரணமல்லவா?" என்றான் மாதவன்.

"இல்லை. மனதை ஸ்வாதீனப்படுத்தவேண்டுமானால், அதற்கு வேறே சில சாதனங்களைக் கைக்கொள்ளவேண்டும். தைரியம், பொறுமை முதலிய குணங்களே அந்த சாதனங்களாகும். அப்படிப்பட்ட சாதனங்களின் சகாயமில்லாமலே என்மனது நிம்மதியாயிருக்கிறது. சாந்தமும் சுவாதந்திரியமும் என் இயற்கையிலேயே ஏற்பட்டுள்ள குணங்களென்று நினைக்கிறேன்." என்றாள் இந்துலேகை.

"ஆனால், இந்துலேகை, தற்சமயத்துக்கு அசாத்தியமாயிருந்த காரியம் யாதொன்றிலும் உன்மனது ஒருபோதும் வியாபரித்ததில்லையா?" என்றான் மாதவன்.

"இல்லையென்றே எனக்குத் தோற்றுகிறது. ஆனால், 'தற்சமயத்துக்கு அசாத்தியம்' என்று நீ சொன்னதன் அர்த்தந்தான் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. சாதாரணமாக சாத்தியமாயிருக்கும் காரியங்களைப்பற்றித்தான் நான் சொன்னது" என்றாள் இந்துலேகை.

"நான் ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்" என்றாரம்பித்துச் சொல்லலுற்றான் மாதவன். "அதிமனோஹரமும் விசேஷ பரிமளத்தோடு கூடியதுமான ஒரு புஷ்பத்தை நீ பார்க்கிறாயென்று வைத்துக்கொள்வோம். அதைப் பார்க்கும்போது அது சுலபமாய்க் கிட்டாதென்று உனக்குத் தெரிந்தபோதிலும், அதைப்பறித்து உன்கையில் வைத்துக்கொள்ளவும் அதன் சுகந்தத்தை அனுபவிக்கவும் உன் மனதில் அபிலாஷை உண்டாகாதா? உன் அபிலாஷை அந்தக்ஷணமே பரிபூர்த்தியாவதாயிருந்தால் எவ்வளவு ஆவலாயிருப்பையோ அவ்வளவு ஆவல் அது பரிபூர்த்தியாகாமலிருக்கும்போதுகூட கொள்ளமாட்டாயா? அல்லது, உன் அபிலாஷை சாத்தியமோ அசாத்தியமோ தக்ஷணமே சாத்தியமோ ஆலசியத்தில் சாத்தியமோ என்னும் இந்த ஆலோசனைகளை அநுஸரித்துத்தான் நீ புஷ்பத்தின்மேல் ஆசை கொள்வையோ?"

"அந்தப் புஷ்பத்தைக் காணும்போதே அது மனோஹரமாயும் பரிமளத்தோடு கூடியதாயுமிருக்குமென்று எனக்கு நிச்சயமுண்டாகும் பட்சத்தில்," என்று தொடங்கி விடைபகரலாயினள் இந்துலேகை, "அதைப் பார்த்துப்பார்த்து நான் ஆநந்தக்களிப்படையக்கூடும். ஆனால் அதைப் பறித்துக் கையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் ஆசைகொள்ளுமுன் அதைப் பறிப்பது நியாயமும் சாத்தியமுமாகுமென்று எனக்கு நிச்சயமாயேற்படவேண்டும். இல்லாவிட்டால் நான் அதன்மேல் ஆசைப்படவேமாட்டேன். இதுதான் என்மனதின் சகஜமான குணமென்று எனக்குத் தோற்றுகிறது."

"இந்துலேகை" என்று விளித்துத் தர்க்கிக்கலாயினன் மாதவன், "இப்போது நீ சொன்னதும் முன் நான் சொன்னதும் ஒன்றுதானே. 'ஆநந்தக்களிப்படையக்கூடும்' என்று நீ சொன்னதன் அர்த்தம் அந்தப் புஷ்பத்தைப்பற்றி மனதில் சூக்ஷமமாய் ஆநந்திப்பதென்பது மாத்திரமல்ல; அதை அடையவேண்டுமென்று நீ ஆசைகொள்வாயென்றும் ஏற்படுகிறது. ஆனால் உன் அபிலாஷையை நிறைவேற்றிக்கொள்ள நீ செய்யும் பிரயத்னங்கள் அதை அடைவது சுலபசாத்தியமோ கஷ்ட சாத்தியமோ என்பதை அனுசரித்திருக்கக்கூடும். இதுதான் நீ இப்போது சொன்ன வார்த்தையின் அர்த்தமாயிருக்கலாமென்று எனக்குத் தோற்றுகிறது. அப்படியானால் நீ உன் சித்தவிர்த்திகளை தைரியத்தாலும் பொறுமையினாலும் அடக்கிவருகிறாயென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது."

"அப்படி இல்லை," என்று விடையுரைக்கலாயினள் இந்துலேகை, "நான் சொன்னதை நீ தெரிந்துகொள்ளவில்லை. மேலும் நீ சொன்ன புஷ்பதிருஷ்டாந்தம் சரியென்று எனக்குத் தோற்றவில்லை. அதைவிட மேலான ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துச்சொல்லி என் கருத்து இன்னதென்று உனக்கு விளக்கிக்காட்ட முயல்வேன். நான் விவாகப்பருவமுள்ள வனிதையென்றும் சுந்தரவடிவமுள்ள ஒரு யௌவன புருஷனைக் கண்டேனென்றும் வைத்துக்கொள்வோம். அப்படி நான் கண்ட புருஷன் எனக்குத் தக்க நாயகனாவானென்று எனக்குத் திருப்திகரமாய் நிச்சயமுண்டாகிறவரையில் அவனது வடிவத்தின்மேல் என் சிந்தையைச் செல்லவிடமாட்டேன். ஆகவே என் சித்தவிருத்தியானது ஆரம்பத்திலேயே அவ்விஷயத்தில் வியாபரியாததாகையால், அப்படிப்பட்ட சித்தவிருத்தியால் எனக்குக் கெடுதியொன்றுமுண்டாகாதபடி தைரியத்தின் துணையை அபேக்ஷிக்கும்படியான பிரமேயமே உண்டாகாது. முதலிலேயே என் சித்தவிருத்தி அந்த விஷயத்திற் செல்லாது. அதுபோலவே, நியாயமாக எந்த தனத்தை சம்பாதிக்க என்னாலாகாதோ அந்த தனத்தையடைய நான் கனவிலும் கருதேன். சிலபேருக்குப் பிறவி முதற்கொண்டே இப்படிப்பட்ட மனோதர்மம் அமைகிறது; மற்றவர்களின் விஷயத்திலோ அப்படியில்லை. அதனால் அவர்கள் கிட்டும்பொருளிலும் கிட்டாப்பொருளிலும் வேண்டும்பொருளிலும் வேண்டாப்பொருளிலும் ஒரேவிதமாக மனதைச் செலுத்திக் கஷ்டப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்குத் திறமையும் தைரியமும் புத்தியும் இருக்கும்பக்ஷத்தில், அவர்கள் மனதை யடக்கி அமைதியடைவர். அதுபோல, மாதவா, நான் பின்சொன்ன வகுப்பில் நீ சேர்ந்தவனாயிருந்து, கஷ்டசாத்தியமாகவோ அசாத்தியமாகவோ உள்ள காரியமொன்றிலாவது தலைகீழாய் மாட்டிக்கொண்டிருக்கும்பக்ஷத்தில், உன் புத்தி சாமர்த்தியத்தால் உன்மனதை அடக்கிவைக்க முடியாதா? அவ்வாறு அடக்கிவைக்க உன்னால் முடியுமானால், உனக்கு உன்மனம் ஸ்வாதீனமாய் விட்டதாகும்."

"நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது," என்று சொல்லலுற்றான் மாதவன், "ஆனால் இதைப் பற்றி இனி நான் உன்னுடன் வாதாடப்போகிறதில்லை. முன்போல் உன்னுடன் தர்க்கம் பண்ணிக்கொண்டிருப்பதில் எனக்கு மனமில்லை."

"சதுரங்கமாடுவதிலல்லவோ உனக்கு இஷ்டமில்லையென்று இதுவரையில் எண்ணியிருந்தேன்," என்று கூறலாயினள் இந்துலேகை, "இப்போது என்னோடு பேசுவதில்கூட உனக்கு விருப்பில்லையென்பதை யறிய எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது."

"இந்துலேகை, நீ ஏன் என்னுடன் இப்படி பேசுகின்றாய்? இவ்வுலகத்தில் நானே மகா நிர்ப்பாக்கியவானென்று எனக்குத் தோற்றுகிறது. ஒருவனுடைய மனதில் வேதனையானது புகுந்து துளைக்கும்போது அவன் நிர்ப்பாக்கியனாய்த் துயரப்படாமல் என் செய்வான்?"

"அந்த வேதனையை நீக்கிக்கொள்ள வகைதெரியாமலிருப்பதுதான் நிர்ப்பாக்கியம்" என்றாள் இந்துலேகை.

"இந்துலேகை, என் வேதனையை எப்படி போக்கிக் கொள்வேன்? அதைத் தெரிந்து சொல்வையானால் பெரிய உபகாரமாயிருக்கும்" எனக் கெஞ்சிக்கேட்டுக்கொண்டான் மாதவன்.

"அந்த வேதனை இன்னதென்று எனக்குத் தெரிந்தால் அதைப்போக்க வழிதேடுவேன்" என்று மந்தஹாஸத்துடனே மொழிந்தாள் இந்துலேகை.

"அப்படியானால் சொல்லுகிறேன்" என்றான் மாதவன்.

"இனி உன் ஆட்டத்தை ஆடு. இதோ பார் மாதவா, உன் குதிரையை நான் வெட்டப்போகிறேன். நீயோ ஒரு காயை கையில் பிடித்துக்கொண்டும் துக்கத்தைப் பற்றிப்பேசி மனோவிசாரப்பட்டுக்கொண்டும் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறாய். அதை எல்லாம் விட்டுவிட்டு, விளையாடுவோம். உன் குதிரையைத் தப்பவைக்க உன்னாலாகுமோ? பார்ப்போம் உன் சாமர்த்தியத்தை" என்றாள் இந்துலேகை.

"அது போகட்டும்" என்றான் மாதவன். "இப்போது ஆட என்னாலாகாது. ஆட்டத்தில் என் மனம் செல்லவில்லை. கொஞ்சநேரம் இந்த ஸோபாவிலே சாய்ந்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே அதில் அமர்ந்தான்.

அப்போது இந்துலேகை எழுந்து சிரித்துக் கொண்டே சாகுந்தல நாடகத்தை யெடுத்து வந்து மறுபடியும் உட்கார்ந்து வாசிக்கத் தொடங்கினாள்.

"அது என்ன புஸ்தகம்?" என்றான் மாதவன்.

"சாகுந்தலம்"

"எந்த பாகம் படிக்கிறாய்?"

"உனக்கு உரக்க வாசித்துக் காட்டட்டுமா?"

"தயவு செய்து அப்படியே வாசிப்பாய்"

(இன்னும் வரும்)

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மையும் தோற்றமும்!—ஒரு மனிதனுக்கு பன்றிகள் போல உறுமும் திறம் நன்றாக இருந்தது. பன்றிகள் மேய்ந்து கொண்டிருக்கும் இடம்போய் அவன் உறுமினால் தமது கூட்டத்தில் ஏதாவது ஒருபுதிய பன்றிதான் வந்துவிட்டதோ என்று அவைகள் நாற்புறமும் சுற்றி வெருண்டு நோக்குமாம். அவன் கீர்த்தி உலகெங்கும் பரவினதும் தன் திறமையால் அவன் பணம் ஸம்பாதிக்க தேச ஸஞ்சாரம் செய்யத் தொடங்கினான். ஓர் ஊரில் இவன் உறுமிப் பணம் ஸம்பாதித்துக் கொண்டிருக்கையில் அவ்வூர்வழியாக ஒருமஹான் தமது சிஷ்யர்களுடன் போய்க் கொண்டிருந்தார். அவன் பணம் ஸம்பாதிக்கும் வழியைக்கண்டதும், அதன் மூலமாகத் தமது சிஷ்யர்களுக்கு நல்ல விஷயம் ஒன்றை போதிக்கலாமென்று அவருக்குப்பட, உடனே அங்கே ஒரு பந்தல் ஒன்றைத் தயார் செய்து 'இந்த வேறிடங்களில் கேட்கக் கூடிய உறுமலைவிடச் சிறந்த உறுமலை கேட்கலாம். இதற்கோ காசு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை இஷ்டமானவர்கள் வரலாம்' என்று தமது சிஷ்யர்களால் தண்டோராப் போடுவித்தார். ருசிகண்ட அவ்வூர் ஜனங்கள் மிகுந்த ஆவலோடு மஹானது பந்தலில் வந்து கூடினார்கள். அவரோ நிஜமான பன்றி ஒன்றை வாங்கிவந்து அதன்காதைத் திருகிக் கத்தும்படி செய்தார். உண்மையில் இது மற்றையவன் உறுமலைவிட மிக நேர்த்தியாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால் ஜனங்கள் எல்லோரும் சீ! இதுதானா! இதை நாம் தினம் கேட்கவில்லையா, இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது' என்று இகழ்ந்து பேசிவிட்டுப் போய்விட்டனர். மஹான் எவ்வளவோ தண்டோராப்போட்டுப் பாடுபட்டுப் பார்த்தார், அவர் பந்தலுள் ஒருமனிதன்கூட வரவில்லை. ஆனால் போலிப்பன்றியின் பந்தலில் கூட்டம் எப்பொழுதும் விடாது கூடிக்கொண்டே இருந்தது. பந்தல் காலியானதும் மஹான் தமது சிஷ்யர்களைச் சூழ இருக்கும்படி சொல்லி, 'பார்த்தீர்களா! இப்பொழுது செய்த சோதனையில் ஓர் அற்புதம் வெளியாகின்றது. மனிதர்களுக்கு உண்மை வஸ்துக்களில் இஷ்டமில்லை, போலித்தோற்றங்களில் அதிகப் பிரீதி. இதனால்தான் போலி இன்பங்களாகிய உலக இன்பங்களைக் கட்டிக்கொண்டு அவைகளை விட்டு நீங்க மனம்வராது அவர்கள் அவைகளில் கிடந்து உழன்று வருந்துகிறார்கள். மேன்மை அடைவது கஷ்டமல்ல. அதற்கு எந்த வெளிவஸ்துவின் ஸஹாயமும் கொஞ்சமேனும் வேண்டியதில்லை. அதை அடைய வேண்டுமென்ற மனப்பூர்வ அபேக்ஷைதான் வேண்டும். நாம் எவ்வளவுதான் பேரின்பத்தின் சிறப்பை எடுத்துரைத்தபோதிலும் அதில் ருசி உள்ளவர்கள் தவிர வேறொருவரும் நம்மை அணுகார். இதைப்பற்றி சிந்தியுங்கள்' என்றார்.

திதிக்ஷை அல்லது ஸஹித்தல்.—இராவணன் முதல்நாம் இராமரை எதிர்த்துப் போர்செய்தபொழுது மாலைக்காலத்தில் நிராயுதபாணியாகத் தோல்வியடைந்து இராமர் முன்பு வெட்கினான். அவனைக் கொல்லும் திறம் இராமருக்கு இருந்தபோதிலும் அவர் அவனைநோக்கி 'இராவணா! நீ சிறந்த வீரனைப்போலச் சண்டைசெய்தாய். உண்மைதான். அது என்னிடத்தில் பலிக்காது அப்பா! இப்பொழுதே உன்னை நான் கொன்றாலும் கொல்லலாம்; ஆனால் நான் உன்னைக் கொல்வதில்லை. இதுவரையில் நான் உன்னை எவ்வளவோ தரம் ஸீதையைக் கொண்டுவந்து விட்டுவிடு அப்படியானால் சண்டையை நிறுத்தி விடுவேன் என்று கேட்டிருக்கிறேன். இப்பவும் நீ நல்லவழிக்குவர இனி ஒருமுறை அவ்வாறே செய்யும்படி உன்னை நான் கேட்கிறேன். இதைப் பற்றி நன்றாய் யோசித்துவிட்டு நாளைக்குவா. என் சொல்படி நடப்பாயானால் உனக்கு ஒரு குறைவும் வாராது. இல்லாவிடில் நான் உன்னைக் கொன்றே தீரவேண்டும். பின்பு என்னால் வேறொன்றும் செய்யமுடியாது' என்று நயமாகச் சொன்னார். இந்த மொழியில் காணப்படும் சித்த ஸமாதானம் ஜர்மனைவ யி ந்து ஒழிவித அன்பு ஆகிய இவை நமோ உண்மையான திதிக்ஷையின் ஸ்வரூபம். தன் பிராண நாயகியாகிய ஸீதை விஷயத்தில்கூட கேவலம் ஸ்வபக்ஷம் கருதி கோபதாபாதிகளால் விரோதிகள் மேல் ஆக்கிரகத்தோடு இராமர் பாய்ந்தவரல்ல. ஆனால் அந்தத் தருணத்தில் தாம் செய்ய வேண்டிய கடமையை ஸரிவர நடத்தி முடிப்பதற்கே இராவணனை அவர் கொன்றவர். இராவணன் கொடியவன், அவனைக் கொன்று தமது மனமாரவேண்டும் என்ற ஆதங்கத்தால் அவர் அவனைக் கொன்றவர் அல்லர். அந்த ஸந்தர்ப்பத்தில் தாம் செய்யவேண்டியதை மனப் பரபரப்பின்றி அவர் செய்து முடித்தவரே ஒழிய வேறல்ல. செய்ய வேண்டியதை மனக்குழப்பமின்றி செய்வது திதிக்ஷையின் ஸ்வரூபம்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
LADIES' PAGES

"மலரோடு சேர்ந்த நாரும் பெருமை அடைகிறது. செந்தாமரை மலர்போன்ற என் கணவன் பதம் சேர்ந்த எனக்கும் பெருமை வரும் அவரை அடைவதினால்தான் எனக்குப் பெருமை. அவரை ஸ்துதிப்பதால் தான் எனக்கு மஹிமை. ஆனதினால் நான் எவருடைய குணவிசேஷத்தால் பெருமை அடைகிறேனோ, எவருடைய மஹிமையினால் மஹிமை அடைகிறேனோ, எவருடைய கடாக்ஷத்தால் ஆனந்தமடைகிறேனோ, எவருடைய ஆனந்தத்தால் இன்பமேவீடு அடைகிறேனோ, எவருடைய முகதர்சனத்தால் ஆத்மலாஞ்சை அதிகரிக்கிறதோ, எவரைக்கண்டதும் ஒன்றும் தோன்றாது ஆநந்த பரவசமாகி விடுகின்றேனோ, அப்பேர்ப்பட்ட என் பிராணநாதனுக்கு என் மனப்பூர்ணமாகவணங்கினேன் இனி எனக்கேது குறை'' என்றானந்தமடைவது தான் குலப்பெண்டிரது குணம்

* * *

"இராம நாமமே கற்கண்டு; அதன்ரஸம் அறியாதவன் கல்குண்டு"என்று பாகவதர் நேற்றுப்பாடினார் இராமபக்தியில் வாழ்பவனுக்கது நிஸ்சயமாகத்தான் இருக்கும்'' என்றாள்ஒருவள். "ஏனடி அப்படிசொல்கிறாய்'' என்றாள் மற்றொருவள். ஏனென்று கேட்கிறாய். எனக்கென் கணவனைத் துதிக்கும் விஷயத்தைக் காட்டிலும் இனிமையாகிய வஸ்து ஒன்றும் ஏற்படவில்லை. கற்கண்டு, சர்க்கரை இவற்றின் இனிமை நாக்கோடு நின்றுவிடுகிறது. அதுவோ என் உள்ளம்பூரிக்க என் உடம்பெலாம் இனிக்கச் செய்கிறது. இது உனக்குத் தெரியவில்லையே'' என்றாள். "ஆனால் நானுமந்த இனிமையை அடையப்பெறுவேன்'' என்று மற்றவளும் உறுதிசெய்துகொண்டு நடக்கலானாள். அப்படியே ஒவ்வொரு பெண்ணும் நடப்பாளாக.

* * *

"கெடுவான் கேடுநினைப்போன்'' என்பது ஒருபழமொழி. கெட்ட எண்ணங்கள் மனதைக்கெடுத்துவிடும் மனது கெட வாழ்வு கெடும். வாழ்வு கெட்டு வாழப் பிறந்தவரொருவருமில்லை. இது பெண்களுக்கொருபுத்தி. பெண்களுக்கு வாழ்வு தமது கணவரோடு மனமொத்து வாழ்வது தான். அவ்வாழ்வு கெட்ட எண்ணங்களினால் நாசமடையும். கெட்ட எண்ணங்களை ஒழித்து வாழ்வது தான் வாழ்க்கைக் கழகு பெண்களிதை சற்றுகவனிப்பாராக.

* * *

"பன்றியோடு சேர்ந்தால் கன்றும் மலம் தின்னும்'' என்பதொரு முதுமொழி. கெட்டவர்களோடு சேர்ந்தால் கெட்டகுணம் படியுமே ஒழிய நற்குணமொருநாளும் வரமுடியாது. கெட்டவர்களோடு சேர்வதைக் காட்டிலும் இழிவான செயல் ஒன்றுமில்லை. தன்னுடைய நன்மையைக் கெடுத்துக் கொள்ள இதைக்காட்டிலும் சுலபமான வழியில்லை. கேட்டவர் சேர்க்கையை விட்டு நற்குணங்களடைவதுதான் பெண்டிர்க்கு அழகு.

* * *

பொறுமை உலகை ஆளும் பொறுமையாலேதான் செய்யமுடியாத காரியமுஞ் செய்யமுடியும். ஆலோசனையும் யுக்தியும் பொறுமையினாலேதான் உண்டாகிறது மனைவிக்கும் தனது தர்மத்தை நடத்த வேண்டுமென்றால் பொறுமையால் தான் உண்டாகும். பொறுமைவரும் பெருமைவர புகழுண்டாகும். புகழடைவதும், பெண்டிர்களுக்கு தம் கணவன் பெருமை அடைவதில்தான் உண்டாகும். ஆகையால் பொறுமையை ஆபரணமாகக்கொண்டு தமது கணவரது பெருமையை வளரச்செய்வது தான் பெண்டிர் தர்மமென்க

* * *

"ஆ! என்றால் அஸத்ய மொழியு'' மென்றார் ஒருவர். "யார்?'' என்றார் மற்றொருவர். "குலமுங் குணமுங் கலந்து, கற்பெனும், ஆயுதங் கைக்கொண்ட பெண்கள்'' என்றார் முதல்வர். "நான் நம்பவில்லை' என்றார் இரண்டாவதவர். "தெரியாவிடில் திருவள்ளுவர் மனைவியைப் போய்ப்பாரும்'' என்றார் முதல்வர். அப்படியே அவர் திருவள்ளுவர்வீடு சென்றார். போனபோது திருவள்ளுவர் பழைய சாதம் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். இரண்டாவதவர் வந்ததையும் திருவள்ளுவர் கண்டார். வந்தவரெண்ணமுழுதும் தம் ஞானதிருஷ்டியாலறிந்து, "அன்னம் மிகச்சுடுகிற''தென்று கூச்சலிட்டார். அவர்மனைவி உடனே ஒருவிசிறி எடுத்து அன்னத்தைவிசிறினாள். அன்னத்திலிருந்து ஆவி குளிர்ச்சியடைந்து புகை வடிவாகி கண்ணிற்கு தெரிந்தது. முதல்வர்கண்டு அதிசயித்து பழஞ்சோற்றில் ஆ, ஏதென்றார். வள்ளுவர் இது புதிய சோறு என்றார். ஒன்றும் தெரியாமல் மதிமயங்கி அவர்க்கும் அவர் மனைவிக்கும் தெண்டனிட்டு இரண்டாவதவர் சென்றதாக கர்ணபரம்பரை. எண்ண ஒருமித்திருப்பதில் திருவள்ளுவரும் அவர் மனவியும் போல் எவரும் இருப்பாராக!

* * *

"ஸந்நியாஸிதான் உலகத்திற்கு மிகவும் உபயோகமாய் இருப்பவன் என்று சிலர் சொல்லுவார். அது எம்மட்டோ, எனக்கு தெரியா''தென்றான் ஒருவன். "ஏன்?'' என்றான் மற்றவன். "ஸந்நியாஸிகளும் கிரஹஸ்தர்களுடைய உதவியால் தான் வாழமுடியும். அவ்வுதவி இன்றி ஸந்நியாஸாஸ்ரமம் பெருமை அடைய முடியாது. பலபேர்க்கு பலவிதத்திலும் உதவி ஆகிறவர் கிரஹஸ்தாசிரமத்தில் இருப்பவர்கள்தான்'' என்றான் முதல்வன். "ஆமாம்! ஆமாம்! அதுவும் ஸரியான பத்நிகளிருந்தால்தான் முடியும்'' என்றான் மாற்றான். இவ்விருவர் பேசியதும் பெண்களுடைய நன்மைக்காகத்தான். அதை அவர் சற்று கவனிப்பாராக!

வா. சேஷகிரி சாஸ்திரி.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

பாட்டின் குணம்.—பாட்டிற்கு காதை ஸந்தோஷப்படுத்தும் சக்தி உண்டென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அதின் மூலமாக அதற்கு மனதை ஏகாக்கிரப்படுத்தும் சக்தியும் உண்டு. நல்ல பாட்டைக்கேட்டால் நாம் மெய்மறந்து பரவசமாகிறோம். பாட்டை சாஸ்திரமாகக் கருதிலோ அதற்கு நமது புத்தியைக் கூர்மையாக்கும் சக்தியும் உண்டு. இவ்வளவு சிறப்பு வாய்ந்த பாட்டிற்கு வேறொரு விசேஷ சக்தி இருக்கின்றதென்று இக்காலத்து பிரகிருதி சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். சிற்சில ராகங்களுக்கு சிற்சில வியாதிகளை குணப்படுத்தும் சக்தி இருக்கிறதாம். இரண்டொரு வைத்யர்கள் தங்கள் பாட்டையே மருந்தாகக்கொண்டு சிற்சில வியாதிகளை ஸ்வஸ்தம் செய்திருக்கின்றனராம்.

* * *

ஓர் புத்திமதி.—அதிகமாக படிப்பு, எழுத்து, தையல் முதலிய நுட்பவேலை செய்பவர் பத்துநிமிஷத்திற்கு ஒருதரம் தமது தலையைத் தூக்கி தூரவஸ்துக்களைச் சற்றுப் பார்க்கவேண்டும். இதனால் முற்கூறிய வேலைகளால் அதிகமாகத் தாக்கப்பட்டிருக்கும் கண்ணுக்கு ஓர்வித சிரம பரிஹாரம் உண்டாகும். கண்வியாதிகள் முதலியன அதிகமாக உண்டாகி வருத்தம் தரமாட்டா. இவ்வாறு செய்யாது ஸதா உற்றுப்பார்ப்பவர்களுக்கு சீக்கிரம் கண்வியாதி வரும்.

* * *

ஜீர்ண விஷபத்தைப்பற்றிய ரகஸியங்கள்.—ஆகாரம் எளிதில் ஜீர்ணமாவது ஸாதாரண ஸமயங்களில் அவனவன் மனோநிலையைப் பொருத்திருக்கிறது. இப்பொழுது வந்திருக்கும் மாம்ஸபேதன வெளிச்சத்தால் (x-rays) ஒரு ஜந்துவின் வயிற்றி ஜீர்ணத்தொழில் நடப்பதை பிரத்யக்ஷமாகக் காணலாம். அவ்வாறு பரிசோதனை செய்ததில் ஜந்துவுக்குபயம் அல்லது அதிக வேலை சாப்பிட்டபின்பு ஏற்பட்டால் ஜீர்ணத்தொழில்நின்றுவிடுவதைக் கண்ணுறக் காணலாம். இவ்வாறேதான் மனிதன் நிலையம்.

* * *

வர்ணவெளிச்சங்களின் விசேஷங்கள் — சில வர்ணவெளிச்சங்களுக்குச் செடிகளின் மேல்தாக்கி அவைகளை செழிக்கச் செய்யும் சக்தி இருக்கின்றனவாம் சிகப்பு வெளிச்சத்தில் செடிகள் அதிவேகமாகவும் செழிப்பாகவும் வளருகின்றனவாம். நீல வெளிச்சத்தில் அவ்வளவு வேகமாக வளராவிட்டாலும் அதில் செடிகள் சீக்கிரத்தில் கெட்டுப்போவதில்லை. நீலவெளிச்சத்தில் பழங்கள் வெகுநாள் கெடாது வைத்திருக்க முடியும்போலத் தோன்றுகின்றது

நோக்கமும் நடத்தையும்.—இந்த விஷயத்தைப் பற்றி அடையார் தியஸாபிகல் ஸங்கத்தில் பெஸன்ட் அம்மாள் நவம்பர் மாதம் 22-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிரஸங்கம் செய்தாள். அந்த அம்மாள் கூறிய விஷயங்கள் பின்வருவன:—மனிதர்களின் நோக்கம் மோக்ஷம். அது உலகத்தைத் துறத்தலால் உண்டாவது என்பது ஸாதாரண ஹிந்துக்களின் நம்பிக்கை. இந்த எண்ணம் ஸ்வயநயம் கருதும் எண்ணம். இதனால் பரதகண்டத்திற்கு கெடுதிகள் உண்டாயிருக்கின்றன. பறையர்களை படித்தவர்களாகிய ஹிந்துக்கள் கவனியாதுவிட்டதால் கிறஸ்தவ பாதிரிகள் அவர்களை நாகரீகப்படுத்தி இந்து ஜாதிக்கு விரோதமாக நிற்கும்படி செய்கிறார்கள். ஆதலால் உலகைத் துறந்து ஓடி மோக்ஷம் அடைய எண்ணுபவர்களால் நமது தேசத்திற்கு நன்மையே இல்லை. இம்மாதிரியான மோக்ஷமானது நமது சிறுவர்களுக்கு மதவிஷயத்தில் நம்பிக்கை உண்டாகாம விருக்கும்படி செய்து அவர்களை எளிதில் நாஸ்திகர்களாக்கி விடுகின்றது. ஆதலால் இந்த மோக்ஷம் உண்மையானது அல்ல. மேன்மையை அடைந்து உலகத்தவரை மேன்மை அடைய ஸஹாயம் செய்துகொண்டிருப்பதே உண்மையான மோக்ஷம். இதைத்தான் ஜனகர் கிருஷ்ணபகவான் முதலியோர் மோக்ஷமாகக் கொண்டிருக்கின்றனர். இம்மாதிரி உலகத்தார் நன்மைக்கு பாடுபடாது மோக்ஷம் அடைய எண்ணக்கூடாது. இப்படிப் பலத்தி லிச்சைவிட்டு பரோபகாரத்தில் புகுவது மனிதன் நோக்கமாகிய மோக்ஷம்.

* * *

வைராக்கியமும் மோக்ஷமும்.--மோக்ஷம், பரோபகாரம் முதலிய விஷயத்தைப்பற்றி பெஸன்ட் அம்மாள் கூறிய விஷபத்தைப்பற்றி கும்பகோணம் ஸ்ரீமான் ஸுந்தரராமய்யர் அவர்கள் பின்வருமாறு விமர்சை செய்திருக்கிறார்:-மோக்ஷத்தைப்பற்றிய கொள்கை எவ்வாறு நமது சிறுவர்களை நாஸ்திகர்களாக்கும்? அதை அடைவதற்கே பரோபகாரரூபமான நிஷ்காம்யகருமம் அவசியம் என்று சாஸ்திரங்கள் கூறியிருக்கின்றனவே! ஆனால் இது மோக்ஷமார்க்கத்தில் முதல்படி. இதுதான் மனிதன் நோக்கம் என்று பெஸன்ட் அம்மாள் அபிப்பிராயப்படுவது அவ்வளவு ஸரியாகத் தோற்றவில்லை. இப்பொழுது நமது பரதகண்டத்தில் ஏற்பட்டிருக்கும் ஜாதிய ஒற்றுமை ஸம்பந்த

மாக உண்டாயிருக்கும் புதிய பழக்கமுடைய சிறுவர்கள் அநேகர்களுக்கு அம்மாள் கூறியதே முடிவான நோக்கமாகத் தோற்றலாம். இந்தப் பரோபகாரத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளதால் கீதைக்கு இக்காலத்தில் மிகுந்த பிராபல்யம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த கீதைப்படியே இந்தப் பரோபகாரம், மோக்ஷமார்க்கத்தின் முதல்படியே ஒழிய வேறில்லை. பெஸண்ட் அம்மாள் நமது சிறுவர்களுக்கு பரோபகாரத்தில் உண்டாகும் விருப்பையும் மோக்ஷவிஷயத்தில் உண்டாகும் வெறுப்பையும் ஒருங்குசேர அனுமோதிப்பது, ஒருவனை நோக்கி "ரயிலேறப்பா! ஆனால் நீ போகவேண்டிய ஊர்போய்ச் சேரவிரும்பாதே" என்று கூறுவதுபோல இருக்கிறது. மேலும் பெஸண்ட் அம்மாளுக்கு மோக்ஷத்திற்கும் வைராக்கியத்திற்கும் உள்ள பேதம் நன்றாய் விளங்கி இருப்பதாகக் காணப்படவில்லை. ஆபாஸ வைராக்கியங்கள் அகங்காரத்தின் மாறுபாடு என்பது சாஸ்திரக்கோட்பாடு. இது மோக்ஷ காரணமாகாது. உண்மை வைராக்கியம் மோக்ஷ காரணம், அம்மாள் சொல்வதுபோல அது குற்றங்கூறத்தக்கது அல்ல. இது வந்து விட்டவன் காஷாயதாரியாக இருந்தாலும் இருக்கலாம், கிரஹஸ்த வேஷத்தோடு இருந்தாலும் இருக்கலாம். உலகத்தவரை மேன்மைப்படுத்தாது மோக்ஷம் அடையக் கருதல் ஸ்வயநயம் கருதல் என்று அம்மாள் சொல்லுகிறாள். கர்மசேஷம் உடைய ஞானியாலே மாத்திரம் தான் இந்தத் தொழிலில் பிரவிருத்திக்க முடியும். கர்மசேஷம் அற்று பந்தத்தை உடைத்துக் கொண்டு வெளி ஏறும் ஞானிகளை முற்கூறியபடி கட்டுப்படுத்த யார் வல்லவர்? அவர்கள் அபூர்வமாகக் காணப்படுவர். இப்பரதகண்டத்தில் மாத்திரந்தான் இம்மாதிரி பரம முக்தர்கள் உண்டு. இவரது நிலையை ஸதாசிவ பிர்ம்மயதீந்திரர் தமது ஆத்மவித்யா விலாஸத்தில் வெகு விரிவாக விவரித்துள்ளார். நமது புண்யபூமியிலிருக்கும் அதிகாரிகளைத் தவிர மற்றையவர்களால் இது அனுமோதிக்கப்படவில்லை, என்று நாம் வீணாக வருத்தப்படக்காரணம் இல்லை. இதன்மேன்மை அவர்களுக்கு விளங்குவது மிகக்கஷ்டம்.

* * *

குற்றங்கூறல்:—இவ்வாறு எழுதிய விஷயங்களை திருவனந்தபுரத்திலிருந்து கிருஷ்ணதாஸ் என்ற பெயருடையவர் ஒருவர் பலவிதமாகப்பின் வருமாறு குற்றங் கூறியுள்ளார்.

1. பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கும் உபந்நியாஸத்தின் சுருக்கத்தை வைத்துக்கொண்டு உபந்யாஸம் செய்தவர்களைக் குற்றங்கூறல் அழகன்று. ஸ்ரீமான் ஸுந்தரராமய்யர் அவர்கள் சொல்லுவது போல நமது சாஸ்திரவிஷயத்தில் பெஸண்ட் அம்மாள் அவ்வளவு கேவலமான அஞ்ஞானம் உடையவள் அல்லள்.

2. எல்லா ஞானிகளுக்கும் மேலான ஞானியாகிய கிருஷ்ண பகவானே கர்மபந்தாதிகளில் உட்படாது லோகோபகாரார்த்தம் பாடுபடுவதால், கர்மசேஷம் அற்ற ஞானியால் அவ்வாறு செய்வது அஸாத்தியம் என்று எவ்வாறு சொல்லலாம்? மேலும் உலகத்திற்கு ஞானியின் ஸஹாயம் அவசியம் வேண்டியதாக இருக்கிறது. அப்படி இருக்கையில் அவன் எவ்வாறு லோகோபகார நிலையிலிருந்துத் தப்புவித்துக் கொண்டுபோய் விடலாம்?

3. இந்தியாவைவிட்டு வெளியில் உள்ளவர்களுக்கு மோக்ஷ நிலை விளங்காதா? அதிகாரிகள் (பிராம்மணர்கள் அல்லது இக்காலத்திய ஆபாஸ பிராம்மணர்கள்) தவிர மற்றவர்களுக்கு இந்த நிலை தெரியவாகாதா? கடவுளுக்கும் இவ்வளவு பக்ஷபாதமா? அவர் அவ்வளவு பக்ஷபாதியல்ல வெளி ஸமயசேர்ந்தவர்களாகிய பெஸண்ட் அம்மாள், டியூஸன், இமர்ஸன் மஹமத், கிறஸ்து இவர்களுக்கும் இன்னும் நம்முள் தாழ்ந்தஜாதியார் அநேகருக்கும் இந்த நிலை தெளிவாக விளங்கி இருக்கிறது என்பதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. ஆதலால் அய்யர் அவர்கள் இவ்வளவு ஆக்குரோஷத்தோடு சூத்திரர் போன்ற பிறஜாதியார்களை நிந்திக்க வேண்டியதில்லை.

4. யூதர்கள் தம்மை கடவுளால் தேடி எடுக்கப்பட்ட அதிகாரிகள் என்ற அகங்காரத்தால் இருந்த இடம் தெரியாமல் இக்காலத்தில் சிதறிப்போய் துக்கத்தை அநுபவிக்கிறார்கள். நமது புண்யபூமியில் பிராம்மணர்களுக்கும் ஜாதி அகங்காரம் வெகு நாளாக இருக்கின்றது. இதனால் பிராம்மணர்கள் கதியும் என்ன ஆகுமோ? அவர்களுக்கு ஈச்வர கிருபையால் அந்த அகங்காரம் நீங்க அவர்கள் மேன்மையை அடையட்டும்.

* * *

மறுமொழி.—கிருஷ்ணதாஸர் கூறியுள்ள குற்றங்களுக்கு ஸ்ரீமான் ஸுந்தரராமய்யர் அவர்கள் பின்வருமாறு மறுமொழி கூறியிருக்கிறார்.

1. பத்திரிகைகளில் வெளிவரும் விஷயங்களை வைத்துக்கொண்டு தான் வெளியூர்களில் நடந்த உபந்யாஸாதிகளைப்பற்றி விமரிசை எழுதவேண்டும். வேறு இந்த உபந்நியாஸாதிகளை அறியத் தக்க ஆதாரங் கிடையாது.

2. கிருஷ்ணர் கீதையில் தம்மை ஈசுவரனைச் சொல்லிக் கொள்ளுகிறார். உலகம் இருக்கிறவரையில் அவருக்கு ஜகத்வ்யாபாரம் உண்டு. அவர் லோகோபகாரார்த்தமாக அவதாராதிகள் எடுத்துத் தீரவேண்டும் ஸாதாரண ஜனங்களுக்கு கர்மசேஷமிருப்பதால் அவர்களும் மாறி மாறி ஜன்மம் எடுத்துத் தீரவேண்டும். பரம முக்தர்களுக்கோ கர்மசேஷமே கிடையாது. ஆதலால் அவர்களுக்கு ஜகத்வ்யாபாரமே கிடையாது. மறுஜன்மமும் கிடையாது.

3. சங்கராசாரிய ஸ்வாமிகள் சூத்திரர்களுக்கு ஆத்மஞானம் இதிஹாஸாதிகள் மூலமாக வரலாம் சுருதிமூலமாக அவர்களுக்கு அது வருவது அஸாத்தியம் என்று சொல்லி இருக்கிறார்.

4. ஜீவன் முக்த நிலை நமது புண்ய பூமியில் அதிகாரிகளைத்தவிர வெளியில் உள்ளவர்களுக்கு மேலானதெனத்தோற்றுவது அரிது. இப்படிப்பட்ட நிலையை வெளியில் உள்ளவர் சிறந்ததென அங்கீகரிப்பாராயின் நமக்கு மிகுந்த ஸந்தோஷம் தான். ஆதலால் ஜாதி அகங்காரம் முதலிய கிருஷ்ணதாஸரால் கூறப்பட்டுள்ள அவதூறுகள் என்னைத்தாக்க இடமே இல்லை

* * *

ஓர் எச்சரிக்கை.—முன் எடுத்துக்கூறியவைகளிலிருந்து பெரும்பாலும் இக்காலத்தவர்களுக்கு மோக்ஷம் அதற்கு முக்கிய ஸாதனமான வைராக்யம் ஆகிய இவைகளின் ஸ்வரூபம் இன்னது என்பது நன்கு விளங்கவில்லை என்று வெளியாகின்றது. ஆபாஸ வைராக்யத்தால் அநேகர் இக்காலத்து ஸந்யாஸிகளாகித் தத்தளிப்பதை நோக்கி இக்காலத்தில் படித்தவர்கள் வைராக்யம் ஸந்யாஸாசிரமம் இவைகளைப் பழிக்கத் தொடங்குகின்றனர் போலக் காணப்படுகிறது. ஒருவன்மேலிருந்த கொசுவை அடிக்கப்போய் ஆளைக்கொன்ற கதையாக ஆபாஸ வைராக்யத்தின்மேலிருக்கும் கோபத்தை சில உபந்யாஸகர்கள் ஸந்யாஸம் மோக்ஷம் இவைகளின்மேல் வீணாகக்காட்டி பாபத்திற்கு ஆளாகின்றனர். இக்காலத்தில் எல்லா ஆசிரமும் சீர்குலைந்து கிடக்க என் கிரஹஸ்தர்களும் ஸந்யாஸிகளும் ஒருவரை ஒருவர் குற்றங்கூறிச் சண்டையிடவேண்டும். சாஸ்திரப்படி ஸந்யாஸம் கார்ஹஸ்தியத்தைவிட மேலான நிலை என்பதற்கு ஸந்தேகமில்லை. காலபலத்தால் நம்மால் உள்ளபடி அந்த ஆசிரமத்தை அனுஷ்டிக்கத் திறமில்லாவிட்டால் என் வீணாக அதன் ஆபாஸங்களை நோக்கி அந்தப் பரம ஆசிரமத்தைக் குற்றங்கூறி பரோபகாரத்தை அதற்கு மேற்பட்டதாகக் காட்டவேண்டும்? இவ்வாறு செய்வதால் நமக்கு என்னாளும் அந்த ஆசிரமம் ஸித்திக்காமல் போக மோக்ஷம் கிடைப்பது துர்லபமாகிவிடலாம் உண்மையான ஸந்யாஸமே மோக்ஷஸாதனம், பரோபகாரம் முதலிய மற்றைய எல்லா நிலைகளும் இந்த ஸந்யாஸத்திற்கு ஸாதனம். இந்த ஸந்யாஸத்தை நிலைநிறுத்தத்தான் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியார் அவதாரம் செய்தது உபந்நியாஸம் செய்பவர்களும் கிரஹஸ்தர்களும் ஸந்யாஸத்தை வீணே குற்றங்கூறாது அதன் மேன்மையை உள்ளபடி அறிந்து அந்நிலையில் இருக்கத் தமக்கு சக்தி இல்லாததால் தான் தாழ்ந்த நிலைகளாகிய பரோபகாரம் புரிதல் முதலியவற்றைப் பின் பற்றி இருப்பதாகத் தெரிந்துகொண்டு அடக்கத்துடன் இருப்பாராகில் நமது மதமும் நாடும் விருத்தி அடையும் என்பதற்கு ஸந்தேகம் இல்லை. இதுவே நாம் உபந்நியாஸர்களுக்கும் கிரஹஸ்தர்களுக்கும் இந்த ஸந்தர்ப்பத்தில் கொடுக்கும் எச்சரிக்கை.

"விவேக போதினி"

ஓர் முக்கிய அபிப்பிராயம்.

சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்:—"சிலமாதங்களாக வெளிவரும் விவேகபோதினி என்னும் பத்திரிகையிற் சில பகுதிகளைப் படித்துப்பார்த்தேன். மதஸம்பந்தமான விஷயங்களும், நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளியநடையில் எழுதப்பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால், பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்ப் பாஷாபிமானிகளாகிய பிரபுக்கள் இதனை ஆதரித்து, இதைப் பிரசாரஞ்செய்துவரும் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்."

புத்தக வரவு

BOOKS RECEIVED

1. பகவத்கீதை வெண்பா:—ம-ா-ா-ஸ்ரீ S. முத்துவய்யர் B.A. அவர்களால், மிகவும் இனியநடை எழுதப்பெற்றது ஓர் அருமையான புத்தகம்—நன்றாய் காலிகோபயின்டு செய்யப்பட்டிருக்கிறது.
விலை ரூபா 1—0—0

2. இந்து தேசாபிமானிகள் சரித்திரம்.—இதில் நமது இந்திய தேசாபிமானிகளாகிய பன்னிருவர் சரிதைகள், மிகவும் இனியநடையில் எழுதப்பட்டது.—சென்னை, மெஸ்லர்ஸ் கணேஷ் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டது.
விலை ரூபா 0—12—0

3. நதுவான பிராமணப் பெண்களின் விவாகம் சாஸ்திரீயமானது.—ம-ா-ா-ஸ்ரீ V. S. சீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய தொகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பு—சென்னை, எஸ்பிளனேட், மெஸ்ஸர்ஸ் G. A. நடேசன் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டது. விலை ரூ. 0—4—0

4. அமலாதித்யன் —அல்லது குர்ஜரத்து [illegible] சிளங் குமரன் —இந்த நாடகம் ஷேக்ஸ்பியரு மஹா கவி [illegible] 'ஹாம்லட்' என்னும் நாடகத்தை அனுசரித்து, சென்னை ஹைகோர்ட் வைக்கில் ம-ா-ா-ஸ்ரீ P. சம்பந்த முதலியாரவர்களால் இயற்றப்பட்டது. விலை ரூபா 1—0—0

5. அபிநயகீதங்கள்.—நீதிகதைகளுடனும், இயற்கைப் பாடங்களுடனும் பொருட்பாடங்களுடனும், படங்களோடு எழுதப்பட்டது. சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் உதவிபோதகர் ம-ா-ா-ஸ்ரீ P. வெங்கடேருமய்யர் அவர்களால் இயற்றப்பட்டது எலிமெண்டரி பாடசாலைகளுக்கு உபயோகமாகும்படி எழுதப்பெற்றது. விலை அணு 0—3—0

குறிப்பு.—இப்புத்தகங்களைப்பற்றி விரிவாய் அடுத்த சஞ்சிகையில் எழுதுவோம்.

ஏஜண்டுகள் தேவை.

நம்முடைய "விவேகபோதினி" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விளம்பரங்கள் வாங்கவும் ஏஜண்டுகள் தேவை. அவரவர்கள் சிரமத்துக்குத் தக்கபடி கமிஷன் அல்லது சம்பளம் கொடுக்கப்படும். தவிரவும் எங்களால் விற்கப்படும் எவ்வித சாமான்களிலும் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும். விபரம் எழுதித் தெரிந்துக்கொள்ளவும்.

மானேஜர்,

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மைலாப்பூர், மதராஸ்.

நம்மிடம்

கிடைக்கக்கூடிய சில அருமையான தமிழ்ப் புத்தகங்கள்

நம்முடைய சந்தாதார்களுக்கு மாத்திரம் குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படும்.

இராமாயண வினு விடை

இரண்டாம் பதிப்பு

ஸப்தி காண்டங்களும், இராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. விஸ்தரித்தும் ஒழுங்குபடுத்தியும் எழுதப்பட்டிருக்கிறது யாவராலும் மிகவும் அருமையான புத்தகமென சிலாக்கிக்கப்பட்டிருக்கிறது. அநேக பள்ளிக்கூடங்களில் மத சம்பந்தப்பட்ட பாட புத்தகமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணு 12.

'விவேகபோதினி' சந்தாதார்களுக்கு மாத்திரம் அணு 8.

ஸ்ரீமஹாபாரத வினு விடை

முதல் பாகம்—இதில ஆதி, ஸபா, ஆரண் விராட, உத்தியோக பர்வங்கள் அடங்கியது. வி[illegible]யங்கள் ஒன்றும் குறையாதபடி மிகவும் இனியசெ[illegible] தமிழ் நடையில் சிறுவர், சிறுமிகள்கூட படித்த தெரிந்து கொள்ளக்கூடிய வண்ணம் எழுதப்பட[illegible]ள்ளது. விலை அணு 1[illegible]

'விவேகபோதினி' சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணு [illegible]

ஆரியமத உபாக்கியானம்.

இதில் இதிஹாஸம் புராணம் முதலியவை[illegible]விருந்து எடுத்தெழுதிய 50 இனிய கதைகள் கொ[illegible]டது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதிை[illegible] நன்கு விளக்குகிறது. இப்புத்தகமும் அநேகம் ப[illegible]டசாலைகளில் பாடப் புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணு [illegible]

'விவேகபோதினி' சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணு 0 1[illegible]

'கிரிஸெல்டா'

அல்லது

'பொருமையுள்ள மனைவி.'

இப்புத்தகம் பெண்பாலர் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தி[illegible] ஒரு பெண் தன் கணவனிடம் நடந்துகொண்ட மி[illegible]வும் சிலாக்கிக்கத்தக்க மாதிரியை நன்கு விளக்கி காட்டி யிருக்கிறது. விலை அணு [illegible]

'விவேகபோதினி' சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணு [illegible]

சந்திரசேகரன்.—ஸ்ரீபங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீமஹேசகுமார சர்மா அவர்கள் பங்காளி பாஷையிலிருந்து மொழி பெயர்த்தது. இப்புத்தகத்தில் தெய்வபக்தி, குருபக்தி, பதிபக்தி, பித்ருவாத்ஸல்யம், புருஷதர்மம், ராஜநீதி, சாந்தம் தத்வார்த்தங்கள் எல்லாம் மிகவும் தெளிவாய் இனிய செந்தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 8.

'விவேகபோதினி' சந்தாதாரர்களுக்கு மாத்திரம் } அணா 6.

அருமையான தமிழ்ப்புத்தகங்கள்

விவேகானந்த விஜயம்	,,	ரூபா	1	4	0
மனுதர்ம சாஸ்திரம்	,,		2	4	0
ராமாயண ஸாரம்	,,		0	10	0
யசோதரகாவ்யம்	,,		0	8	0
சிவ மஹா புராணம்	,,		5	0	0
மஹாமஹம் அதன் மஹிமை	,,		0	4	0
கந்தபுராணச் சுருக்கம்	,,		0	10	0
வெனிஸ் வர்த்தகன்	,,		1	0	0
ரம்யனும், ஜொலிதையும்	,,		0	8	0
வாஸந்திகை	,,		0	8	0
ராஜராஜேஸ்வரி	,,		0	9	0
லலிதா அல்லது என்னிஷ்டப்படியே			0	10	0

போஜசரித்திரம்.—2-ம் பதிப்பு, மனதை கவரக் கூடிய 16 ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. மிகவும் இனிய நடையில் ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கில், T. S. நாராயண சாஸ்திரியார்களால் இயற்றப்பட்டது விலை ரூபா. 1 8 0

பண்டித நடேசசாஸ்திரியார் இயற்றியவை

பாலகாண்டம்	விலை	ரூபா.	1	12	0
அயோத்தியாகாண்டம்	,,	,,	3	0	0
ஆரண்யகாண்டம்	,,	,,	1	12	0
கிஷ்கிந்தகாண்டம்	,,	,,	1	12	0
சாந்திபர்வம்-முதல்பாகம் பிரம்மஸ்ரீ பாகவத சாமாசாரியாரவர்களால் இனிய நடையில் எழுதப்பட்டது.			2	0	0
இந்து பாகசாஸ்திரம்	விலை	ரூபா	2	0	0

மானிட மர்மசாஸ்திரம்.—தேகதத்துவங்களை பற்றியுள்ள ஸகலவித அருமையான விஷயங்களை தெளிவாய் இனிய நடையில் எழுதப்பெற்றது—படங்களுடன் கூடியது. ரூபா 5 0 0

நம்முடைய சந்தாதாரர்களுக்கு அறிவிக்கை.

சந்தாதாரர்களுக்கு எங்கள் சொந்தப்பதிப்புகளை விலைகுறைத்துக் கொடுப்பதுடன், இதரத்தமிழ்ப்புத்தகங்களிலும் ரூபாக்கு 1 அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி.

மைலாப்பூ.

The General Supplies Co.,

Publishers,

Book-sellers,

Stationers,

Rubber Stamp Makers,

Die-sinkers,

Direct Importers of High Class Fountain Pens and Fancy Stationery.

General Merchants and Commission Agents,

Mylapore, Madras

Branch at:–TRIPLICANE.

Undertake to supply goods of any description at the lowest rates possible and at short notice.

☞ ***Enquiries invited.***